Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

யாழ் நகரில் ஒரு வான்வழி நிலையம்




412, First Floor, Hospital Road, Jaffna.
(Adjoining Sangeetha Mobile Links)
Fly Line
Keethan - 0773 916 416
Tharshy - 0773 915 530

முரசு - 01 | திருவள்ளுவர் ஆண்டு 2042 | வைகாசி 14 சனிக்கிழமை | (28.05.2011) | பக்கங்கள் 16 | ஓசை - 241



சி.ஐ.ஏ.க்கு அனுமதி ஹிலாரி பாகிஸ்தான் விஜயம் (15)



முகத்தில் முகம் காண முடியாத தோற்றம் (11)




கெய்ல் விளாசலில் வென்றது பெங்களூர் (07)



ஓமந்தை வரை வந்துவிட்டது யாழ்தேவி (02)

# வடக்கு கிழக்கு மக்களுக்கு உரிமைகளை வழங்கத் தயார்

## யுத்த வெற்றிவிழாவில் ஜனாதிபதி பேச்சு



(கொழும்பு)

தேசிய ஒருமைப்பாட்டுடன் வட, கிழக்கு வாழ் மக்களுக்கான ஜனநாயக உரிமையினை வழங்குவதற்கு நாங்கள் ஒருபோதும் தயங்கவில்லை. இருப்பினும் பிரிவினைவாதக் குழுக்கள் கேட்பதை கொடுக்க நாங்கள் தயாராக இல்லையென ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்

சர்வதேசத்தைப் பயன்படுத்தி இந்த பிரிவினைவாதக் குழுக்கள் முன்னெடுக்கும் முயற்சிகள் எதுவும் சாத்தியமாகப் போவதில்லை. உள்வீட்டுப் பிரச்சினைகளை நாமே தீர்த்துக்கொள்வோம். அதில் வெளியார் தலையீட்டுக்கு ஒருபோதும் இடமில்லையெனவும் ஜனாதிபதி சுட்டிக் காட்டினார்.

காலிமுகத்திடலில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற யுத்த வெற்றி விழாக்கொண்டாட்ட நிகழ்வில் கலந்துகொண்டு மக்கள் மத்தியில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

"பழையகாயங்களை பெருப்பித்து மக்கள் மத்தியில் கலவரத்தை ஏற்படுத்த சில சக்திகள் (15ஆம் பக்கம் பார்க்க)

# யாழ்ப்பாணத்திற்கு நேரடி இந்திய விமான சேவை




(புதுடில்லி)

இந்தியா, இலங்கையுடன் புதிய இருதரப்பு ஒப்பந்தம் ஒன்றைச் செய்துள்ளதாக நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த ஒப்பந்தம் புதுடில்லியில் வைத்துக் கைச்சாத்திடப்பட்டுள்ளது. இரு நாடுகளுக்கும் இடையிலான விமானப் போக்குவரத்துகள் தொடர்பான ஒப்பந்தம் இது.

இந்த ஒப்பந்தம் இந்திய நகரங்கள் பலவற்றிலிருந்து கொழும்புக்கு விமான சேவைகளை நடத்துவதற்கு அனுமதியளிக்கிறது. இதுவரை கொழும்புக்கு விமான சேவைகள் இல்லாத நகரங்களில் இருந்தும் புதிய வழிகள் இயக்கப்படவுள்ளன.

இலங்கையின் தேசிய விமான நிறுவனமான ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ், தற்போது அதியுச்ச எண்ணிக்கையில் விமானங்களை இரு நாடுகளுக்கும் இடையே இயக்கிவருகின்றது. கொழும்பிலிருந்து வாரமொன்றுக்கு மொத்தம் 98 தடவைகள் இந்திய நகரங்களுக்கான சேவையை ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நடத்துகிறது.

இந்தியாவின் எந்தவொரு தனி விமான நிறுவனமும், இவ்வளவு (15ஆம் பக்கம் பார்க்க)

## அச்சுவேலியில் கோரவிபத்து ஓய்வுபெற்ற பிரதி அதிபர் பலி

(அச்சுவேலி)

அச்சுவேலி தெற்கு உழவிக்குளம் சித்திவிநாயகர் ஆலயப் பகுதியில் இடம்பெற்ற வீதி விபத்தில் மகளிர் கல்லூரி ஓய்வுபெற்ற பிரதி அதிபர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

நேற்றுக்காலை 10.00 மணியளவில் குறித்த அதிபர் தனது சகோதரனுடன் தனித்தனியாக சைக்கிளில் பயணம் செய்துகொண்டிருந்த சமயம் எதிர்பாராதவிதமாக வந்த உழவு இயந்திரத்துடன் மோதி விபத்துக்குள்ளானதில் அவர் ஸ்தலத்தில் பலியானார்.

அச்சுவேலி புனித திரேசா மகளிர் கல்லூரியில் கடமையாற்றி இந்த வருடம் ஓய்வுபெற்ற செல்வி இராசதுரை இராசமலர் (வயது-61) என்பவரே உயிரிழந்தவராவார்.

இது தொடர்பான விசாரணைகளை அச்சுவேலிப் பொலிஸார் மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (03)

## சர்வதேச நாணய நிதியம் ஐ.தே.க.வுடன் பேச்சு

### தனியார் ஓய்வூதியத் திட்டம் கைவிடப்படுமா?



(கொழும்பு)

உத்தேச தனியார் ஓய்வூதியத் திட்டம் தொடர்பில், நேற்று முன்தினம் ஐக்கிய தேசிய கட்சியின் பிரதிநிதிகள் சிலர், சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கை தூதுவர்களைச் சந்தித்து முறையிட்டுள்ளனர்.

இந்த சந்திப்பின் பின்னர், கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்சா டி சில்வா ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டார்.

இந்த திட்டம் தொடர்பில் அரசாங்கத்துடன் பேசுமாறு, சர்வதேச நாணய நிதியம் தமக்கு தெரிவித்துள்ளதாக, அவர் கூறினார். எவ்வாறாயினும், இந்த தனியார் ஓய்வூதிய திட்ட யோசனை குறித்து தொடர்ந்தும் ஆலோசனை நடத்தப்படுவதாகவும், சில சந்தர்ப்பங்களில் அது நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படமாட்டாது எனவும் நேற்றையதினம் அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மகாநாட்டில் பிரதி அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்தன தெரிவித்தார்.

## யாழ்.மக்களின் அரசியல் பிரச்சினை ஆராய உயர்மட்டக் குழு வருகிறது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மக்கள் எதிர்நோக்குகின்ற அரசியல் பிரச்சினை தொடர்பாக உண்மை நிலையையும், மக்களின் பாதுகாப்புத் தொடர்பாக அவர்களிடம் நேரில் கலந்துரையாடுவதற்காகவும் ஜனநாயக இடதுசாரி முன்னணியின் அரசியல் உயர்மட்டக்குழு நாளை யாழ்ப்பாணம் விஜயம் மேற்கொள்ளவுள்ளதாக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்துள்ளார்.

தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாடு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார, ஜனநாயக இடதுசாரி முன்னணியின் ஒருங்கிணைப்புச் செயலாளர் கலாநிதி சி.மோகன் மற்றும் அமைச்சரின் செயலாளர் டபிள்யூ. (15ஆம் பக்கம் பார்க்க)

## இயற்கை அனர்த்தம் இதுவரை 5 பேர் பலி

(கொழும்பு)

மழை மற்றும் மண் சரிவினால் கேகாலை, காலி, களுத்துறை மாவட்டங்களில் இதுவரை 5 பேர் பலியானதாகவும், 1,299 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அனர்த்த முகாமைத் துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இம்மாவட்டங்களில் 14 வீடுகள் மழை மற்றும் வெள்ளத்தினால் பகுதியளவில் சேதமடைந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## தீயில் கருகி பெண் மரணம்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி பொலிகண்டிப் பகுதியில் இளம் யுவதியொருவர் தீயில் கருகி உயிரிழந்துள்ளார்.

பொலிகண்டியைச் சேர்ந்த 22 வய்தான சீனித்தம்பி சுதர்ஷனா என்ற யுவதியே இவ்வாறு தீயில் கருகி உயிரிழந்துள்ளார்.

விளக்கில் கொழுந்து விட்டெரிந்து கொண்டிருந்த தீ தவறுதலாக இவரது ஆடையில் பற்றிக் கொண்டதாக குறித்த பெண்ணின் உறவினர்கள் பொலிஸாரிடம் வாக்குமூலம் அளித்துள்ளதாகத் தெரியவருகிறது.

தற்போது யாழ்.போதனா வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ள இப்பெண்ணின் சடலம் நாளை மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தப்படவுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தகவல் தெரிவித்தன.

## அரசு—கூட்டமைப்பு பேச்சு எதிர்பார்த்த பலன் இல்லை

அரசாங்கத்துடனான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கலந்துரையாடல்கள் எதிர்பார்த்த பலனைத் தரவில்லை என்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் ஆனந்த சங்கரி தெரிவித்துள்ளார்.

இலங்கை சுதந்திரமடைந்த பின்பு மாறிமாறி வந்த அரசாங்கங்களுடன் கடந்த ஐம்பது வருட காலமாக மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடல்களின் பலன் எதுவுமில்லை என்றும் அவர் கூறினார்.

அந்தவகையில் அரசாங்கத்துடனான கூட்டமைப்பின் பேச்சு எதிர்வரும் காலங்களிலும் எந்த விதமான பலனையும் தரப்போவதில்லை என்றும் அவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

☞ உள்ளே...

2010/2011இற்கான பல்கலைக் கழக மாணவர்களுக்கான வெட்டுப்புள்ளிகளின் விபரம் இணைக்கப்பட்டுள்ளது.

# புதிய உதவித் தேர்தல் ஆணையாளர்
# யாழ்.தேர்தல் மாவட்டத்திற்குத் தெரிவு



(யாழ்ப்பாணம்)

யாழ்.உதவித் தேர்தல் ஆணையாளராக ஓ.எஸ்.கருணாநிதி தேர்தல்கள் ஆணையாளரினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஏற்கனவே வன்னி உதவித் தேர்தல்கள் ஆணையாளராகக் கடமையாற்றிவந்த இவர் நேற்று முதல் யாழ் உதவித் தேர்தல் ஆணையாளராக நியமிக்கப்பட்டதுடன், யாழ்.செயலகத்தில் உதவித் தேர்தல்கள் ஆணையாளர் அலுவலகத்தில் அவர் தமது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டுள்ளார்.

இதுவரை காலமும் யாழ்.உதவித்தேர்தல்கள் ஆணையாளராகக் கடமையாற்றி வந்த பொ.குகநாதன் கொழும்பு தேர்தல்கள் தலைமைப் பணிமனைக்கு மாற்றமாகிச் சென்றுள்ளார். இவர் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை அன்று தேர்தல் தலைமை அலுவலகத்தில் தமது கடமைகளைப் பொறுப்பேற்கவுள்ளதாகவும் தெரியவருகின்றது. (பா)

# யாழ்.சண்டிலிப்பாயில் முதியோர் சங்கக் கூட்டம்

(ஆனைக்கோட்டை)

வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவிலுள்ள முதியோர் சங்கங்களினதும், ஊனமுற்றோர் சங்கங்களினதும் மாதாந்தக் கூட்டம் இன்று சண்டிலிப்பாய் பிரதேச செயலக மகாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் முதியோர் சங்கக் கூட்டம் காலை 9 மணிக்கும், விசேட தேவைக்குரியோரது கூட்டம் 10 மணிக்கும் இடம் பெறவுள்ளது.

அனைத்து அங்கத்தவர்களையும் தவறாது சமூகம் தருமாறு சமூகசேவை உத்தியோகத்தர் வி.அருந்தவராசா கேட்டுள்ளார். (104)

# தெல்லிப்பளை வைத்தியசாலை புனரமைப்புப் பணிகள் துரிதம்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலை 22 மில்லியன் ரூபா செலவில் புனர்நிர்மானம் செய்யும் நடவடிக்கை விரைவு படுத்தப்பட்டிருப்பதாக யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

தற்சமயம் வலி.வடக்குப் பகுதியில் மக்கள் மீள்குடியமர அனுமதிக்கப்பட்டுள்ளமையினால் அப்பகுதி மக்களிற்கான வைத்திய சேவையை மேம்படுத்தும் முகமாக இவ்வைத்தியசாலையைப் புனரமைக்கும் பணிகள் விரைவுபடுத்தப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

யுத்த காலத்தின்போது கடுமையாகச் சேதமடைந்திருந்த இவ்வைத்தியசாலையை என்றிப திட்டத்தின் கீழ் 15 மில்லியன் ரூபா செலவிலும், நிக்கோட் திட்டத்தின் கீழ் 17 மில்லியன் ரூபா செலவிலும் புனரமைப்புச் செய்யும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் இப்புனரமைப்புப் பணிகளில் சுமார் 75 வீதமான பணிகள் நிறைவுபெற்றுள்ளதாகவும் நீர்வசதி, மற்றும் சுத்திகரிப்பு வசதி என்பன மட்டுமே அங்கு ஏற்படுத்தப்பட வேண்டியுள்ளதாகவும் தெரிவித்தார்.

மேலும் இவ் வைத்தியசாலையில் சத்திரசிகிச்சைப் பகுதி ஒன்றும் அமைக்கப்படவுள்ளதாகவும், அதற்குரிய உபகணரங்கள் மட்டுமே தற்சமயம் பெற்றுக்கொள்ள வேண்டியுள்ளதாகவும் குறிப்பிட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் இவ் வேலைத்திட்டங்களை விரைவு படுத்தி இவ் வைத்தியசாலையை வெகுசீக்கிரத்தில் இயங்கவைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் குறிப்பிட்டார்.

அத்துடன் அம்பன் வைத்தியசாலை மேசிமலேசிய நிறுவனத்தின் 15மில்லியன் ரூபா நிதி உதவியுடன் நிர்மாணிக்கப்பட்டு எதிர்வரும் யூன் மாதமளவில் நிறைவடையவுள்ளதாகவும், யுனிசெவ் நிறுவனத்தின் ஒரு மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் அல்லைப்பிட்டிப் பகுதியில் நிர்மாணிக்கப்பட்டுவரும் ஆரம்பசுகாதார நிலையத்தின் பணிகளும் நிறைவடையும் நிலையில் இருப்பதாகவும் மேலும் தெரிவித்தார். (பா)

# விடத்தற்பளை பாடசாலை வீதி புனரமைக்குமாறு கோரிக்கை

(சாவகச்சேரி)

மிருசுவில் விடத்தற்பளை தெற்கு பாடசாலை வீதி மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், பயணிகள் போக்குவரத்துச் செய்யமுடியாது அசௌகரியங்களுக்குள்ளாவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நாளாந்தம் அதிகளவிலான மக்கள் போக்குவரத்தை மேற்கொள்கின்ற இவ்வீதி குன்றும் குழியுமாகக் காணப்படுவதால் வாகனப் போக்குவரத்தை மேற்கொள்வது சிரமமாக உள்ளதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இதைவிட இவ்வீதியின் குறுக்காகச் செல்லும் சம்பாவெளி கோயிலுக்குச் செல்லும் வீதியும் மிக மோசமாக சேதமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த வீதிக்கு முன்னாள் உள்ள வீதியும் பின்னால் உள்ள வீதியும் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது. இந்த நிலையில் இவ்வீதி திருத்தப்படாமல் இருப்பது கவலையளிப்பதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

பாடசாலை மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலர் பயணம் செய்யும் குறித்த வீதியை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விரைவில் புனரமைத்துத் தருமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (95)

# சட்டவிரோத கள் விற்பனை; நீதிமன்றம் அபராதம்

(கரணவாய்)

கரவெட்டிப் பிரதேசதிலுள்ள நெல்லியடி, கலிகை, வேம்படி உள்ளிட்ட சில பகுதிகளில் வீட்டில் வைத்து கள் விற்பனையில் ஈடுபட்ட 6 பேரை மதுவரித் திணைக்களத்தினர் கைதுசெய்து நேற்றையதினம் பருத்தித்துறை நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தினர்.


வழக்கை விசாரித்த நீதிபதி, குறித்த 6 பேருக்கும் தலா இரண்டாயிரம் ரூபா வீதம் பன்னிரண்டாயிரம் ரூபா அபராதமாகச் செலுத்துமாறு தீர்ப்பளித்தார்.

இதைவிட குறித்த பகுதியில் இருவர் பொது இடத்தில் சாராயம் அருந்திய குற்றத்திற்காகப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு அன்றை தினம் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட்டபோது விசாரணையை மேற்கொண்ட நீதிபதி குறித்த இருவருக்கும் நீதிமன்றம் முடியும் வரை தண்டனை வழங்கியதுடன் 6 மாதங்களுக்கு நன்னடத்தைப் பிணையில் எச்சரிக்கை செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டனர். (18)

# ஓமந்தையில் ரயில் நிலையம் நேற்று கோலாகல ஆரம்பம்

## யாழ்தேவி வந்து சென்றது



(வவுனியா)

21 ஆண்டுகளுக்குப் பின்னர் வடபகுதிக்கான ரயில்சேவை ஓமந்தை வரை சென்றது. மகிந்த சிந்தனை வேலைத்திட்டத்தின் கீழ் ஓமந்தை ரயில் நிலையம் வைபவரீதியாக பயணிகளுடைய பாவனைக்கு நேற்று பகல் 12-10 மணிக்கு திறந்து வைக்கப்பட்டது நிலையத் திறப்பு விழாவில், போக்குவரத்து அமைச்சர் குமாரவெல்கமே, பிரதி அமைச்சர் றோகண குமாரதிசாநாயக்கா, வன்னி மாவட்ட முன்னாள் எம்பிக்கள் சிவநாதன்கிஷோர், பி.சுமதிபாலா, மாவட்ட அரச அதிபர் திருமதி பி.எம்.எஸ்.சாள்ஸ், ரயில்வே திணைக்கள உயர் அதிகாரிகள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர.

போரின் காரணமாக பாதிக்கப்பட்ட வடபகுதி ரயில்பாதை புனரமைப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றது ஓமந்தை முதல் பளை வரையிலான பாதைப் புனரமைப்பினை இந்திய நிறுவனம் மேற்கொண்டுவருகின்றது ஆனால் தாண்டிக்குளம் முதல் ஓமந்தை வரையிலான ரயில் பாதை இராணுவத்தின் ஒத்துழைப்புடன் ரயில்வே திணைக்களகத்தினால் புனரமைக்கப்பட்டது ஓமந்தை ரயில் நிலையத்தில் சகல வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளது அதற்கு 450 மில்லியன் செலவாகியிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது

காலை 6 மணியளவில் கோட்டையிலிருந்து அலங்கரிக்கப்பட்ட நிலையில் புறப்பட்ட யாழ்தேவியில் அமைச்சர்களும் அதிதிகளும் ஓமந்தை ரயில் நிலையத்தை வந்தடைந்தனர் பெருமளவிலான மக்கள் திரண்டு நின்று யாழ்தேவியை வரவேற்றனர்

யுத்தம் முடிவிற்கு வந்த பின்னர் அரசாங்கத்தினால் வன்னியில் பாரிய அபிவிருத்தித் திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்படுகின்றது வடபகுதி பயணிகளுடைய போக்குவரத்தினை இலகுபடுத்தும் நோக்குடன் தாண்டிக்குளம் வரை நடைபெற்று வந்த ரயில்சேவை ஓமந்தை வரை நீடிக்கப்பட்டுள்ளமை பாரியதொரு முன்னேற்றமாகும் என அதிகாரிகள் குறிப்பிட்டனர்

இன்னும் இரண்டு ஆண்டுகளில் யாழ்தேவி ரயில் யாழ்ப்பாணம் செல்லும் என இந்த வைபவத்தில் உரையாற்றிய அமைச்சர் வெல்கமகே குறிப்பிட்டார்.

# ஆண்டுவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.கொட்டடி சனசமூக நிலையத்தின் 63 ஆவது ஆண்டுவிழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 6.30 மணிக்கு சிவன் பண்ணை வீதியில் அமைந்துள்ள நிலையக் கலையரங்கில் நடைபெறவுள்ளது.

நிலையத் தலைவர் தெட்சணாமூர்த்தி நிஷாகரன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் கிளைநிறுவன நிறைவேற்று அதிகாரி கு.விக்னேஸ் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

# கூரைத்தகடுகள் விநியோகம்

(சாவகச்சேரி)

இந்திய - இலங்கை மக்களின் நட்புறவு ரீதியாக இந்திய மக்களினால் அன்பளிப்புச் செய்யப்பட்ட கூரைத்தகடுகள் வழங்கும் நிகழ்வு நேற்று சாவகச்சேரி பிரதேச செயலகத்தில் நடைபெற்றது. இக் கூரைத்தகடுகள் மிருசுவில் பிரதேசத்திலுள்ள ஒட்டுவெளி, கரம்பகம் உள்ளிட்ட சில கிராம மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இந்நிகழ்வில் சாவகச்சேரி பிரதேச செயலர் திருமதி சாந்தநாயகி இந்த மக்களுக்கான கூரைத்தகரங்களை வைபவரீதியாக வழங்கிவைத்ததுடன் இதில் பிரதேச செயலகத் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி ரகுநாதன், ஈ.பி.டி.பி. கட்சியின் தென்மராட்சி அமைப்பாளர் சாள்ஸ் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (19)


# மனோதத்துவ வைத்தியம்
## GENERAL PSYCHOTHERAPHY

யாழ்ப்பாணத்தில் 28.05.2011 - 01.06.2011

**5 நாட்கள் மட்டுமே**

அகில உலகெங்கும் வாழும் தமிழ் முஸ்லிம் மக்களிற்கு அறிமுகமான பிரபல மனோதத்துவ Dr.P.ஆறுமுகம அவர்கள் பல நூற்றுக்கணக்கான இளைஞர்களின் இல்லற வாழ்க்கைக்குப் புத்துயிர் கொடுத்துப் பலரின் பாராட்டையும் பெற்றுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் குழந்தை இல்லாமல் இருந்த சிலருக்கு எனது மனோதத்துவ வைத்தியம் மூலம் குழந்தை கிடைத்தமைக்கு ஆதாரம் உண்டு.

★ பதிவு செய்தவர்களும், புதிதாகப் பதிய விரும்புபவர்களும உடன் தொடர்புகொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
கமல்ரூரிஸ்ற் இன்,
392/A மணிக்கூட்டு கோபுர வீதி,
யாழ்ப்பாணம்.
(சிவதர்சன் பாட்ஸ் கடைக்கு மேல்)
தொ.பே.இல - 0214922403.
Hot line - 0719315664, 0777569205.

(C/732)

அறிவு, உள்ளம் ஆகிய இரண்டில் எதைப்பின்பற்றுவது என்ற போராட்டம் ஏற்படும் போது உள்ளம் சொல்வதையே பின்பற்றுங்கள், காரணம் அறிவாற்றலால் செல்லமுடியாத உயர்ந்த மன நிலைக்கு, இதயம் ஒருவனை அழைத்துச்செல்லும்.

- பாபா-

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com
thinamurasupaper@hotmail.com

## மனிதர்கள் நாம் மகத்தானவர்கள்!

"மாத்தி யோசி" என்ற இந்த சொற்பதம் விற்பனைப் பொருளொன்றின் விளம்பர உத்திக்குப் பயன்படுத்தப்பட்டு வெகு பிரபலமானது. பின்னர் இந்தத் தலைப்புடன் தமிழ்த் திரைப்படம் ஒன்றும் வெளியாகியது.

இன்றைய நம் நிலைமையில் மாற்றம் வருவதற்கும், இந்த வாழ்வழிப்புப் பயணத்திலிருந்து நாம் மீளுவதற்கும் இதுகால வரையான நம் நம்பிக்கைகள், சிந்தனை முறைமைகளிலிருந்து மாறி வேறு திசைகளில் யோசிக்க வேண்டிய அவசியமுண்டாகியிருக்கிறது.

மரபு வழியாக வந்து நம்மிடம் இறுகிப் போயிருக்கும் சில குணாதிசயங்களையும், நம்மிடம் விடாப்பிடியாக நாம் உருவாக்கி வைத்துள்ள சில 'சரி'களையும் அவை சரிதானா என்று கேட்டுப் பார்த்துக் கொள்ள வேண்டியிருக்கிறது.

உங்களுக்கு சரி என்று படும் கொள்கைகளுக்காக நீங்கள் உயிரையும் கொடுப்பீர்களா? என்று பேட்ரண்ட் ரஸ்ஸலிடம் கேட்டதற்கு அவர் சொன்ன பதில்: "ஒருபோதும் மாட்டேன். ஒருவேளை அவை தப்பாகவும் இருக்கலாமல்லவா?"

இந்தச் சந்தேகத்தையும், நம் நம்பிக்கைகள் குறித்த மறுவிசாரணையையும் நாம் அலட்சியப்படுத்த முடியாது. நம் மூளையில் திணித்து வைக்கப்பட்டிருக்கிற அனைத்து விஷயங்கள் பற்றியும் நாம் வேறோர் கோணத்திலிருந்து பார்க்கவேண்டிய தேவை இருக்கிறது.

டோரிஸ் லெஸ்ஸிங் என்ற இங்கிலாந்து எழுத்தாளர் சொன்னார்: "கடவுள் என்னிடம் வந்து அவரது வலது கையில் உண்மையையும் இடது கையில் உண்மையை நோக்கிய தேடலையும் வைத்திருக்கிறார் என்றால், கடவுளின் இடது கையையே நான் திறக்கச் சொல்வேன்." உண்மை என்று எதிலும் நிரந்தரமாகத் தொங்கிக் கொண்டிருக்க முடியாதபடி உண்மைகள் மாறி வருவன. முற்று முழுதான உண்மை என்று ஒன்றைக் கைக்குள் பிடித்து வைத்துக்கொள்ள முடியாது. உண்மையை நோக்கிய தேடலே முக்கியம்.

நாம் உண்மை என்று நம்புகிறவைகளையே முழு உண்மையாக எண்ணி இறுகிப் போயிருக்கிறோம். நம் சிந்தனையின் அடிப்படைகளிலேயே மாற்றத்தைத் தேடினால்தான் நாம் முன்னகர முடியும்.

உதாரணத்திற்கு, மாற்று இனத்தவர்களெல்லாம் மடையர்களாகவும், நாம் சமதையாகக் கருதிப் பேச முடியாத குற்றம் புரிந்த விரோதிகளாகவும் எண்ணத்தை வளர்த்துக்கொண்டிருப்போமானால் சக வாழ்வு சாத்தியமில்லை.

பல்லின, பன்மைத்துவ வாழ்வு என்பதற்கெல்லாம் நம்மையறியாமலே நாமும் தடையாக இருந்து கொண்டிருப்போம். பகை மறப்பு, நல்லிணக்கம் என்பவற்றுக்கான சமிக்ஞை எதுவும் நம்மிடருந்து நீளாது.

எந்த மொழியைப் பேசுபவர்களாக இருந்தாலும், எந்த மதத்தைப் பின்பற்றுபவர்களாக இருந்தாலும், எந்த கலாசாரத்தைக் கொண்டவர்களாக இருந்தாலும் அவர்களும் மனிதர்கள்; குற்றங்களுக்கு வருந்தக் கூடியவர்கள்; மானுடப் பொது அறங்களை மதிக்க விரும்புபவர்கள்; மற்றொரு மனிதனைத் தொடர்ந்து துன்புறுத்துவதில் வெட்கப்படக் கூடியவர்கள் என்ற நம்பிக்கை நமக்கு இருக்குமானால் நாம் எவருடனும் உரையாட முடியும். நம் நல்லெண்ண சமிக்ஞைகளை சலிப்பின்றித் தெரிவித்துக்கொண்டிருப்பதை கோழைத்தனமாக எண்ணாதிருக்க முடியும்.

என்னதான் ஆயிரம் வேறுபாடுகள், பேதங்கள் இருந்தாலும் மனிதர்கள் அனைவரும் ஒன்றுதானே?

- ஆசிரியர் -

# சமாதான சூழலில் இனங்களுக்கிடையில் குரோதத்தை வளர்க்க சர்வதேசம் முயற்சி

## குற்றம் சாட்டுகிறார் அமைச்சர் திஸ்ஸ கரலியத்த



(வவுனியா)

இந்த நாட்டில் ஏற்பட்ட ஒரு தேவையற்ற யுத்தம் காரணமாக அழிந்தவர் இந்த நாட்டில் வாழுகின்ற மூவினத்து மக்களும், முப்படையைச் சேர்ந்தவர்களும், புலிகள் அமைப்பைச்சேர்ந்த இளைஞர்களும் அடங்குவார்கள் என சிறுவர் மற்றும் மகளிர் விவகார அமைச்சர் திஸ்ஸகரலியத்த தெரிவித்தார்.

நெடுங்கேணிப் பிரிவில் உள்ள ஈட்டிமுறிப்புக் குள வேலையை கடந்த புதன்கிழமை ஆரம்பித்து வைத்து பேசியபோது அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து பேசியபோது தெரிவித்ததாவது, யுத்தத்திற்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண்போம் என கேட்டதிற்கு பதிலளிக்காததினால் அவர்களுக்கு தெரிந்த ஒரு பாஷையில் நாம் பதிலளிக்கவேண்டி வந்தது. எங்களுக்கு தமிழ் மக்கள் மீது எந்தவித கோப உணர்வுகளோ, எதிர்ப்பு உணர்வுகளோ இல்லை தமிழ் மக்களுடன் நாம் மிகவும் சுமுகமான உறவுடன் வாழ்ந்தவர்கள்.

இந்த நாட்டில் வாழுகின்ற மூவின மக்களையும் பிரித்துவைக்கவேண்டும் என்ற தேவை சர்வதேசத்தைச் சேர்ந்த சிலருக்கு இருந்தது. யுத்தம் முடிவடைந்து சமாதானச் சூழல்வந்தபோதிலும் கூட சர்வதேச சமூகம் இனங்களுக்கிடையில் குரோதத்தை வளர்க்க முயற்சி எடுக்கின்றது.

ஜனாதிபதி சர்வதேச அழுத்தங்களுக்கு எல்லாம் முகம் கொடுத்து ஏழை மக்களுக்கு உதவி செய்ய முன்வந்துள்ளார்.

வடக்கு கிழக்கு மாவட்டங்களை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் அபிவிருத்தி அமைச்சினை உருவாக்கியுள்ள ஜனாதிபதி அதன் பொறுப்பை அமைச்சர் பசில் ராஜபக்ஷவிடம் ஒப்படைத்துள்ளார் எனவும் கரலியத்த தனது உரையில் குறிப்பிட்டார்.(39)

## தென்மராட்சிப் பகுதியில் காசுக்கான வேலைகள் ஆரம்பம்

(சாவகச்சேரி)

மந்துவில் கிழக்கு, மேற்கு மற்றும் கரம்பகம் ஆகிய பிரதேசங்களில் காசுக்கான வேலைத்திட்டம் கடந்த செவ்வாய்க்கிழமை ஆரம்பிக்கப்பட்டு தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரினினால் ஆரம்பித்து வைக்கப்பட்ட இவ் வேலைத்திட்டத்தில் ஒரு குடும்பத்திலிருந்து ஒருவர் பங்கு பற்ற முடியும் எனவும், இதற்கான நாட்கூலியாக 500 ரூபா வழங்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் முன்னெடுக்கப்படும் இவ் வேலைத்திட்டம் இப்பிரதேசங்களில் ஓய்வு பெற்ற அதிபர் ஞானலிங்கம் தலைமையில் இடம் பெற்றுவருவதாக தெரிவிக்கப்படுகிறது. (75)

## சிக்கன கூட்டுறவு சங்கங்களை புனரமைப்பது குறித்த ஆலோசனை

(யாழ்ப்பாணம்)

வலிவடக்கில் தற்போது இயங்காது இருக்கும் சிக்கனக கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களை மீளபுனரமைப்பதற்குத் தேவையான ஆலோசனைகள் வழங்கப்படுகின்றன.

எனவே குறித்த சங்கங்களைச் சார்ந்த நிர்வாகசபை உறுப்பினர்கள் நாளையதினம் காங்கேசன்துறை வீதி, மல்லாகத்தில் வங்களாலேன் (எதிர்ப்பக்கம்) இயங்கும் பிராந்தியசபையில் காலை 9.30 மணிமுதல் 12 மணி வரை பிராந்தியசபைச் செயலாளரிடம், ஆலோசனை பெறமுடியும் எனவே இச் சந்தர்ப்பத்தை தவறாது பயன்படுத்தி தங்கள் சங்கங்களை புனரமைக்குமாறு பிராந்தியசபையினர் கேட்டுக்கொண்டுள்ளனர்.

## ஆசிரியர்களுக்கு 5 நாள் வதிவிடப்பயிற்சி

கிளிநொச்சி வலயத்தில் ஆரம்பக் கல்வியைப் போதிக்கும் ஆசிரியர்களுக்கான புதியகற்பித்தல் நுட்பங்கள், கற்றல் எண்ணக் கருக்கள், ஆசிரியர் வகிபாகம், வகுப்பறை முகாமை, அத்தியாவசியக் கற்றல் தேர்ச்சி, சுற்றாடல் சார் செயற்திறன் விருத்தி, விசேட செயற்றிட்டம் தயாரித்தல், பிள்ளைகளை அறிதல், சுய வடைவுக் கோவையை நிவர்த்தி செய்தல் ஆகிய விடயங்களைக்கொண்ட ஐந்து நாள் வதிவிடப்பயிற்சிப் பட்டறையொன்று கிளிநொச்சி கனகபுரம் ம.வி.யில் நடைபெறவுள்ளது. எதிர்வரும் யூன் மாதம் 3ஆம் திகதி தொடக்கம் 7ஆம் திகதி வரை காலை 6 மணியில் இருந்து பிற்பகல் 7.30 வரை நடைபெறவுள்ள இப்பயிற்சிப்பட்டறை யுனிசெவ் நிறுவன அனுசரணையுடன் கிளிநொச்சி வலயக்கல்வி அலுவலகத்தால் நடாத்தப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது. பயிற்சி நிறைவில் 50 மணித்தியாலங்கள் பயிற்சி பெற்றமைக்கான சான்றிதழ் வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## "ஹெரோயின்" வைத்திருந்த பெண்ணுக்கு ஆயுட் கால சிறை: கணவர் விடுதலை

(வவுனியா)

ஹெரோயின் போதைப்பொருள் உடமையில் வைத்திருந்தமை, வியாபாரம் செய்தமை, ஆகிய குற்றச்சாட்டுக்களில் முதலாம் எதிரியான மனைவி குற்றவாளியாகக் காணப்பட்டு அவருக்கு ஆயுட்காலச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இரண்டாம் எதிரியான கணவர் குற்றச்சாட்டுக்களிலிருந்து விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

தலைமன்னார் ஊர்மனை என்ற இடத்தைச்சேர்ந்த செல்வநாயகம் கார்மேல் ஜெனோவா முதலாம் எதிரியாகவும் இவரது கணவர் மருதை செல்வநாயகம் 2ஆம் எதிரியாகவும் இந்த வழக்கு பொலிஸாரினால் தொடரப்பட்டிருந்தது. 17.03.2004ஆம் ஆண்டு தலைமன்னார் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின்பேரில் மேற்படி எதிரிகளுடைய வீடு சோதனையிடப்பட்டபோது உடுப்புக்குள் இருந்து 41.86 கிராம் ஹெரோயின் போதைப் பொருள் கண்டுபிடிக்கப்பட்டிருந்தது. வவுனியா மேல் நீதிமன்றில் மேல்நீதிமன்ற ஆணையாளர் ஜெ.விஸ்வநாதன் முன்னிலையில் இந்த வழக்கு விசாரணை நடைபெற்றது.

இறுதியில் முதலாம் எதிரிக்கெதிராகக் கொண்டு வரப்பட்ட இரண்டு குற்றச்சாட்டுக்களிலும் குற்றவாளியாகக் காணப்பட்டு அவருக்கு ஆயுட்கால சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. 2ஆம் எதிரியான கணவர் விடுவிக்கப்பட்டுள்ளார். எனத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. (39)

## காலங்கடந்த பிறப்பு, இறப்பு, திருமண பதிவுகளை மேற்கொள்வதில் காலதாமதம்

### - மக்கள் சிரமம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தினால் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக நடாத்தப்படும் காலங்கடந்த பிறப்பு, இறப்பு, திருமணப் பதிவு சேவையை மக்கள் பெற்றுக் கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த பதிவு நடவடிக்கைகளுக்காக நாளாந்தம் பெரும் எண்ணிக்கையிலான மக்கள் வருகை தருகின்ற நிலையில் சிலர் பதிவுகளை மேற்கொள்ளாது திரும்பிச் செல்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

போதியளவான ஊழியர்கள் இந்த செயற்பாடுகளுக்காக நியமிக்கப்படாமையே மக்கள் தமது தேவைகளைப் பூர்த்தி செய்யமுடியாத நிலை காணப்படுவதாகவும் அந்த மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இதைவிட யுத்தத்தினால் மனவேதனைப்பட்டு அதிலிருந்து மீள முடியாத நிலையிலுள்ள தங்களுக்கு பதிவு நடவடிக்கைகள் தொடர்பாக ஆலோசனைகள் விளக்கம் குறிப்பாக விண்ணப்பப்படிவம் எங்கு சென்று வாங்க வேண்டும், எவ்வாறு பூர்த்தி செய்யவேண்டும் உள்ளிட்ட விளக்கங்கள் வழங்கப்படாமையாலேயே தாம் இந்த பதிவுகளை மேற்கொள்வதில் காலதாமதங்களை எதிர்நோக்குவதாக அந்த மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

எனவே இது தொடர்பாக உரிய அதிகாரிகள் கவனம் எடுத்து சரியான அறிவுறுத்தல்களை வழங்கி மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கவேண்டும் என பாதிக்கப்பட்ட மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (77)

# நான்கு சனசமூக நிலையங்கள் புனரமைப்புக்கு 5 இலட்சம் நிதி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபை உறுப்பினர்களுக்கான நிதி ஒதுக்கீட்டில் யாழ். மாநகர சபை உறுப்பினர் மானுவல் மங்களநேசனிற்கு ஒதுக்கப்பட்ட ஐந்து இலட்சம் ரூபா நிதியின் மூலமாக நான்கு சனசமூக நிலையங்கள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

இவற்றில் அரியாலை காந்தி சனசமூக நிலையத்தின் புதிய கட்டடம் ஒன்றை நிர்மாணிக்க மூன்று இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவும், அரியாலை திருமகள் சனசமூக நிலையத்தை புனரமைக்க ஐம்பது ஆயிரம் ரூபாவும், நாயன்மார்க்கட்டு பாரதி சனசமூக நிலையத்தை புனரமைக்க ஐம்பது ஆயிரம் ரூபாவும், நல்லூர் மூத்த விநாயகர் சனசமூக நிலையத்தைப் புனரமைக்க ஐம்பது ஆயிரம் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதனை நேற்று முன்தினம் யாழ். மாநகர சபையில் நடைபெற்ற மாதாந்தப் பொதுக்கூட்டத்தின்போது சபை எகமனதாக அங்கீகரித்து.

அத்துடன் யாழ். மாநகர சபை உறுப்பினர் ஒருவர் தமக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியினை முழுமையாக இவ்வாறு பயன்படுத்துவது இதுவே முதல் தடவை எனவும் தெரிவிக்கப்பட்டது. (பா)

## கரவெட்டி கோட்ட ஆங்கில தின முடிவு

(பருத்தித்துறை)

கரவெட்டி கோட்ட மட்ட ஆங்கில தினப் போட்டியில் தரம் 12 மாணவர்களில் ஒவ்வொரு பிரவிலும் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் பெயர் விபரம் வடமராட்சி வலய கல்வி அலுவலகத்தினால் வெளியிடப்பட்டுள்ளது.

பெயர் விபரம் வருமாறு:

**பார்த்தெழுதுதல்:**

எஸ். சாகித்தயா, ஜிஇ பிரவீனா நெல்லியடி மத்திய மகாவித்தியாலம், கே. மௌனிகா வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி.

**ஆக்க எழுத்து:**

வி. முகுந்தன், எஸ். மயுறா நெல்லியடி மத்திய மகாவித்தியாலம், வி. லாவண்யா யாழ். விக்னேஸ்வரா கல்லூரி.

**சொல்வதெழுதல்:**

எஸ். மயூறா (நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்), கே. மௌனிகா (வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி), வி. முகுந்தினி (நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்)

**சுயமாக ஆயத்தம் செய்து பேசுதன்:**

எஸ். சஞ்சிகா, எஸ். சாகித்யா (நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்), ரி. கலைவாணி (வடமராட்சி மத்திய கல்லூரி) (109)

## தங்கையின் நகைகளைத் திருடிய சகோதரி பொலிஸாரால் கைது!

### விளக்கமறியலில் வைக்க நீதிபதி உத்தரவு


(யாழ்ப்பாணம்)

தங்கையின் நகைகளை திருடிய சகோதரி நீதிமன்றினால் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக தெரிய வருவதாவது: திருமாணமாகி பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் வசித்துவரும் சகோதரி கடந்த வாரம் சங்கானையில் உள்ள தனது தங்கை வீட்டிற்குச் சென்று சில நாட்கள் தங்கியுள்ளார்.

ஒரு நாள் தங்கை ஆலயத்திற்குச் சென்றுள்ளதைப் பயன்படுத்தி வீட்டில் இருந்த தங்கையின் நகைகளை எடுத்துச் சென்றுள்ளார்.

நகைகளைக் காணாததை அறிந்த தங்கை, மானிப்பாய் பொலிஸாருக்கு முறையிட்டார். முறைப்பாட்டையடுத்து குறித்த பகுதிக்குச் சென்ற மானிப்பாய் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மல்கம் பிளேட் தலைமையிலான ஹரிசந்திரா, ரஞ்சித் ஆகியோர் அடங்கிய குழுவினர் விசாரணைகளை நடத்தினர். வீட்டில் தங்கியிருந்த பெண்ணை விசாரணை செய்தபோது அவர் ஒரு சங்கிலி, இரண்டு காப்புகளை எடுத்ததை ஒப்புக் கொண்டுள்ளார். அவர் சங்கிலியை வங்கியில் அடகு வைத்துள்ளார். பொலிஸார் குறித்த பெண்ணிடம் கைப்பற்றப்பட்ட நகைகளுடன் கடந்த செவ்வாய்கிழமை மல்லாகம் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தினர். வழக்கினை விசாரணை செய்த நீதிபதி 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (கா)





காரைநகர் மருதடி வீரகத்தி விநாயகர் ஆலய தேர் உற்சவத்தின்போது விநாயகப் பெருமான் தேருக்கு எழுந்தருளி வருவதையும், தேர் ஏறி வீதியுலா வரும் காட்சியையும் காணலாம். (50)

## இன்று தொல்லை வினை தீர்க்கும் நல்லைக்கந்தனுக்கு கற்பூரத் திருவிழா

வரலாற்றுப் பெருமை மிக்கதும் அருள் நிறைந்த அழகன் முருகனின் ஆலயமுமான நல்லூர் கந்தசுவாமி கோயிலில் இன்று கற்பூரத் திருவிழா. தொல்லை வினை தீர்க்கும் நல்லைக் கந்தனுக்கு கும்பாபிசேஷ தின மணவாளக் கோல விழா நன்னாள் இன்றாகும்.

அழகனான ஆறுமுகப் பெருமானுக்கு இன்று ஆயிரத்தெட்டு சங்குகளால் அபிஷேகம். பின்னர் அலங்காரப் பிரியனான கந்தப்பெருமான் இன்று மலர் மாலைகளாலும் தங்கப்பவுண் நகைகளாலும் கோலாகலமான முறையில் திவ்யாலங்காரம் செய்யப்பட்டு விசேட தீபாராதனை பூசை வழிபாடுகள் இடம்பெறும்.

இன்னொரு விசேஷம் என்னவென்றால் திருமணமாகாத இளம் வயது வாலிபர்களும், கன்னிப் பெண்களும் நல்லூர் முருகனின் திருக்கல்யாணம் பார்த்து வணங்கினால் அவர்களுக்கும் வெகுவிரைவில் திருமணம் நடைபெறுவதாக ஓர் ஐதீகம். அதனால் இன்று முருகப் பெருமான் கல்யாணக் கோலம் காண்பதற்குக் காளையரும் கன்னியரும் ஏற்கனவே முன்னதாக வந்து ஆலய வசந்த மண்டபத்தில் முன்னே காத்திருந்து இடம்பிடிக்கின்ற நிகழ்வும் இங்கே இடம்பெறுகின்றது.

ஆறுமுருகனின் அற்புதமயமான திருக்கல்யாணம் முடிந்த பின்னர் அழகிய வெள்ளிப் பீடத்திலே திருவீதி வலம் வருகின்ற அதி அற்புதக் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும்.

மங்கள இசை தவில்நாதம் விண்ணாவும் பொலிந்து அதிர்ந்து நிற்க அடியார்கள் புடைசூழ அழகன் முருகன் நல்லூர் வீதியிலே நல்லருட் காட்சி நல்கும் இன்றைய கற்பூரத் திருவிழாவைக் கண்டு களித்து புனிதப் பிறவியாகிய மனிதப் பிறவி எடுத்ததன் மாண்பினைப் பெறுவோமாக...

சிவநெறிக் கலாநிதி இராசையா ஸ்ரீதரன்

## சின்னஞ் சிறு செய்திகள்

### கூரைத்தகடுகள் வழங்கல்

(கட்டுவன்)

வலி வடக்குப் பகுதியில் மீளக்குடியமர்ந்த மக்களுக்கு கூரைத்தகடுகள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இதில் கோவில், வசந்தபுரம், கீரிமலை, கொள்ளங்கலட்டி ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த மக்களுக்கே இக்கூரைத்தகடுகள் வழங்கப்பட்டன. இதில் ஈ.பி.டி.பி. கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் க. கமலேந்திரன் மற்றும் தோழர்களான ஜீவன், அன்பு ஆகியோரும் கலந்துகொண்டு மக்களுக்கு கூரைத்தகடுகளை வழங்கினர். (29)

### நூல்கள் கையளிக்கப்பட்டன

(முரசுமோட்டை)

கிளிநொச்சி பிரமந்தனாறு மகாவித்தியாலயத்தில் நூலக கண்காட்சியும் கரித்தாஸ் கியூடெக் நிறுவனத்தினரினால் வழங்கப்பட்ட நூல்கள் கையேற்கும் நிகழ்வும் அண்மையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் வன்னிப் பிராந்திய கரித்தாஸ் கியூடெக் நிறுவனப் பணிப்பாளர் வண.பிதா அ.டாவீர அடிகளார் கலந்து கொண்டு மாணவர்களுக்கு மிகவும் பயன்படக்கூடிய வகையில் 25 ஆயிரம் ரூபா பெறுமதியான நூல்களைப் பாடசாலை நிர்வாகத்திடம் கையளித்தார். தொடர்ந்து இடம்பெற்ற நூலக கண்காட்சியில் மாணவர்கள் பெற்றோர்கள் மற்றும் கல்வி சமூகத்தினர் கலந்துகொண்டனர். (110)

### தகைமை மதிப்பீட்டுப் பரீட்சை

(பூநகரி)

இலங்கை பரீட்சைத் திணைக்களத்தால் அரச அலுவலர்கள் இரண்டாம் மொழியில் பெற்றுக் கொண்ட தகைமையை மதிப்பீடு செய்யும் பரீட்சை இன்று சனிக்கிழமை கிளிநொச்சி மாவட்டத்தில் இரு நிலையங்களில் நடைபெறவுள்ளது.

கிளிநொச்சி மத்திய கல்லூரி, கிளிநொச்சி கனிஸ்ட மகாவித்தியாலயம் ஆகிய நிலையங்களில் முற்பகல் 9.00 மணி தொடக்கம் 10.00 மணி வரை நடைபெறும் இப்பரீட்சையில் சிங்கள, தமிழ் அரச அலுவலர்களென 183 பரீட்சார்த்திகள் தோற்றவுள்ளதாக கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. (112)

### ஆங்கில தினப் போட்டி

(பூநகரி)

கரைச்சிக் கோட்டத்தைச் சேர்ந்த பாடசாலை மாணவர்களுக்கான ஆங்கில தினப் போட்டி இன்றும் நாளையும் கிளிநொச்சி பாரதி வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக கரைச்சிக் கோட்ட கல்விப் பணிப்பாளர் அ. அமிர்தலிங்கம் அறியத் தருகிறார்.

மேலதிக நிகழ்வாக தரம் 3இல் இருந்து 13 வரையான மாணவர்களுக்கு ஆங்கில கவிதைப் போட்டியும் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (112)

### சைக்கிள் திருட்டு

(மானிப்பாய்)

ஆனைக்கோட்டை முத்த விநாயர் ஆலய வீதியில் நிறுத்தப்பட்டிருந்த துவிச்சக்கர வண்டி திருட்டுப்போயுள்ளதாக மானிப்பாய் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. கோவிலில் கட்டுமான வேலைகளை மேற் கொண்டுவரும் சுழிபுரத்தைச் சேர்ந்த கருணா என்பவரது துவிச்சக்கரவண்டியே கடந்த செவ் வாய்க்கிழமை திருடப்பட்டுள்ளது. இத்திருட்டுத் தொடர்பாக மானிப்பாய் பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (கா)

### செயலமர்வுகள்

(பருத்தித்துறை)

வடமராட்சி வலயப் பாடசாலைகளில் தரம் 3 வகுப்பில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான மொழி, கணிதப் பாட செயலமர்வு இன்றும் நாளையும் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 3.30 மணி வரை யாழ். புலோலி மெ.மி.த.க. பாடசாலையிலுள்ள ஆசிரிய நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இச்செயலமர்வில் பங்குபற்றும் ஆசிரியர்கள் இலவச பாடநூல், ஆசிரிய அறிவுரைப்பு வழிகாட்டி என்பவற்றைத் தவறாது எடுத்து வருமாறு வடமராட்சி ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி கமலாம்பாள் பஞ்சலிங்கம் அறிவித்துள்ளார். (109)

● ● ●

(பருத்தித்துறை)

வடமராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 6 முதல் 9 வரை புவியியல் பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு இன்று சனிக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் புலோலி மெ.மி.த.க. பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இச்செயலமர்வில் பங்குபற்றும் ஆசிரியர்கள் தவறாது இலவச பாடநூல் களை எடுத்து வருமாறு வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் திரு. வ. செல்வராசா அறிவித்துள்ளார். (109)

# நலிவடைந்த குடும்பங்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதே வணிகர் கழகத்தின் நோக்கம்

## உதவி வழங்கும் நிகழ்வில் தலைவர் ஜெயசேகரம்

(காரைநகர்)

நலிவடைந்த குடும்பங்களின் அடிப்படை வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் யாழ். வணிகர் கழகம், குடும்பம் ஒன்றுக்கு 25 ஆயிரம் ரூபா பெறுமதியான கோழி வளர்ப்புக்குத் தேவையான கோழிக்கூடு உட்பட மற்றும் உபகரணங்களை வழங்கி வருகிறது.

இத்திட்டத்திற்கென பதினைந்து இடங்களைத் தெரிவு செய்து, காரைநகர் பிரதேசத்தைத் தெரிவு செய்துள்ளோம் என்று யாழ். வணிகர் கழகத் தலைவர் இ.ஜெயசேகரம் தெரிவித்தார்.

காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் நடைபெற்ற கோழிக்கூடுகளை வழங்கும் நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பிரிவு எல்லைக்குட்பட்ட நலிவடைந்த பத்துப் பயனாளிகளைத் தெரிவுசெய்து, அவர்களுக்கு தலா 25 ஆயிரம் ரூபா பெறுமதியான கோழிக்கூடு, 30 கோழிக் குஞ்சகள், 1 மூடை வளரும் தீவனம் மற்றும் நீர் வைக்கும் உபகரணங்கள் என்பன வழங்கி வருகிறோம்.

யுத்தப் பாதிப்புக்குள்ளான எம் மக்களின் அடிப்படைப் பொருளாதாரத்தை மேம்படுத்தும் வகையில் இன்றுவரை மருதங்கேணி, தென்மராட்சிப் பிரதேசங்களில் இத்திட்டத்தை நடைமுறைப் படுத்தியுள்ளோம். கோழி வளர்ப்பின் மூலம் எமது முட்டைத் தேவையை நாம் பூர்த்தி செய்வதுடன், எமது பொருளாதாரத்தையும் மேம்படுத்த முடியும் எனத் தெரிவித்தார்.

காரைநகர் உதவி அரசாங்க அதிபர் ஆர்.ஜெயசீலன் உரையாற்றுகையில்,

எமது பகுதிகளில் சுமார் 10 ஆயிரம் குடும்பங்கள் வறிய, நலிவுற்ற நிலையில் உள்ளன. இதில் 10 குடும்பங்களுக்கு மட்டுமே இந்த உதவியை யாழ். வணிகர் கழகம் செய்கிறது. ஏனைய வறிய குடும்பங்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்கும் உதவிகளைச் செய்ய வேண்டுமென கேட்டுக்கொண்டார்.

இந்நிகழ்வில் வாழ்நாள் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை, காரைநகர் அபிவிருத்திச் சபை தலைவர் க.சோமசேகரம் உட்பட மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

நிகழ்வின் முடிவில் தெரிவு செய்யப்பட்ட 10 பயனாளிகளுக்கும் தேவையான உபகரணங்கள் வழங்கப்பட்டன. (50)

# மாகாணசபை ஊழியர்களுக்கான சிங்கள மொழி வகுப்புக்கள்

(யாழ்ப்பாணம்)

அரச ஊழியர்களுக்கான தேசிய மொழிக்கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் மூலம் நடாத்தப்படும் மும்மொழிப் பயிற்சி வகுப்புகளுக்கு அமைவாக யாழ். மாவட்ட மாகாணசபை ஊழியர்களுக்கான சிங்கள மொழி மட்டம் II, III இற்கான வகுப்புக்கள் இன்றும் நாளையும் யாழ். மாவட்டத்தின் ஏழு இடங்களில் நடைபெறவுள்ளது.

இப்பயிற்சி வகுப்புக்கள் இன்று நாவலர் மகாவித்தியாலயத்தில் பிற்பகல் 1.00 மணிக்கும், செங்குந்தா இந்துக் கல்லூரியில் பிற்பகல் 2.00 மணிக்கும், மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் பிற்பகல் 3.00 மணிக்கும், மானிப்பாய் பிரதேச சபையில் பிற்பகல் 4.00 மணிகும் நடைபெறவுள்ளது.

நாளை கரவெட்டிப் பிரதேசபையில் பிற்பகல் 2.00 மணிக்கும், பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலயத்தில் பிற்பகல் 3.00 மணிக்கும், சாவகச்சேரி நகரசபையில் பிற்பகல் 4.00 மணிக்கும் நடைபெறவுள்ளது. இவ்வகுப்புகளில் 01.07.2007 ஆம் ஆண்டிற்குப் பின்னர் நியமனம் பெற்ற மாகாணசபை ஊழியர்கள் கலந்து கொள்வது அவசியமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (பா)

# ஆசிரியர்களின் இடமாற்றம் இரத்து மீண்டும் முன்னைய பாடசாலைகளில்

(அச்சுவேலி)

அண்மையில் அமுல்படுத்தப்பட்ட ஆசிரியர் இடமாற்றத்தின் போது யாழ்ப்பாணத்திலிருந்து வன்னி உள்ளிட்ட பிற மாவட்டங்களுக்குத் தமது கடமையைப் பொறுப்பேற்கச் செல்லாத ஆசிரியர்களில் தமது இடமாற்றம் தொடர்பாக வடமாகாண ஆளுநருக்கு மேம முறையீடு செய்திருந்த ஆசிரியர்களுக்கான விரிவான விசாரணைகள் சில தினங்களுக்கு முன்னர் ஆளுநர் மற்றும் கல்வித் திணைக்கள அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவ் விசாரணைகளில்போது உண்மையானதும், சரியானதுமான காரணங்களை முன்வைத்து மேன்முறையீடு செய்திருந்த ஆசிரியர்களின் இடமாற்றங்கள் ஆளுநரினால் இரத்துச் செய்யப்பட்டு, அவர்கள் தமது முன்னைய பாடசாலைகளிலேயே மீண்டும் கடமையாற்ற அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதேவேளை சரியான காரணங்கள் இன்றிச் செய்யப்பட்ட முறையீடுகள் நிராகரிக்கப்பட்டிருப்பதுடன், கடமையைப் பொறுப்பேற்காத ஆசிரியர்களுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்பட்டதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (03)

# நேரக் கண்காணிப்பாளர் இன்றி சேவையில் அரச பேருந்துகள்

(பூநகரி)

சங்குப்பிட்டி கேரதீவு பாலந் திறக்கப்பட்டபின் கேந்திர நிலையமாக மாறியுள்ள பூநகரி வாடியடிச் சந்தியில் போக்குவரத்துச் சேவையினரின் நேரக் கண்காணிப்பாளரை நியமிக்கப்படாமையால் போக்குவரத்துச் சேவையின் ஒழுங்கின்மை பற்றிச் சென்ற வாரம் தினமுரசு பத்திரிகை சுட்டிக்காட்டியிருந்தது. அதைத் தொடர்ந்து தனியார் போக்குவரத்துச் சேவை மன்னார் இணையத்தளத்தினால் நேரக் கண்காணிப்பாளர் நியமக்கப்பட்டு திருப்திகரமான முறையில் சேவை நடைபெறுவதாக மக்கள் பாராட்டுத் தெரிவித்துள்ளனர்.

இதேபோல அரச பேருந்துச் சேவை நேரக் கண்காணிப்பாளர் ஒருவரை நியமித்து உரிய நேரத்திற்குச் சேவைகள் இடம்பெற உதவவேண்டுமென இப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (112)



செள்ஜோன்ஸ் கல்லூரியில் விஞ்ஞானம் மற்றும் அழகியற் கண்காட்சி நடைபெற்றது. அழகியற் கண்காட்சியை அழகியற் கலை ஆசிரிய ஆலோசகர் திரு.துசியந்தன் திறந்து வைப்பதையும், சென்ஜோன்ஸ் கல்லூரியின் உப அதிபர் திரு.அந்தோனிப்பிள்ளை பார்வையிடுவதையும் காணலாம்.

ஊ ஹ்...ஹ்...ஹ்... என்ன வெய்யில் நெருப்பெரியுது. வீதியளில காண்டாவன வெய்யில் யாழ்ப்பாணத்தில நல்லா வாட்டுது!

யாழ்ப்பாணச்சனம் உப்புடி எத்தினை நாள் வெய்யிலயும் தாங்கும். ஒருநாள் மழையைத் தாங்காது பாருங்கோ!

உண்மையில நாங்கள் வருசத்தில நாலுவிதமான இயற்கை மாறுதல்களுக்கு முகம் குடுக்கிறம். இப்ப இந்த வெய்யில் அதைத் தொடர்ந்து கானல், சோளகக் காத்து, பிறகு மழை முடியப் பனி இப்பிடி மாறிமாறி நாலுவிதமான சீதோஷ்ண நிலைக்கு ஈடுகுடுத்து வாற இந்த யாழ்ப்பாணச் சனந்தானே!

மூண்டு மாதத்துக்கு ஒரு மாற்றம், இப்பிடி வேறெந்த இடத்திலும் இருக்காதெண்டு தான் சொல்லலாம். அங்கை குளிரும் மழையுந்தான்.

இந்த அனல் காத்து வெய்யிலில் குளிச்சுத்தான் யாழ்ப்பாணச் சனங்களின்ர சீவியம் போகுது. மேசன், கடல்தொழில், விவசாயம், தோட்டம் எந்த வேலையை எடுத்துக் கொண்டாலும் இதே வெய்யில்தான்.

இதுகளவிட இன்னொரு தொழில் பாக்குதுகள், அதுகளைக் கண்டால் கண்ணால இரத்தம்தான் கொட்டவேணும். பழமொழியொண்டிருக்கு 'பங்குனி மாத வெயிலில் பாதை வழிய போறவரைப் பாத்திருப்போர் பாவிகள்' எண்டு.

நான் சொல்லவாறது, நடைபாதைக் கடையள் வைத்து வியாபாரம் செய்யுறது களைப் பற்றி! அதுகள் நட்டநடு வெய்யிலில் பொருட்களை நடைபாதைகளில் போட்டிட்டு தலையில் தொப்பியோ, சிறுதுணியோ போட்டுக் கொண்டிருந்து வியாபாரம் செய்யிறதைக் கண் டிருக் கிறியள் தானே!

அதுகள் நீண்ட காலம் வாழ்றது என்னண்டு? நோய் நொடியள்ல வாழ்நாள் போயிடும்!

அதேநேரம் ஃபானும், ஏசியும் பூட்டியும் தொழில் நடக்குது. பாத்தா ரெண்டும் ஒண்டுதான். அதென்ன உடம்புக்குக் குளிர்ச்சியே! அந்த நேரம் இதமாத்தான் இருக்கும். பின்விளைவு அதுகளைப் போலதான்.



எண்டாலும் நடைபாதை வியாபாரிகள் நெருப்புத்தான் குளிக்குதுகள். கோயில்களில நேத்திக் கடனுக்கு தீக்குளிக்கிறது ஒரு ரகம்! இப்பிடி வெய்யில்ல உழைக்கிறது இன்னொரு ரகம்.

அந்தக் காலத்தில் இப்பிடி வெக்கைக்கு ஏத்தாப்போல வெள்ளரிக்காய், வத்தகப் பழம், பிப்பிலிக்காயெண்டு வரும். இந்தக் காலத்தில அதுகள் நல்லா அருகிப்போட்டுது. வந்தாலும் காசுகுடுத்து வாங்கேலாத நிலை!

அதுகள் ஒரு பக்கத்தால குறைந்து போக இன்னொரு பக்கத்தால சாப்பாடுகள் கூடிப்போச்சு! எண்டாலும் நான் முதல்ல சொன்னாப் போல இயற்கையான உஸ் ணத்தைத் தணிக்கும் பழவகை போல வருமோ!

தோடம்பழம, முந்திரிகைப் பழம், அப்பிள், அன்னாசி எண்டு இஞ்சகாசை விட்டா எதுதான் வாங் கே லாமல் கிட க்கு? முந் திரிகைச் செய் கைக் கு யாழ்ப்பாணம் பேர் போனது தான், ஒரு தோடை மரத்தைக் காண முடியுமே? கறுத்தக்கொழும்பான், செம்பாட்டானெண்டு மாம்பழங்களும் அருகித் தான் வருகுது.

# சிறுவர் பாதுகாப்பு நிதியத்தால் 180 பேருக்கு வாழ்வாதார உதவி

(முரசுமோட்டை)

கிளிநொச்சி புன்னை நீராவியடிப் பகுதியில் மீள்குடியமர்ந்துள்ள சுமார் 180 பயனாளிகளுக்குச் சிறுவர் பாதுகாப்பு நிதியத்தினால் வாழ்வாதார உதவித் திட்டங்கள் வழங்கப்பட்டுள்ளது.

இதில் புன்னை நிராவி கிராமத்தில் 100 பயளாளிகளும் புன்னை நீராவிக் கிராமத்தில் 80 பயனாளிகளும் தெரிவு செய்யப்பட்டு அவர்களுடைய சுயதொழிலை ஊக்குவிக்கும் வகையில் இவ் உதவித்திட்டங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த உதவித்திட்டங்கள் மூலம் எதிர்காலத்தில் இந்தப் பயனாளிகளுடைய கல்வி, சுகாதாரம், போஷாக்கு என்பன தன்னிறைவை அடையும் என்ற வகையிலும் வாழ்வாதாரத்தை முன்னேற்றகரமாக மாற்றும் நோக்கிலும் இவ் உதவிகள் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (110)

# மர்ம நபர்களின் தாக்குதல் இருந்து தப்பியவர் பொலிஸில் முறைப்பாடு

(கரணவாய்)

நெல்லியடி அரசடிச் சந்தியைச் சேர்ந்த முச்சக்கர வண்டி ஓட்டுநர் ஒருவர் தனது சாதுரியமான செயற்பாட்டால் வெட்டுக்காயத்திலிருந்து தப்பியுள்ள சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற இச்சம்பவத்தில் குறித்த நபர் தனது நண்பரின் வீட்டில் இரவு 8 மணி வரை தங்கி நின்று விட்டு தனது வீட்டிற்கு நடந்து சென்று கொண்டிருந்த வேளை, அப்பகுதியால் வந்த மர்ம நபர்கள் வாள், கத்தி கொண்டு அவரைத் தாக்க முற்பட்ட சமயம் அவர் சாதுரியமாக மதில் ஏறிக்குதித்து தப்பியோடி, நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனையடுத்து நெல்லியடிப் பொலிஸார் சம்பவ இடத்திற்கு வந்து பார்த்தபோது மர்ம நபர்கள் தப்பியோடியுள்ளதாகவும், இவர்களைப் பொலிஸார் தீவிரமாகத் தேடி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (18)

## ஸ்ரீதரின் இன்றைய பலன்

(28.05.2011 – சனிக்கிழமை)

**பஞ்சாங்கக் குறிப்புக்கள்**

கர வருஷம்
வைகாசி 14 ஆம் நாள்.
இராகுகாலம் 8.52–10.22, சுபநேரம் 2.52 –4.22,
நட்சத்திரம் ரேவதி முழுவதும்
திதி: ஏகாதசி மு.இ. 9.49 வரை
ஏகாதசி விரதம்.

**இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது**

மேடம்:– பணக் கஷ்டம், வீண் அலைச்சல், குடும்பத்தில் குழப்பம், மனக் கவலை, விபத்தும் வரக்கூடும்.

ரிஷபம்:– தேக ஆரோக்கியம், பணம் வரவு, வீட்டில் நிம்மதி, மன மகிழ்ச்சி, சபலம்.

மிதுனம் :– பண வரவு, நண்பர் வருகை, குடும்பத்தில் மகிழ்ச்சி, களவு போகலாம் கவனம்.

கடகம்:– நண்பர் தொல்லை, பணக் கஷ்டம், வீட்டில் கலகம், அமைதியின்மை, கவலை.

சிம்மம்:– பணம் வரும், குடும்பத்தில் மகிழ்ச்சி, தேகாரோக்கியம், நண்பர் வருகை, விபத்தும் வரும்.

கன்னி :– மனக்கவலை, வீட்டில் நிம்மதியின்மை, விபத்தும் வரலாம், அயலவர் பகை, குழப்பம்.

துலாம் :– பணக் கஷ்டம், குடும்பத்தில் குழப்பம், மனக் கவலை, விபத்து வர இடமுண்டு.

விருச்சிகம்:– குடும்பத்தில் குதூகலம், பணம்வரும், மன மகிழ்ச்சி, களவு நடக்கலாம், தேகசுகம்.

தனுசு:– பணக் கஷ்டம், மனக் கவலை, வீட்டில் நிம்மதியின்மை, வீண் அலைச்சல், சபலம்.

மகரம்:– மனச் சஞ்சலம், பணம் வரவு, குடும்பத்தில் குழப்பம், நண்பர் தொல்லை, விபத்தும் வரலாம்.

கும்பம் :– பணம் வரும், தேக சுகம், மன அமைதி, குடும்பத்தில் குதூகலம்.

மீனம்:– குடும்பத்தில் குழப்பம், மனச் சஞ்சலம், பணக் கஷ்டம், சபலம், கவலை.

# நல்லூர் பிரதேச செயலகம் சம்பியன்

(யாழ்ப்பாணம்)

யாழ். பிரதேச செயலகங்களுக்கிடையிலான கிரிக்கெட் போட்டியில் நல்லூர் பிரதேச செயலக அணி சம்பியானானது.

யாழ். மாவட்ட பிரதேச செயலகங்களிற்கிடையே நடைபெற்ற கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டியில் நல்லூர் பிரதேச செயலக அணிக்கும், கரவெட்டிப் பிரதேச செயலக அணிக்கும் இடையில் நடைபெற்றது. இதில் நல்லூர் பிரதேச செயலக அணி வெற்றிபெற்று யாழ். மாவட்ட சம்பியனாகத் தெிவு செய்யப்பட்டது.


நல்லூர் பிரதேச அணியில் தலையாழி இந்திரா விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த ஆறு வீரர்களும் அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த இரண்டு வீரர்களும், திருநெல்வேலி முத்துத்தம்பி விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த மூன்று வீரர்களும் பங்குபற்றியிருந்தனர். ஏற்கனவே நல்லூர் பிரதேச சம்பியானாக தலையாழி இந்திரா விளையாட்டுக்கழகம் தெரிவாகியமை குறிப்பிடத்தக்கது.

# ஊக்க மருந்து பாவனைக்கு கடுமையான நடவடிக்கை

(கொழும்பு)

ஊக்க மருந்து பாவனைக்கு எதிராக உரிய கடுமையான நடவடிக்கைகளை எடுக்கவுள்ளதாக விளையாட்டுத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார். மேலும், இவ்வாறான ஊக்கமருந்து பாவனைகள் அதிகரித்துச் சென்றால் நாட்டின் விளையாட்டுத் துறைக்கு பெரும் சவால் ஏற்பட்டுவிடும் என்பதால் அவற்றை தவிர்க்க பல நடவடிக்கைகள் முன்னெ டுக்கப்பட வுள்ளதாகவும் அவர் தெரிவித் துள்ளார்.

இதேவேளை, தேசிய தடை நிவாரண நிறுவனம் ஒன்றை தேசிய ரீதியில் அமைத்து அதனூடாக ஊக்கமருந்து பாவனையைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும், குறித்த நிறு வனம் பாடசாலை மட்ட வீரர்களையும், சர்வதேச மட்ட வீரர்களையும் கண்காணிக் கும் என அவர் தெரிவித்துள்ளார். இந்நிலையில், இச்செயற்திட்டத்தின் போது பயிற்றுவிப்பாளர்கள் மற்றும் விளையாட்டுக் கழகங்களும் கண்காணிக்கப்படும் என தெரிவித்துள்ளார்



சாந்தை விநாயகர் சனசமூக நிலையம் 51ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு அண்மையில் நடத்திய தாச்சி சுற்றுப் போட்டியில் வீரர்கள் அறிமுகம் செய்யப்படுவதைக் காணலாம். (கா)

# சைக்கிளோட்டப் போட்டி துரைராசா ரஜீம் முதலிடம்

(யாழ்ப்பாணம்)

புத்தூர் மேற்கு கலைமதி விளையாட்டுக்கழகத்தின் 37ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு நடாத்தப்பட்ட ஆண்களுக்கான சைக்கிள் ஓட்டப் போட்டியில் துரைராசா ரஜீம் முதலாமிடத்தைப் பெற்றுக் கொண்டார்.

புத்தூர் மேற்கு கலைமதி விளையாட்டுக்கழகத்தின் 37ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு யாழ். மாவட்ட சைக்கிள் ஓட்டப் பந்தய வீரர்களுக்கான 40 கிலோ மீற்றர் தூர சைக்கிள் ஓட்டப் போட்டி நேற்றுக் காலை நடைபெற்றது.

நேற்றுக் காலை கலைமதி விளையாட்டுக்கழக முன்றலில் ஆரம்பமான இப்போட்டி புன்னாலைக்கட்டுவன், பலாலி வீதி ஊடாக இலுப்பையடிச் சந்தியை அடைந்து, அங்கிருந்து ஆனைப்பந்தி சென்று, நல்லூர் பருத்தித்துறை வீதி ஊடாக வல்வை சென்று அங்கிருந்து அச்சுவேலி சென்று மீண்டும் கலைமதி விளையாட்டுக்கழக முன்றலில் நிறைவடைந்தது.

இதில் முதலாமிடத்தை துரைராசா ரஜீமும், இரண்டாமிடத்தை சண்முகநாதன் சுதாகரனும், மூன்றாமிடத்தை கனகரத்தினம் குஜிந்தனும் பெற்றுக் கொண்டனர்.

இப்போட்டி சிங்கர் பிளஸ் நிறுவனம் அனுசரணை வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

# மாவட்ட மட்ட போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட பாடசாலைகள் இடையே நடைபெற்ற இந்த வருடத்திற்கான மாவட்ட மட்ட விளையாட்டுப் போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற பாடசாலைகளின் விபரம் வருமாறு (ஆண்கள் பிரிவு)

**மேசைப் பந்தாட்டம் (19 வயதிற்குட்பட்டது)**
யாழ்.மத்திய கல்லூரி,
யூனியன் கல்லூரி,
யாழ்.இந்துக் கல்லூரி.

**சதுரங்கம் (15 வயதிற்குட்பட்டது)**
ஹாட்லிக் கல்லூரி
யாழ்.இந்துக் கல்லூரி,
மகாஜனக் கல்லூரி.

**சதுரங்கம் (19 வயதிற்குட்பட்டது)**
ஹாட்லிக் கல்லூரி
யாழ்.இந்துக் கல்லூரி,
சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

**பூப்பந்தாட்டம் (19 வயதிற்குட்பட்டது)**
மானிப்பாய் இந்துக் கல்லூரி
சென் ஜோன்ஸ் கல்லூரி,
உடுவில் மான்ஸ் ம.வி.

**கரம்போட் (15 வயதிற்குட்பட்டது)**
சென் ஜோன்ஸ் கல்லூரி
சென் பற்றிக்ஸ் கல்லூரி,
உடுவில் மான்ஸ் ம.வி.

**கரும்போட் (19 வயதிற்குட்பட்டது)**
கொக்குவில் இந்துக் கல்லூரி,
பற்றிக்ஸ் கல்லூரி,
உடுவில் ம.வி.

**உடற்பயிற்சி (19 வயதிற்குட்பட்டது)**
ஹாட்லிக் கல்லூரி,
அருணோதயாக் கல்லூரி,
ஹாட்லிக் கல்லூரி.

**கொக்கி (19 வயதிற்குட்பட்டது)**
யூனியன் கல்லூரி,
சென் ஜோன்ஸ் கல்லூரி.
யாழ்ப்பாணக் கல்லூரி.

**எல்லே (19 வயதிற்குட்பட்டது)**
ஹாட்லிக் கல்லூரி
நெல்லியடி ம.ம.வி
கொக்குவில் இந்துக் கல்லூரி.

**கபடி (19 வயதிற்குட்பட்டது)**
கலட்டி ஆர்.சி
ஹாட்லிக் கல்லூரி
வேலணை ம.வி

**ரென்னிஸ் (19 வயதிற்குட்பட்டது)**
சென் பற்றிக்ஸ் கல்லூரி
சென் ஜோன்ஸ் கல்லூரி
யாழ்.கல்லூரி

**கால்பந்தாட்டம் (17 வயதிற்குட்பட்டது)**
நெல்லியடி ம.ம.வி
தேவராலி இந்துக் கல்லூரி
ஏழாலை சிறிமுருகன் வி

**கால்பந்தாட்டம் (19 வயதிற்குட்பட்டது)**
மானிப்பாய் இந்துக் கல்லூரி
ஹாட்லிக் கல்லூரி
சென் பற்றிக்ஸ் கல்லூரி.

**கரப்பந்தாட்டம் (15 வயதிற்குட்பட்டது)**
உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன்
வசாவிளான் ம.ம.வி
விக்ரோறியா கல்லூரி

**கரப்பந்தாட்டம் (17 வயதிற்குட்பட்டது)**
அவாரங்கால் ம.வி.
சங்கானை சிவப்பிரகாச ம.வி..
அவாரங்கால் நடராசா ம.வி.

**கரப்பந்தாட்டம் (19 வயதிற்குட்பட்டது)**
புத்தூர் சேமஸ் கந்தா கல்லூரி,
இளவாலை ம.ம.வி,
மாதகல் சென் ஜேசப்.

**கூடை பந்தாட்டம் (19 வயதிற்குட்ப்பட்டது)**
யாழ்.மத்திய கல்லூரி, யாழ்.இந்துக் கல்லூரி, சென் பற்றிக்ஸ் கல்லூரி

**கிரிக்கட் (19 வயதிற்குட்பட்டது)** நெல்லியடி ம.ம.வி, கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரி, யாழ்.மத்திய கல்லூரி.

விளையாட்டுச் செய்திகள்

# தீவக வலய மட்ட மெய்வல்லுநர் போட்டி முடிவுகள்

தீவக வலயப் பாடசாலைகளுக்கு இடையே நடைபெற்ற மெய்வல்லுநர் போட்டிகளில் முதல் மூன்று இடங் களைப் பெற்றவர்கள் விபரம் கடந்த வெள்ளிக்கிழமை வெளியானது. அதன் தொடர்ச்சி வருமாறு:

13 வயதுக்குட்பட்ட பெண்கள் 100 மீற்றர் ஓட்டம்

எஸ்.மீரா எம்சியா (கரம்பொன் சிறிய புஸ்பம் மகளிர் ம.வி), கே.சாரங்கா (நயினாதீவு சிறிகணேசா கனிஷ்ட ம.வி), கே.கீர்த்தனா (சரவணை நாகேஸ்வரி வித்தி). 200 மீற்றர் ஓட்டம்

எஸ்.மீரா எம்சியா (கரம்பொன் சிறிய புஸ்பம் மகளிர் ம.வி), ஜே.கிருஷ்ணானந்தினி (வேலணை மத்திய கல்லூரி), கே.அபினோஜா (டாக்.தியாகராசா ம.ம.வி).

நீளம் பாய்தல்

ஜே.கிருஷ்ணானந்தினி (வேலணை மத்திய கல்லூரி), சி.கௌசல்யா (எழுவைதீவு முருகவேல் வித்தி), கே.கீர்த்தனா (சரவணை நாகேஸ்வரி வித்தி).

உயரம் பாய்தல்

எஸ்.மீரா எம்சியா (கரம்பொன் சிறி புஸ்பம் மகளிர் வித்தியாலயம்), ஜே.கிரு சாந்தினி (வேலணை மத்திய கல்லூரி), வி.தனுஜா (வேலணை மத்திய கல்லூரி).

4x100 மீற்றர் அஞ்சலோட்டம்

வேலணை மத்திய கல்லூரி, எழுவைதீவு முருகவேல் வித்தி, யாழ்ற்றன் கல்லூரி.

15 வயதுக்குட்பட்ட பெண்கள் 100 மீற்றர் ஓட்டம்

எஸ்.சுதேந்தினி (எழுவைதீவு முருகவேல் வித்தி), பி.கோபிகா (டாக்.தியாகராசா ம.ம.வி), எம்.கீதராணி (நயினாதீவு சிறிகணேசா கனிஷ்ட ம.வி).


200 மீற்றர் ஓட்டம்

ஏ.அமலவதனா (நெடுந்தீவு ம.வி), எஸ்.சுதேந்தினி (எழுவைதீவு முருகவேல் வித்தி), பி.கோபிகா (டாக்.தியாகராசா ம.ம.வி),

400 மீற்றர் ஓட்டம் கே.கிருஷா (சென்.மேரிஸ் ஆர்.சி.மகளிர் வித்தி), ஏ.மேரி எரோமி (அல்லைப்பிட்டி பராசக்தி ம.வி), என். ரம்சனா (வேலணை மத்திய கல்லூரி). (தொடரும்)





சிங்கர் பிளஸ் நிறுவனத்தின் அனுசரணையில் கலைமதி விளையாட்டுக் கழகத்தின் 37 ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு நேற்று ஆண்களுக்கான சைக்கிள் ஓட்டப்போட்டி நடைபெற்றது இப்போட்டியை புதிய ஜனநாயக லெனின் சோசலிசக் கட்சியின் வடபிராந்திய செயலாளர் க.கதிர்காமநாதன் (செல்வம்) கொடியசைத்து ஆரம்பித்து வைப்பதை முதலாவது படத்திலும், போட்டியாளர்கள் மிகவும் வேகமாகச் செல்வதை இரண்டாவது படத்திலும், போட்டியாளர் ஒருவர் தனது இலக்கை அடைவதை மூன்றாவது படத்திலும் காணலாம். (கா)




# கிம் கிளிஸ்டர்ஸ் அதிர்ச்சித் தோல்வி

(பரீஸ்)

பிரான்ஸ் தலைநகர் பரீஸில் நடைபெற்று வரும் பிரெஞ்ச் ஓபன் கிராண்ட்ஸ்லாம் டென்னிஸ் போட்டியில் முன்னணி வீராங்கனை கிம் கிளிஸ்டர்ஸ் அதிர்ச்சித் தோல்வியடைந்தார்.

பிரான்ஸ் தலைநகர் பரீஸ் நகரில் கிராண்ட்ஸ்லாம் தொடர்களில் ஒன்றான பிரெஞ்ச் ஓபன் டென்னிஸ் தொடர் நடக்கிறது. இதில் இன்று நடந்த பெண்கள் ஒற்றையர் இரண்டாவது சுற்றில் பெல்ஜியத்தின் கிம் கிளைஸ்டர்ஸ், நெதர்லாந்தின் அரன்ட்ஸா ர்' மோதினர்.

முதல் செட்டை 6-3 என கைப்பற்றிய கிளைஸ்டர்ஸ், இரண்டாவது செட்டை 5-7 என போராடி கோட்டைவிட்டார். வெற்றியாளரை நிர்ணயிக்கும் மூன்றாவது சுற்றில் மீண்டும் சொதப்பிய கிளைஸ்டர்ஸ் 1-6 என இழந்தார். இறுதியில் கிளைஸ்டர்ஸ் 6-3, 5-7, 1-6 என்ற செட் கணக்கில் அதிர்ச்சி தோல்வி அடைந்து வெளியேறினார்.

# கெய்லின் விளாசலில் வென்றது பெங்களூர்




ஐ.பி.எல்., "பிளே ஒப்" சுற்றில் நேற்று மும்பை இந்தியன்ஸ், பெங்களூர் ரோயல் சலஞ்சர்ஸ் அணிகள் மோதின. நாணயச் சுழற்சியில் வென்ற மும்பை அணி களத் தடுப்பை தெரிவுசெய்து கொண்டது. முதலில் துடுப்பெடுத்தாடிய பெங்களூர் ரோயல் சலஞ்சர்ஸ் 4 விக்கெட்டுக்க்ள் இழப்பிற்கு 185 ஓட்டங்கள் பெற்றது.

186 ஓட்டங்களை வெற்றி இலக்காகக்கொண்டு களமிறங்கிய மும்பை இந்தியன்ஸ் அணி 20 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட் இழப்பிற்கு 142 ஓட்டங்களை எடுத்து போட்டியில் இருந்து வெளியேறியது. இதில் கிறிஸ் கெய்ல் 47 பந்துகளுக்கு 89 ஓட்டங்களை எடுத்து ஆட்ட நாயகனாகத் தெரிவுசெய்யப்பட்டார். இன்று இறுதிப் போட்டியில் சென்னை சுப்பர கிங்ஸ் அணியை பெங்களூர் ரோயல்ஸ் சந்திக்கிறது.

# மீண்டும் நிரூபணம்

ரோம் நகரில் நடைபெற்ற 100மீற்றர் சர்வதேச தடகளப் போட்டியில் அச∴பா போவெ லைக் காட்டிலும் இரண்டு வினாடி கள் முந்திச் சென்று உசைன் போல்ட் தனது திறமையை மீண்டும் ஒரு முறை நிரூபித்தார். கடைசி 20மீ தூரத்தில் புயல் வேகம் பெற்ற உசைன் போல்ட் 9.91 வினாடிகளில் இலக்கைக் கடந்து சாதனை புரிந்தார். அச∴பா போவெல் 9.93 வினாடிகளில் இலக்கைக் கடந்து இரண்டாவது இடம் பெற்றார். பிரான்ஸ் வீரர் கிறிஸ்டோபி லெமாய்த்ரு 10 வினாடிகளில் இலக்கை எட்டி 3-வது இடம் பிடித்தார். எனக்கு இது திருப்தி அளிக்கவில்லையென்றாலும், வெற்றி பெறுவது அவசியம் என்று கருதினேன் என்றும் அது நிறைவேறியதால் தற்போது இந்த தொடரின் இரண்டாவது பந்தயத்தை எதிர்நோக்குவதாகவும் உசைன் போல்ட் தெரிவித்தார்.

# இந்திய கிரிக்கெட் அணி மேற்கிந்தியா செல்கிறது

யூன் 4 முதல் 10 வரை இடம்பெற இருக்கும் மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கும், இந்திய அணிக்கு இடையிலான கிரிக்கெட் தொடரில் 5 ஒருநாள் போட்டிகள், 3 டெஸ்ட் போட்டிகள் மற்றும் ஒரு 20க்கு 20 போட்டியும் இடம்பெற உள்ளன. ஒருநாள் போட்டிக்கு சுரேஷ் ரெய்னாவும், டெஸ்ட் அணிக்கு தோனியும் தலைமை தாங்குகின்றனர்கள்.

சச்சின் டெண்டுல்கர், விரேந்திர சேவாக், யுவராஜ் சிங், கௌதம் கம்பீர் ஆகியோர் மேற்கிந்திய தீவுகள் செல்லும் அணியில் இடம்பெறவில்லை.

ஒருநாள் போட்டி அணி

சுரேஷ் ரெய்னா (தலைவர்), ஹர்பயன் சிங், ஆர்.அஸ்வின், எஸ் பத்திரிநாத், விறாட் ஹோலி, பிரவீன்குமார், அமிட் மிஸ்ரா, முனாப் பட்டேல், பிரதீப் பட்டேல் (விக்கெட் காப்பாளர்), யூசுப் பாதன், வித்திரிமன் சஹா (விக்கெட் காப்பாளர்), இஷாந் சர்மா, ரோகித் சர்மா, வினய் குமார், மனோச் திவாரி, சிஹார் டிவான் ஆகியோர் பங்கு பற்றுகின்றனர்.

டெஸ்ட் போட்டி அணி

மகேந்திர சிங் தோனி (தலைவர், விக்கெட் காப்பாளர்) விவிஎஸ் லக்மன், முரளி விஜய், அபிநாப் முகுந், ராகுல் ராவிட், விராட் ஹோலி, சுப்பிரமணியம் பத்திரிநாத், ஹர்பஜன் சிங், இஷாந் சர்மா, சாந்தகுமரன் ஸ்ரீநாத், அமிட் மிஸ்ரா, பர்ஜன் ஒபுஜா, சஹீர்கான், முனாப் பட்டேல், சுரேஷ் ரெய்னா, பிரதீப் பட்டேல் (விக்கெட் காப்பாளர்) ஆகியோா பங்குபற்றுவர்

# பாகிஸ்தான் அணிக்கு எதிர்காலத் தலைவர்

(லாகூர்)

பாகிஸ்தான் சகலதுறை வீரர் மொகமட் ஹபீஸ் அனைத்துப் போட்டிக்குமான தலைவராக எதிர்காலத்தில் செயற்படுவார் என பாகிஸ்தான் கிரிக்கெட் சபைத் தலைவர் இஜாஸ்பட் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் கூறியதாவது: அணியில் இரண்டு தலைவர்கள் இருந்தால் வீரர்கள் மத்தியில் பிளவு ஏற்படுகிறது.

அப்ரிடி பயிற்சிப் போட்டியில் இருந்து ஓய்வு பெற்று விட்டார். எனவே பயிற்சிப் போட்டி, ஒருநாள் போட்டி மற்றும் 20-20 ஆகிய மூன்று போட்டிகளுக்கும் ஒரே தலைவராக மிஸ்பாவை நியமித்திருக்கிறோம்.

அவர் அடுத்த சில மாதங்கள் தலைவராக இருப்பார். அவருக்குப்பின் முகமட் ஹபீஸ் அனைத்து போட்டிகளுக்கும் தலைவராக நியமிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் கிரிக்கெட் சபை நிதானமற்ற வகையில் நடந்து வருவதாகவும், இதன் மூலம் பாகிஸ்தான் கிரிக்கெட் பெரும் பின்னடைவுகளை சந்திக்க வாய்ப்பிருப்பதாகவும், மொகமட் ஹபீஸ் சிறந்த சகலதுறை வீரர், சிறப்பாக ஆடிவரும் ஹபீஸுக்கு நெருக்கடியை ஏற்படுத்தும் ஒரு செயல் இது எனவும் கிரிக்கெட் விமர்சகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

# வெளிநாடுகளில் டெஸ்ட் தொடரை வென்று திறமையை இந்தியா நிரூபிக்க வேண்டும்

(லண்டன்)

இந்தியா டெஸ்ட் தரநிலையில் முதலிடம் பிடித்தது இந்தியாவில் பெரும்பாலும் பெற்ற வெற்றிகளினாலேயே, இதனால் அயல்நாட்டில் டெஸ்ட் தொடரை வென்று இந்தியா நிரூபிக்க வேண்டியுள்ளது என இயன் போத்தம் தெரிவித்துள்ளார்.

இந்தியா நம்பர் 1 இடத்தைப் பிடித்தது தங்கள் உள்நாட்டில் நல்ல முறையில் கிரிக்கெட் ஆட்டத்தை வெளிப்படுத்தியதினாலேயே. ஆனால் அவர்கள் பங்களாதேஷையும், நியூசிலாந்தையும் மட்டுமே அயல்நாட்டில் டெஸ்ட் தொடரில் வீழ்த்தியுள்ளனர். அதாவது கடந்த 6 அயல்நாட்டு கிரிக்கெட் பயணங்களில் இந்தியா இந்த இரண்டு தொடர்களைத்தான் வென்றுள்ளது. எனவே இந்தியா இங்கிலாந்தில் நிரூபிக்க வேண்டியுள்ளது என்று கூறுகிறார் போத்தம்.

ஜூலை மாதம் இந்திய அணி இங்கிலாந்து பயணம் மேற்கொண்டு 3ஆம் நிலையில் உள்ள அந்த அணியை 4 டெஸ்ட் போட்டிகளில் சந்திக்கிறது.

அதேபோல் இயன் போத்தம் ஐ.சி.சி.யின் தரவரிசைக் கோட்பாட்டின் மீது நம்பிக்கை கொண்டவரல்ல என்பதையும் தெரிவித்தார். இங்கிலாந்து சிறந்த டெஸ்ட் அணி.

ஸ்ட்ராஸ் தலைமையில் கடைசி 6 தொடர்களில் வெற்றி பெற்றுள்ளது.

இங்கிலாந்து அணிதான் சிறப்பான டெஸ்ட் கிரிக்கெட் ஆட்டத்தை வெளிப்படுத்தி வருகிறது என்று கூறுகிறார் போத்தம்.

# முதல் இனிங்ஸில் இலங்கை 400

இலங்கைக்கும் இங்கிலாந்துக்கும் இடையிலான டெஸ்ட் போட்டியின் இரண்டாவது நாளான நேற்று இலங்கை அணி முதல் இனிங்ஸில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 400 ஓட்டங்கள் பெற்றது.

ஜெயவர்த்தன 112, பரணவிதான 66, சமரவீர 58, டில்சான் 50 ஓட்டங்கள் எடுத்தனர். தொடர்ந்து இங்கிலாந்து தனது முதலாவது இனிங்ஸில் ஒரு விக்கட் இழப்பிற்கு 47 ஓட்டங்கள் எடுத்திருந்தது. அணித்தலைவர் ஸ்ட்ரோஸ் 20 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

# சாதனை சமன்

(பரீஸ்)

தொடர்ச்சியாக அதிக போட்டிகளில் வெற்றி பெற்ற பெடரரின் சாதனையை சமன் செய்தார் சேர்பியாவின் நோவோக் ஜோகோவிச்.

பிரெஞ்ச் ஓபன் டென்னிஸ் கிராண்ட் ஸ்லாம் போட்டிகளில் ஆடவர் ஒற்றையர் போட்டியில் 2ஆவது சுற்றுப் போட்டியில் வென்றதையடுத்து தொடர்ச்சியாக 41ஆவது போட்டியை வென்று அதிகப் போட்டிகள் தொடர்ச்சியாக வென்ற அளவில் ∴பெடரரை சமன் செய்தார்.



# ஊழல் மோசடியில் திணறும் சர்வ்தேச கால்பந்து அமைப்பு

ஊழல் விவகாரத்தில் சர்வதேச கால்பந்து அமைப்பு பிபா தவித்து வருகிறது.

இந்த அமைப்பின் தலைவர் வேட்பாளர் முகமது பின் ஹம்மம் மற்றும் துணைத்தலைவர் ஜக் வோர்னர் மீது 40 ஆயிரம் டொலர் லஞ்சக் குற்றச்சாட்டு உள்ளது. இந்த இரு தலைவர்களும் பிபா விசாரணைக் கமிட்டி முன்பாக நாளை ஆஜராகிறார்கள். அவர்கள் மீதான குற்றச்சாட்டு உறுதிபடுத்தப்பட்டால், இவர்கள் நீண்ட காலம் கால்பந்து அமைப்பில் செயற்பட முடியாத தடை விதிக்கப்படும்.

இருவர் மீதும் லஞ்ச ஊழல் குற்றச்சாட்டை பிபா செயற்குழு உறுப்பினர் சக்பிளேசர் சுமத்தி உள்ளார். பிபா அமைப்பு தலைவர் பதவிக்கான தேர்தல் புதன்கிழமை நடக்கிறது. இந்த தலைமை பதவிக்கு செப்பிளாட்டரும், லஞ்ச ஊழல் குற்றச்சாட்டு சுமத்தப்பட்ட பின் ஹம்மமும் போட்டியிடுகின்றனர்.

தன் மீதான ஊழல் குற்றச்சாட்டு குறித்து பின் ஹம்மம் கூறுகையில், தான் ஆதாயம் பெற பிளேட்டர் செய்த சதி என்றார். கட்டார் 2022 ஆம் ஆண்டு உலகக்கிண்ணக் கால்பந்து போட்டியை நடத்த முயற்சி மேற்கொண்டது. உலகக்கிண்ணக் கால்பந்து போட்டியை நடத்தும் அனுமதியை பெற பிபாவின் இதர 2 உறுப்பினர்களுக்கு கட்டாரில் இருந்து `லஞ்சம் தரப்பட்டுள்ளது என டாமியன் காலின்ஸ் எம்.பி. நாடாளுமன்றத்தில் குற்றஞ்சாட்டி உள்ளார்.

# இராணுவம் நடத்தும் போர்க் கருத்தரங்கில் தென்கொரியா பங்கேற்கக் கூடாது

## மனித உரிமை கண்காணிப்பக பணிப்பாளர் கோரிக்கை



(கொழும்பு)

இலங்கை இராணுவம் நடத்தவுள்ள போர்க்கருத்தரங்கில் தென்கொரியா பங்கேற்கக் கூடாது என்று தென்கொரிய ஊடகம் ஒன்றில் மனிதஉரிமைகள் கண் காணிப்பகத்தின் ஆசிய பசுபிக் பிராந்திய பணிப்பாளர் பிரட் அடம்ஸ் கோரிக்கை விடுத்துள்ளார்.

'ஜுங்அங் டெய்லி' என்ற தென் கொரிய ஊடகத்தில் இலங்கையின் மனிதஉரிமை மீறல்கள், போர்க்குற்றங் களைச் சுட்டிக்காட்டியுள்ள பிரட் அடம்ஸ்,இலங்கை இராணுவத்தின் போர்க்கருத்தரங்கை ஏனைய நாடுகளுடன் இணைந்து தென்கொரி யாவும் புறக்கணிக்க வேண்டும் என்று அழைப்பு விடுத்துள்ளார்.

இலங்கையின் மோசமான முன்னு தாரணத்தை ஏனைய நாடுகளுக்கு ஏற்று மதி செய்வதற்கு நடத்தப்படும் இந்தக் கருத்தரங்கை அமெரிக்கா, கனடா, பெரும்பாலான ஐரோப்பிய நாடுகள், ஜப்பான், அவுஸ்ரேலியா போன்றவற்று டன் இணைந்து தென்கொரியாவும் புறக்கணிக்க வேண்டும் என்றும் அவர் கோரியுள்ளார்.

தெனிகொரியா இதில் பங்கேற்க வுள்ளதாக கூறியுள்ள நிலையில், இந்த மாநாட்டில் பங்கேற்றாலும் கூட, போர்க் குற்றங்கள் தொடர்பான சுதந்திரமான அனைத்துலக விசாரணைக்கு தென் கொரியா அழைப்பு விடுக்க வேண்டும் என்றும் பிரட் அடம்ஸ் கோரிக்கை விடுத்துள்ளார்

# பல்கலைக் கழகங்களை மூடியாவது பகிடிவதை இல்லாதொழிக்கப்படும்

## அமைச்சர் திஸநாயக்க சூளுரை

(கொழும்பு)

பல்கலைக்கழகங்களை மூடியேனும் பகிடிவதைகளை இல்லாதொழிக்கவுள்ள தாக உயர்கல்வி அமைச்சர் எஸ்.பீ.திஸா நாயக்க தெரிவித்துள்ளார்.

கடந்த வருடத்தில் 80 சதவீதம் பல் கலைக்கழக பகிடிவதைகளை இல்லா தொழிக்க தம்மால் முடிந்துள்ளதென அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் உரையாற்றுகையிலேயே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அத்துடன் பல்கலைக்கழக விரிவுரை யாளர்களின் ஊதியத்தை அதிகரிக்க படிப்படியாக நடவடிக்கை எடுக்கவுள்ள தாகவும் அமைச்சர் தெரிவித்தார்.



இது தொடர்பான மற்றுமொரு கலந்துரையாடல் பல்கலைக்கழக விரி வுரையாளர்கள் சம்மேளனத்திற்கும் ஜனாதிபதிக்கும் இடையில் எதிர்வரும் மூன்றாம் திகதி இடம்பெறவுள்ள தாகவும் அமைச்சர் எஸ்.பீ.திஸாநாயக்க குறிப் பிட்டார்.

# நிபுணர் குழுவின் அறிக்கை குறித்து எகிப்து, ருமேனியாவிற்கு விளக்கம்

(கொழும்பு)

**வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், இந்தோனேசியாவில் எகிப்து வெளிவிவகார அமைச்சருடன் இலங்கை நிலைமைகள் குறித்து கலந்து ரையாடியுள்ளார்.**

அணிசேரா நாடுகளின் வெளிவிவ கார அமைச்சர்களின் மாநாட்டுக்காக பாலித்தீவு சென்றுள்ள ஜி.எல்.பீரிஸ், இந்த மாநாட்டில் கலந்து கொள்ள வரும் பல்வேறு நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்களையும் தனியாகச் சந்தித்துப் பேசத் திட்டமிட்டிருந்தார்.

ஆனால், இந்தோனேசியாவில் கடந்த இரண்டு நாட்களாகத் தங்கியிருந்த அவரால்- நேற்றுமுன்தினம் வரை எகிப்து வெளிவிவகார அமைச்சர் நபில் அல் அரபியை மட்டுமே சந்தித்துப் பேச முடிந்துள்ளது.

அதேவேளை, ருமேனிய வெளிவிவ கார அமைச்சர் டொரு கோஸ்ரியாவை இலங்கையின் பிரதி வெளிவிவகார அமைச்சர் நியோமல் பெரேரா தனியாகச் சந்தித்துப் பேசியுள்ளார்.

இந்த இரு நாடுகளினதும் வெளிவிவ கார அமைச்சர்களுக்கும், இலங்கையின் தற்போதைய நிலைமைகள் குறித்தும், ஐ.நாவின் போர்க்குற்ற அறிக்கை தொடர்பான இலங்கையின் நிலைப்பாடு குறித்தும் விளக்கமளிக்கப்பட்டுள்ளது.



120நாடுகளின் வெளிவிவகார அமைச் சர்கள் பங்கேற்கும் இந்தக் கூட்டத்தில் இலங்கை வெளிவிவகார அமைச்சரால் இரண்டு நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்களையே இதுவரை சந்திக்க முடிந்துள்ளது.

பெரும்பாலான நாடுகள் இருதரப்பு, பலதரப்பு உறவுகளை வலுப்படுத்துவதற் கும்,பொருளாதார,வர்த்தக உறவு களைப் பலப்படுத்திக் கொள்வதற்குமே இந்தச் சந்திப்பில் முன்னுரிமை கொடுத்து வருகின்றன.

இதனால் பல நாடுகளின் வெளி விவகார அமைச்சர்களை இலங்கை வெளிவிவகார அமைச்சர் பீரிசினால் அணுக முடியாதுள்ளதாகவும் தகவல் கள் தெரிவிக்கின்றன.

# ஜனாதிபதியுடனான சந்திப்பில் தீர்மானம் எதுவும் எடுக்கவில்லை

## பல்கலை ஆசிரிய சம்மேளனம் அதிருப்தி

(கொழும்பு)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடனான பேச்சுவார்த்தையில் எந்தவித சாதகமான பதிலும் கிடைக்கவில்லையென தெரிவித்துள்ள பல்கலைக்கழக ஆசிரியர்களின் சங்கங்களின் சம்மேளனம் தமது தொழிற்சங்க நடவடிக்கைகளை கைவிடமாட்டோ மெனவும் குறிப்பிட்டுள்ளது.

கல்வித்துறைசார் ஊழியர்கள் சம்பளப் பிரச்சினையை ஜனாதிபதி ஏற்றுக் கொண்டார். இருப்பினும் இதனை எந்தவொரு தீர்மானமும் எடுக்கப்படவில்லையென பல்கலைகக்கழக ஆசிரியர்களின் சங்கங்களின் சம்மேளனத்தின் தலைவர் நிர்மல் ரஞ்சித் தேவசிறி தெரிவித்தார்.

ஜனாதிபதிக்கும் பல்கலைக்கழக ஆசிரியர்களின் சங்கங்களின் சம்மேளன உறுப பினர்களுக்கும் இடையிலான மற்றுமொரு சந்திப்பு எதிர்வரும் ஜுன் மாதம் 3ஆம் திகதி நடைபெறவுள்ளதாகவும் அவர் கூறினார்.

# உத்தேச தனியார்துறை ஓய்வூதியத் திட்டத்தில் 50 வயதிற்கு உட்பட்டவர்கள் இணைவது கட்டாயம்



(கொழும்பு)

அரசாங்கம் விரைவில் அமுல்படுத்த விருக்கும் தனியார்துறை ஊழியர்களுக் கான ஓய்வூதியத்திட்டத்தில் அங்கத்த வராக இணைந்து கொண்ட ஒருவர் 50 வயது முதல் 60வயதுக்கு உட்பட்ட காலகட்டத்தில் மரணமடைந்தால் அவரது மனைவிக்கு ஓய்வூதியத் தொகையில் 60 சதவீதம் சேமிப்பு வழங்கப்படும்.

இதேவேளையில் 60 வயதை தாண் டிய பின்னர் ஓய்வூதியத்தை பெற்றுக் கொண்டிருப்பவர் மரணமடைந்தால் அவருக்கு வழங்கப்படும் ஓய்வூதியம் அவரது மனைவிக்கோ குடும்பத்தாருக் கோ கொடுக்கப்படமாட்டா தென்றும் நிதி திட்டமிடல் அமைச்சின் செயலாளர் கலாநிதி பி.பி. ஜெயசுந்தர தெரிவித்தார்.

இலங்கை மன்றக் கல்லூரியில் நடந்த தனியார் துறை ஊழியர்களுக் கான ஓய்வூதியம் பற்றிய கருத்தரங்கில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கை யில், தனியார் ஓய்வூதியத் திட்டத்தில் அங்கத்தவராக சேர்ந்து கொள்ளும் ஒரு வரின் ஊழியர் சேமலாப நிதியம், ஊழி யர் நம்பிக்கை நிதியம், மற்றும் பணிக் கொடை கொடுப்பனவுகளுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது. சம்பந்தப்பட்ட அங் கத்தவர் இந்த சலுகைகளை தங்கு தடை யின்றி பெற்றுக் கொள்ளவும் முடியும்.

இலங்கையில் நடைமுறையில் இருக்கும் தொழில் சட்டங்களுக்கு ஏறப பெரும்பாலும் ஒருவர் 57 வயதில் இளைப்பாறுவதுண்டு. எனினும் தனியார் ஓய்வூதியத் திட்டத்தில் சேர்ந்து கொண்ட ஒருவர் 57 வயதில் இந்த ஓய்வூதியத்தை பெறும் தகுதியை அடையமாட்டார். அவர் 60வயதை பூர்த்தி செய்த பின்னரே அவருக்கு இந்த ஓய்வூதியம் வழங்கப்படும்.

இந்தச் சட்டத்தின்படி 50 வயதுக்கு குறைவான தனியார் துறை ஊழியர்கள் கட்டாயம் இவ் ஓய்வூதியத்திட்டத்தில் இணைந்து கொள்ள வேண்டும் 50 வயதுக்கு மேற்பட்ட ஊழியர்கள் விரும்பினால் மாத்திரமே இந்த ஓய் வூதியத் திட்டத்தில் சேர்ந்து கொள்ள முடியும். ஆயினும் ஒருவர் 50 வயதிற்கு பிறகு இந்த ஓய்வூதியத் திட்டத்திற்கு சேர்ந்து 60 வயதாகும் போது இளைப் பாறினால் அவருக்கும் இந்த ஓய்வூதி யத்திட்டத்தின் மூலம் பயனடைய முடி யும். தனியார் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் ஒருவர் 10 ஆண்டு காலம் சேவை யை பூர்த்தி செய்த பின்னரே ஓய்வூதியம் பெறும் தகுதியை பெறுகிறார்.

ஒருவர் 7 ஆண்டுகளை பூர்த்தி செய்த பின்னர் சேவையில் இருந்து இளைப்பாறும் சந்தர்ப்பத்தில் அவர் எஞ்சிய மூன்று ஆண்டுகளுக்கு செலுத்த வேண்டிய ஓய்வூதியக் கொடுப் பனவுகளை தமக்கு கிடைக்கும் ஊழியர் சேமலாப நிதிய, ஊழியர் நம்பிக்கை நிதிய மற்றும் பணிக்கொடையில் இருந்து அதற்கான மூன்று ஆண்டுகளுக்கான முழுத் தொகையையும் செலுத்திய பின் னர் ஓய்வூதியத்தை 60 ஆவது வயதில் பெறும் தகுதியை அடைவார்.

இந்த ஓய்வூதியத் திட்டத்திற்கு ஊழி யர் ஒருவரின் அடிப்படை சம்பளத்தின் 2சதவீதத்தையும், அவர் பணியாற்றும் நிறுவனம் 2சதவீதத்தையும் மாதாந்தம் செலுத்த வேண்டும். இந்த ஓய் வூதியத் திட்டத்தில் மூன்று வெவ்வேறு பிரிவைச் சேர்ந்தவர்கள் இணைந்து கொள் வதற்கான வாய்ப்பை பெறுகிறார்கள். ஒரு சாரார் தனியார்துறை நிறுவன மொன்றில் தொழில் புரிபவர்கள். இரண் டாவது பிரிவினர் வெளிநாட்டில் தொழில் புரியும் இலங்கையர். மூன்றா வது பிரிவினர் சுயதொழில் முயற்சிகளில் ஈடுபடுபவர்களாவர்.

இதேவேளை 2025ஆம் ஆண்டில் இலங்கையின் சனத்தொகையில் 60 வயதிற்கு கூடியவர்கள் 20சதவீதம் இருப் பார்கள். அவர்களுக்கு தங்கள் வாழ்க் கையின் இறுதிக் காலத்தை மற்றவர் களை நம்பி வாழாமல் கௌரவ மான முறையில் வாழ உதவும் உன்னத திட்டத்திற்கு அமையவே இந்த ஓய்வூதியத் திட்டம நடைமுறைப்படுத்தப்படுகிற தென்று அவர் மேலும் கூறினார்.

## தொலைத்தொடர்பு உரிமையாளரை தொலைபேசி மூலம் அச்சுறுத்தியவர் எச்சரிக்கை செய்யப்பட்டு விடுதலை

(மானிப்பாய்)

வேறு நபரின் தொலைபேசி 'சிம்' அட்டையைத் தவறான முறையில் பயன்படுத்தி தொலைத் தொடர்பு உரிமையாளர் ஒருவரை அச்சுறுத்தியவர் பொலிஸாரினால் கடுமையாக எச்சரிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டார்.

ஆனைக்கோட்டை மூத்த நயினார் ஆலயத்திற்கு அண்மையதாக இயங்கும் தொலைத் தொடர்பு நிலையத்திற்கு தொலைபேசி ஊடாக அச்சுறுத்தினார் என்ற சந்தேகத்தில் மானிப்பாய் பொலிஸார் சுழி புரத்தைச் சேர்ந்த தயாபரன் என்பவரை விசாரணை செய்தனர்.

அதன் போது குறித்த நபர் தொலை பேசி மூலம் அச்சுறுத்தியதை ஏற்றுக்கொண்டுள்ளார்.

தான் தொலைபேசியை ஒருவரிடம் இருந்து கொள்வனவு செய்த தாகவும், அதனுடன் சேர்த்து வாங்கிய 'சிம்' அட்டை மூலமே அச்சுறுத்தியதாகவும் விசாரணையின்போது தெரிவித்துள்ளார்.

இவரது குறித்த 'சிம்' அட்டையைக் கைப்பற்றிய பொலிஸார் வேறு ஒருவரின் அடையாள அட்டை விபரத்துடன் உள் 'சிம்' அடடையை தவறாகப் பயன்படுத்தியதற்காக தாம் குறித்த நிறுவனம் ஊடாக விபரங்களைப் பெற்றிருந்தால் குறித்த அப்பாவி நபர் மீது வீணாகக் குற்றம் சுமத்தப்பட்டிருக்கும் எனவும், இனி இது போன்ற செயற்பாடுகளில் ஈடுபடக் கூடாது என எச்சரித்து குறித்த 'சிம்' அட்டையை செயலிழக்கச் செய்தனர்.

கடை உரிமையாளர் குறித்து இளைஞரின் உறவினர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க மன்னித்து தனது முறைப்பாட்டை மீளப் பெற்றுக் கொண்டார்.

## சங்கானையிலுள்ள உணவகங்கள் வெதுப்பகங்கள் மதிப்பீட்டுப் படிவத்தை நடைமுறைப்படுத்த வேண்டும்

### விளக்கமளிப்புக் கூட்டத்தில் அறிவுறுத்து

(சங்கானை)

சங்கானை பொது சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட உணவு கையாளும் நிலையங்கள். உணவகங்களுக்கான புதிய மதிப்பீட்டுப் படிவத்தை நடைமுறைப்படுத்துதல் தொடர்பாக உரிமையாளர்களுக்கு விளக்கமளிக்கும் கூட்டம் கடந்த புதன்கிழமை சங்கானை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் நடைபெற்றது.

சங்கானை மேற்பார்வை பொதுப் பரிசோதகர் எஸ்.ரதீசன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிராந்திய தொற்று நோய் தடுப்பு அதிகாரி வைத்திய கலாநிதி எஸ்.சிவகணேசன், மாவட்ட உணவு மருந்துப் பரிசோதகர் பி.சிவரூபன், மாவட்ட மேற்பார்வைப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் திவ்ய குமார், பிராந்திய பயிற்சி நிலைய போதனாசிரியர் சதீஸ், சங்கானை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் கிருபன் ஆகியோர் கலந்து கொண்டு விளக்கமளித்தனர்.

இப்பிரதேசத்தைச் சேர்ந்த வெதுப்பகங்கள், உணவு உற்பத்தி நிறுவனங்கள், விற்பனை நிறுவனங்கள் போன்றவற்றைச் சேர்ந்தவர்கள் சுமார் 60 பேர் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

உணவுப் பொருட்கள் சுகாதாரம் பேணப்படாமையால் ஏற்படும் விபரீதங்களைத் தடுக்கும் வகையில் எதிர்வரும் முதலாம் திகதி முதல் உணவகங்களின் சுகாதாரம் அதி உச்ச நிலையில் பேணப்படவேண்டும்.

முதலாம் திகதி முதல் அனைதது உணவு கையாளும் நிலையங்களில் புதிய மதிப்பீட்டுப் படிவம் நடைமுறைப்படும். அதன் பின்னர் சுகாதாரம் உச்சநிலையில் பேணாதவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனச் சுகாதாரத் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது. (கா)

## ஆயுர்வேத மருத்துவ சேவை மண்டைதீவில் ஆரம்பம்

(வேலணை)

வேலணை பிரதேச சபையினால் மண்டைதீவு உப அலுவலகப் பகுதி மக்களுக்கான இலவச ஆயுர்வேத மருத்துவ சேவை கடந்த புதன்கிழமை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இம்மருத்துவ சேவை வேலணைப் பிரதேச சபையின் செயலாளர் கெ.தவராசா அவர்களின் முன்னிலையில் வேலணை பிரதேச சபையின் புங்குடுதீவு உப அலுவலக ஆயுர்வேத வைத்திய உத்தியோகத்தர் செல்வநாதன் ஆரம்பித்து வைத்தார்.

இச்சேவை வாரம் ஒருமுறை நடாத்தப்படம் என்பதுடன் காலை 9 மணிமுதல் மாலை 2 மணிவரை இம் மருத்துவச் சேவையினை மக்கள் பெற்றுக்கொள்ள முடிவும் எனவும் பிரதேச சபையினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

## ௮௯ ஆவது கூட்டுறவு தின விழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டி முடிவுகள் வருமாறு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபையினால் 89 ஆவது கூட்டுறவுத் தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட பாடசாலை மட்டப் போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களின் விபரம் வருமாறு -

***பாடசாலைப்போட்டிகள்***

*கலாச்சார குழு நடனம*

யாழ். வட்டு இந்துக் கல்லூரி, மாதகல் சென்.ஜோசேவ் மகா வித்தியாலயம், சென். மேரிஸ் றாமன் கத்தோலிக்க மகா வித்தியாலயம்.

*பொது அறிவு*

யாழ். சாவகச்சேரி இந்துக் கல்லூரி, சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி, மாதகல் சென். ஜோசேவ மகாவித்தியாலயம்.

*கவிதை*

பொ.கஜவதனி (தெல்லிப்பளை மகாஜனா கல்லூரி), ப.கீதாஞ்சலி (கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம்), நா. கம்சிகா (இளவாலை மெய்கண்டான் வித்தியாலயம்).

*நாடகம்*

சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி.

*விவாதம்*

யாழ். மத்திய கல்லூரி, யாழ். இந்துக் கல்லூரி, யாழ். சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி.

**சங்கங்களிடையே நடத்தப்பட்ட போட்டியில் முதல், இரண்டு, மூன்று இடங்களைப் பெற்றவர்களின் விபரம் வருமாறு -**

*கரப்பந்தாட்டம்*

அச்சுவேலி. ப.தெ.வ.அ.கூ. சங்கம், சுன்னாகம் ப.நோ.கூ. சங்கம்.

*வலைப்பந்தாட்டம்*

பண்டத்தரிப்பு ப.தெ.வ.அ.கூ. சங்கம், பண்டத்தரிப்பு மகளிர் சி.க.வ.கூ.சங்கம்.

*துடுப்பந்தாட்டம்*

உடுப்பிட்டி ப.நே.கூ.சங்கம், சுன்னாகம் ப.நோ.கூ.சங்கம்.

*100 மீற்றர் ஆண்*
*(40 வயதிற்கு மேல்)*

தி.சுரேஸ் (சுன்னாகம் ப.தெ.வ.அ.கூ.சங்கம்), கோ.கௌரிதாசன் (யா.மா.சி.க.வ.கூ.ச.சமாசம்), க.செல்வரத்தினம் (தெல்லிப்பளை ப.தெ.வ.அ.கூ.சங்கம்).

*100 மீற்றர் பெண்*
*(40 வயதிற்கு மேல்)*

த.ஜெகதீஸ்வரி (யா.மா.சி.க.வ.கூ.ச.சமாசம்), பு.நாகராணி (பண்டத்தரிப்பு மகளிர் சி.க.வ.கூ.சங்கம்), வி.நகுலேஸ்வரி (நவாலி முருகானந்தா சி.க.வ.கூ.சங்கம்).

*100 மீற்றர் ஆண்*
*(40 வயதிற்கு கீழ்)*

ஏ.சிறினிவாசன் (தெல்லிப்பளை ப.நோ.கூ.சங்கம்), எம். மோகனராஜ் (இணுவில் அபிராமி சி.க.வ. கூ.சங்கம்), த.கமலநாதன் (காரைநகர் ப.தெ.வ.அ.கூ.சங்கம்).

*100 மீற்றர் பெண்*
*(40 வயதிற்கு கீழ்)*

எஸ்.சர்மிளா (பண்டத்தரிப்பு ப.நோ.கூ.சங்கம்), ஏ.சியாமளா (பண்டத்தரிப்பு மகளிர் சி.க.வ.கூ.சங்கம்), எஸ்.யசோதா (இராமாவில் சி.க.வ.கூ.சங்கம்).

*200 மீற்றர் ஆண்*
*(40 வயதிற்கு மேல்)*

தி.சுரேஸ் (சுன்னாகம் ப.தெ.வ.அ.கூ.சங்கம்), கோ.கௌரிதாசன் யா.மா.சி.க.வ.கூ.ச. சமாசம்), எம். ரவிதாஸ் (சுன்னாகம் ப.நோ.கூ. சங்கம்).

*200 மீற்றர் பெண்*
*(40 வயதிற்கு மேல்)*

பு.நாகராணி (பண்டத்தரிப்பு மகளிர் சி.க.வ.கூ.சங்கம்), வி.நகுலேஸ்வரி (நவாலி முருகானநதா சி.க.வ.கூ.சங்கம்), இ.வசந்தி (பண்டத்தரிப்பு மகிளர் சி.க.வ. கூ.சங்கம்).

*200 மீற்றர் ஆண்*
*(40 வயதிற்கு கீழ்)*

எஸ்.வினோதன் (கொடிகாமம் ப.நோ.கூ.சங்கம்), ரி.சர்வேஸ்வரன் (சுன்னாகம் ப.நோ.கூ. சங்கம்), பி.வாகீசன் (கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம்).

*200 மீற்றர் பெண்*
*(40 வயதிற்கு கீழ்)*

எஸ்.சர்மிளா (பண்டத்தரிப்பு ப.நோ.கூ.சங்கம்), எம்.சுபாஜினி (இணுவில் அபிராமி சி.க.வ.கூ. சங்கம்), ச.சிவரஞ்சினி (மறவன் புலோ திருமகள் சி.க.வ.கூ. சங்கம்).

*400 மீற்றர் ஆண்*

எஸ்.சிவதீபன் (கொடிகாமம் ப.நோ.கூ.சங்கம்), எஸ்வினோஜன் (கொடிகாமம் ப.நோ.கூ. சங்கம்), வி.கிருசாந் (கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம்).

*400 மீற்றர் பெண்*

தெ.நிசாந்தினி (காரைநகர் ப.தெ.வ.அ.கூ.சங்கம்), எம்.சுபாசினி (இணுவில் அபிராமி சி.க.வ.கூ.சங்கம்), ஏ.றொசானி (பண்டத்தரிப்பு ப.நோ.கூ.சங்கம்).

*800 மீற்றர் ஆண்*

எஸ்.சிவதீபன் (கொடிகாமம் ப.நோ.கூ.சங்கம்), சி.ஞானேஸ்வரன் (நெடுந்தீவு ப.நோ.கூ.சங்கம்), இ.கதீஸ்வரன் (கொடிகாமம் ப.நோ.கூ.சங்கம்).

*800 மீற்றர் பெண்*

நா.சுமதி (பண்டத்தரிப்பு ப.நோ.கூ.சங்கம்), தெ.நிசாந்தினி (காரைநகர் ப.தெ.வ.அ.கூ.சங்கம்), எம்.சதாநந்தினி (துறட்டிப்பனை சி.க.வ.கூ.சங்கம்).

*1500 மீற்றர் ஆண்*

சி.நிசாந்தன் (பண்டத்தரிப்பு ப.தெ.வ.அ.கூ.சங்கம்), ஆர்.கஜந்திரன் (கொடிகாமம் ப.நோ.கூ. சங்கம்), சி.ஞானேஸ்வரன் (நெடுந்தீவு ப.நோ.கூ.சங்கம்).

*1500 மீற்றர் பெண்*

ஞா.சுமதி (பண்டத்தரிப்பு ப.நோ.கூ.சங்கம்), கு.ஜனுசா (பண்டத்தரிப்புப.நோ.கூ.சங்கம்), தெ.நிசாந்தினி (காரைநகர் ப.தெ.வ.அ.கூ.சங்கம்).

*100 மீ x 4 அஞ்சல் ஆண்*

கொடிகாமம் ப.நோ.கூ. சங்கம், இணுவில் அபிராமி சி.க.வ.கூ.சங்கம், சுன்னாகம் ப.தெ.வ.அ.கூ.சங்கம்.

*100 மீ x 4 அஞ்சல் பெண*

பண்டத்தரிப்பு ப.தெ.வ.அ.கூ.சங்கம், மறவன்புலோ திருமகள் சி.க.வ.கூ.சங்கம், சுன்னாகம் ப.தெ.வ.அ.கூ.சங்கம்.

*200 மீ x 4 அஞ்சல் ஆண்*

கொடிகாமம் ப.நோ.கூ.சங்கம், இணுவில் அபிராமி சி.க.வ.கூ.சங்கம், கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம்.

*200 மீ x 4 அஞ்சல் பெண*

பண்டத்தரிப்பு ப.தெ.வ.அ.கூ. சங்கம், மறவன்புலோ திருமகள் சி.க.வ.கூ.சங்கம், சுன்னாகம் ப.தெ.வ.அ.கூ.சங்கம்.

*400 மீ x 4 அஞ்சல் ஆண்*

கொடிகாமம் ப.நோ.கூ.சங்கம், நெடுந்தீவு ப.நோ.கூ.சங்கம், இணுவில் அபிராமி சி.க.வ.கூ. சங்கம்.

*மரதன் ஓட்டம் ஆண்*

சி.ஜெயந்தன் (பண்டத்தரிப்பு ப.தெ.வ.அ.கூ.சங்கம்), சி.ஞானேஸ்வரன் (நெடுந்தீவு ப.நோ.கூ.சங்கம்), த.தனுசன் (பண்டத்தரிப்பு ப.தெ.வ.அ.கூ.சங்கம்).

*மரதன் ஓட்டம் பெண*

ஞா.சுமதி பண்டத்தரிப்பு ப.தெ.வ.அ.கூ.சங்கம், கு.ஜனுசா (பண்டத்தரிப்பு ப.நோ.கூ.சங்கம்).

*ஒழித்திருக்கும் நபரைக் கண்டுபிடித்தல்*

எஸ்.கமல்ராஜ் (சுன்னாகம் ப.நோ.கூ.சங்கம்).

*தலையணைச்சமர்*

ச.பிரேமிலன் (கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம்), கு.சஜ்வன் (கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம்), ர.சதீஸ்குமார் (நெடுந்தீவு ப.நோ.கூ.சங்கம்).

*பப்பாசி விதை எண்ணுதல் ஆண்*

செல்வகாந்தன் (சுன்னாகம் ப.நோ.கூ.சங்கம்), இ.தமிழ்வாணன் (இணுவில் அபிராமி சி.க.வ.கூ. சங்கம்), வேணுகோபாலன் (கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம்).

*பப்பாசி விதை எண்ணுதல் பெண்*

சி.அம்சமாலினி தேவி (துறட்டிப்பளை அறவழி சி.க.வ. கூ.சங்கம்), ஏ.றொசானி (பண்டத்தரிப்பு .பதெ.வ.அ.கூ.சங்கம்), சு.குணவதனி.

*கயிறு இழுத்தல் ஆண்*

சுன்னாகம் ப.நோ.கூ.சங்கம், சுன்னாகம் ப.தெ.வ.கூ.சங்கம்.

*கயிறு இழுத்தல் பெண்*

நவாலி முருகானந்தா சி.க.வ.கூ.சங்கம், சுன்னாகம் ப.நோ.கூ.சங்கம்.

*பலூன் நடனம் ஆண*

சுன்னாகம் ப.நோ.கூ.சங்கம், தெல்லிப்பளை ப.நோ.கூ. சங்கம், கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம்.

*பலூன் நடனம் பெண்*

சுன்னாகம் ப.தெ.வ.அ.கூ. சங்கம், நவாலி முருகானந்தா சி.க.கூ.சங்கம், மறவன்புலோ திருமகள் சி.க.வ.கூ.ச.சமாசம்.

*வேக நடை ஆண்*

காந்தரூபன் (பண்டத்தரிப்பு ப.தெ.வ.அ.கூ.சங்கம்), செ.ஜெயக்குமார் (அச்சுவேலி ப.தெ.வ.அ.கூ. சங்கம்), கோ.கௌரிதாசன் (யா.மா.சி.க.வ.கூ.ச.சமாசம்).

*வேக நடை பெண்*

சுஜிதா (பண்டத்தரிப்பு மகளிர் சி.க.வ.கூ.சங்கம்), கு.ஜனுசா (பண்டத்தரிப்பு ப.தெ.வ.கூ.சங்கம்), நா.சுமதி (பண்டத்தரிப்பு ப.நோ.கூ.சங்கம்).

*பலூன் உடைத்தல் ஆண்*

எஸ்.பிறேமிலன் (கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம்), ரி.வேணுகோபாலன் (கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம்), இ.தயாளன் (சுன்னாகம் ப.தெ.வ.அ.கூ.சங்கம்).

*பலூன் உடைத்தல் பெண்*

து.பபியோலா (மானிப்பாய் ப.தெ.வ.அ.கூ.சங்கம்), யே.மேரிரமா (சுன்னாகம் ப.தெ.வ.அ.கூ.சங்கம்), த.ஜெகதஸ்வரி (சுன்னாகம் ப.தெ.வ.அ.கூ.சங்கம்).

*கூட்டுறவுக் குமரிகள்*

க.இந்திராணி (பண்டத்தரிப்பு சி.க.சி.கூ.சங்கம்).

சைக்கிள் ஓட்டம் - ஆண்
(40 வயதிற்கு மேல்)

தி.இந்திரசித்து (பண்டத்தரிப்பு ப.தெ.வ.அ.கூ.சங்கம்), வை.கைலைநாதன் (கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம்), த.ராசசேகரம் (மானிப்பாய் ப.நோ.கூ.சங்கம்).

*சைக்கிள் ஓட்டம் - ஆண்*
*(40 வயதிற்கு கீழ்)*

து.ரகீம் (பண்டத்தரிப்பு ப.தெ. வ.அ.கூ.சங்கம்), ந.டினேஸ்வரன் (பண்டத்தரிப்பு ப.தெ.வ.அ.கூ. சங்கம்), த.பிரசாத் ((பண்டத்தரிப்பு ப.தெ.வ.அ.கூ.சங்கம்),

*சைக்கிள் ஓட்டம் - ஆ பெண்*
*(40 வயதிற்கு கீழ்)*

எஸ்.பத்மசந்தியா (சுன்னாகம் ப.தெ.வ.அ.கூ.சங்கம்), ஆர்.பருவநிலா (தெல்லிப்பளை ப.நோ.கூ. சங்கம்).

# ஊழியப்படையின் பற்றாக்குறையால் முல்லை மாவட்ட அபிவிருத்தி பாதிப்பு

## மேலதிக அரச அதிபர் மோகன்றாஸ் தெரிவிப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்திப் பணிகள் மந்த கதியில் இடம்பெற்று வருவதாக மாவட்டத்தின் மேலதிக அரசாங்க அதிபர் சீ.ஏ.மோகன்தாஸ் தெரிவித்துள்ளார்.

போதியளவு போக்குவரத்து மற்றும் மனித வளங்கள் இன்றி அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்வதில் சிரமம் ஏற்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

யுத்தத்தின் பின்னர் அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற போதிலும், வடக்கின் ஏனைய பகுதிகளுடன் ஒப்பீடு செய்யும் போது முல்லைத்தீவு மாவட்டத்தின் அபிவிருத்திப் பணிகள் மிகவும் மந்த கதியில் இடம்பெற்று வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

அதிகளவு பேருந்துகளைப் போக்குவரத்தில் ஈடுபடுத்துமாறு இலங்கை போக்குவரத்துச் சபைக்கு விடுத்த கோரிக்கைகளுக்கு இதுவரையில் சாதகமான பதில் கிடைக்கவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

மாவட்டத்தில் இரண்டு வைத்தியசாலைகளே காணப்படுகின்றன. முல்லைத தீவு ஆதார வைத்தியசாலையில் மட்டுமே சத்திரசிகிச்சை உள்ளிட்ட வசதிகள் உள்ளன.

பிரசவத்திற்காக வரும் தாய்மார் வவுனியா அல்லது யாழ்ப்பாண வைத்தியசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஆசிரியர்கள், மருத்துவர்கள், பொறியியலாளர்கள் உள்ளிட்ட நிபுணத்துவம் சார் ஊழியப்படையின் எண்ணிக்கை மிகவும் குறைந்தளவிலேயே காணப்படுகின்றனர்.

சிறந்த ஊழியப்படையின்றி மாவட்டத்தினை அபிவிருத்தி செய்ய முடியாது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# பி.ரி.ஐ. தெளிக்க அறிவுறுத்து

நேரடியாக அருகில் சென்று சுத்தம் செய்வதற்கு சிரமமாகவுள்ள நுளம்புப் பெருகும் இடங்களுக்கு பி.ரி.ஐ. மருந்தைத் தெளிக்கும்படி சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன, டெங்கு கட்டுப்பாட்டு நிகழ்ச்சித்திட்ட பணிப்பாளர் டாக்டர் சரத் தெனியகேவிற்கு அறிவுறுத்தியுள்ளார்.

குப்பை கொட்டும் இடங்களில் வெற்றுப் போத்தல்கள், பிளாஸ்ரிக் கொள்கலன்கள், பிளாஸ்ரிக் பாத்திரங்கள் பல்லாயிரக்கணக்கில் காணப்படும் அதேவேளை வீடுகளில் நுளம்பு பெருகும் முக்கிய இடமாக பீலிகள் காணப்படுவதாக சுகாதார திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

மிக அதிகளவிலான டெங்கு நோயாளர்கள இனங்காணப்பட்ட இடங்களான நாரஹென்பிட்டிய, ஹவ்லொக் ரவுண், திம்பிரிகஸ்யாய ஆகிய இடங்களில், இலங்கையில் தயாரிக்கப்பட்ட பி.ரி.ஐ. மருந்து விசிறப்படுமன டெங்கு தடுப்பு நிகழ்ச்சித்திட்ட அதிகாரி ஒருவர் கூறினார்.

இந்த வருடத்தில் இதுவரை 6035 டெங்கு நோயாளர்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர் என்றும் டெங்கினால் 49 மரணங்கள் ஏற்பட்டுள்ளன என்றும் அரசாங்க நோய் பரம்பலியல் அலகில் உள்ள தரவுகள் தெரிவிக்கின்றன.

# 18 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கடைகளில் நுகர்வோர் அதிகார சபையினர் சோதனை

(கொழும்பு)

இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் நுகர்வோர் சட்டங்களை மீறிய பதினெட்டாயிரத்திற்கும் மேற்பட்ட வர்த்தக நிலையங்களில் நுகர்வோர் விவகார அதிகார சபை திடீர் சோதனைகளை நடத்தியுள்ளது.

இந்த வர்த்தக நிலையங்களில் இருந்து 27 மில்லியன் ரூபா அபராதமாக அறவிடப்பட்டுள்ளதாக அதிகார சபையின் தலைவர் ரூமி மர்ஸூக் தெரிவித்தார்.

மேல் மாகாணத்திலேயே அதிகளவிலான வர்த்தக நிலையங்களில் திடீர் சோதனை நடத்தப்பட்டிருப்பதாக அவர் தெரிவித்தார்.

விலைப்பட்டியல் காட்சிப்படுத்தாமை, அதிக விலைக்கு பொருட்களை விற்பனை செய்தல்,காலாவதியான உணவுப் பொருட்களை விற்பனை செய்தல் உள்ளிட்ட பல்வேறு நுகர்வோர் சட்ட மீறல்கள் தொடர்பான திடீர் சோதனை நடவடிக்கைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இதேவேளை-

அனுமதியின்றி விலை உயர்த்தப்படும் பொருட்களை,மீண்டும் பழைய விலைக்கு கொண்டுவரும் வகையில் நுகர்வோர் அதிகார சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. குறித்த திருத்தங்கள் அடங்கிய சட்ட மூலம் தயாரிக்கப்பட்டு வருகின்றது.

இந்த சட்டமூலம் தற்போது சட்ட மா அதிபர் திணைக்களத்தினால் நெறிப்படுதததப்பட்டுவரப்படுகிறது.

புதிய திருத்தம் விரைவில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. நுகர்வோர் அதிகார சபையின் அனுமதியின்றி பல்வேறு நிறுவனங்களினால் பொருட்களின் விலைகள் உயர்த்தப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

புதிய திருத்தத்தின் ஊடாக பொருட்களின் விலை உயர்வுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் நுகர்வோர் விவகார அதிகார சபையிடம் காணப்படும் என அதன் தலைவர் மேலும் குறிப்பிட்டார்.

# 200 குளப் புனரமைப்பு வேலைத்திட்டம் வவுனியா மாவட்டத்தில் ஆரம்பமாகியது

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் கைவிடப்பட்ட 200 குளங்களை அடுத்த மூன்று வருடத்தில் புனர்நிர்மாணம் செய்யும் வேலைத்திட்டத்தின் கீழ் நெடுங்கேணிப் பிரதேச செயலாளர் பிரிவில் ஈட்டிமுறிப்பு குளப் புனரமைப்பு வேலைகள் கடந்த புதன காலை 11 மணியளவில் ஆரம்பித்து வைககப்பட்டது.

சிறுவர் மற்றும் மகளிர் விவகார அமைச்சர் திஸ்ஸகரலியத்த பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு வேலைத்திட்டத்தினை ஆரம்பித்துவைத்தார்.

இந்த திட்டத்தின் கீழ் இவ்வாண்டு வவுனியாவில் 20 குளங்கள் புனரமைக்கப்படவுள்ளன. ஒவ்வொரு குள அபிவிருத்திக்கும் சுமார் 10 மில்லியன் ரூபாய செலவிடப்படும் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

மஹிந்த சிந்தனை வேலைத்திட்டத்தினை முன்னெடுத்துச் செல்லும் வகையில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் மேற்கொள்ளப்படும் இந்தப் பாரிய அபிவிருத்தி திட்டத்தின் கீழ் தெரிவுசெயயப்பட்ட 200 விவசாயிகளுக்கு நீர் இறைககும் இயந்திரங்களும் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் முத்தலிபாபா பாறூக, மாவட்ட அரச அதிபர் திருமதி பி.எம்.எஸ்.சாள்ஸ், ஜனாதிபதியின் இணைப்பாளர்களான சிவநாதன் கிஷோர், சி.கனகரத்தினம் உட்பட பலர் கலந்துகொண்டனர்.



வடக்கின் வசந்தம் வேலைத்திட்டதில் பல மில்லியன் ரூபா செலவில் பூநகரி வாடியடியில் ப.நோ.கூ.சங்கத்துக்குச் சொந்தமான காணியில் அமைக்கப்பட்ட சங்கத் தலைமை அலுவலகம் கட்டி முடிக்கப்பட்ட நிலையில் பூட்டப்பட்டு கிடப்பதனையும், அருகில் சேதமடைந்த சங்கத்தின் பழைய கட்டடத்தையும் படத்தில் காணலாம். (பூநகரி செய்தியாளர்)

# ஹெரோயின் வைத்திருந்த பெண்ணுக்கு ஆயுட்காலச் சிறைத்தண்டனை விதிப்பு

(மன்னார்)

ஹெரோயின் போதைப்பொருள் வைத்திருந்தமை, வியாபாரம் செய்தமை ஆகிய குற்றச்சாட்டுக்களில் குற்றவாளியாகக் காணப்பட்டு பெண்ணொருவருக்கு ஆயுட் காலச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கின் இரண்டாம் எதிரியான கணவர் குற்றசாட்டுக்களிலிருந்து விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

தலைமன்னார் ஊர்மனை என்ற இடத்தைச் சேர்ந்த செல்வநாயகம் கார்மேல் ஜெனோவா முதலாம் எதிரியாகவும் அவரது கணவர் மருதை செல்வநாயகம் 2ஆம் எதிரியாகவும் குறிப்பிடப்பட்டிருந்தனர்.

வவுனியர் மேல் நீதிமன்றில் மேல் நீதிமன்ற ஆணையாளர் ஜெ. விஸ்வநாதன் முன்னிலையில் இந்த வழக்கு விசாரணை நடைபெற்றது.

இறுதியில் முதலாம் எதிரிக்கெதிரான இரண்டு குற்றசாட்டுக்களுக்கும் குற்றவாளியாகக் காணப்பட்ட அவருக்கு ஆயுள காலச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டதுடன் 2ஆம் எதிரியான கணவர் விடுவிக்கப்பட்டுள்ளார்.

# சிறுவர் பாதுகாப்பை உறுதிப்படுத்தாத இல்லங்களுக்கு எதிராக நடவடிக்கை

## அமைச்சர் திஸ்ஸ கரலியத்த எச்சரிக்கை

(கொழும்பு)



சிறுவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தாத சிறுவர் இலலங்களுக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை எடுககவுள்ளதாக சிறுவர் மற்றும் மகளிர் மேம்பாட்டு அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக தெளிவூட்டும் நடவடிக்கைகள் சிறுவர் மற்றும் மகளிர் நன்னடத்தை திணைக்களத்தின் ஊடாக மேற்கொள்ளப்படுவதாக அமைச்சர் திஸ்ஸ கரலியத்த தெரிவித்துள்ளார்.

கடந்த காலத்தில் சிறுவர் இல்லங்கள் சிலவற்றில் இருந்து பிள்ளைகள் காணமற்போன சம்பவங்கள் பதிவாகின.

இந்தச் சம்பவங்கள் குறித்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

சிறுவர் இல்லங்களிலுள்ள பெண் பராமரிப்பாளர்கள் தொடர்பாக எதிர்காலத்தில் புதிய அறிவுறுத்தல்கள் அறிமுகப்படுத்தப்படவுள்ளன.

அரச மற்றும் தனியார் பிரிவுகளின் ஊடாக ஐநூறிற்கும் அதிகமான சிறுவர் இல்லங்கள் நிர்வாகிக்கப்படுவதாக அமைசசர் திஸ்ஸ கரலியத்த சுட்டிக்காட்டுகின்றார்.

சிறுவர் இல்லங்களிலுள்ள பிள்ளைகளின் பாதுகாப்பைக் கருத்திற்கொண்டு எதிர்காலத்தில் முறையான திட்டங்கள் தயாரிக்கப்படவுள்ளதாக அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

# கடல் மார்க்க வெளிநாட்டுப் பயணம் எதிர்நோக்கும் ஆபத்து குறித்து கூட்டம்

(மன்னார்)


தடைசெய்யப்பட்டுள்ள கடல்மார்க்கமாக வெளிநாடு செல்வதால் ஏற்படும் விளைவுகள் தொடர்பாக விளக்கமளிக்கும் விசேட கூட்டமொன்று மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் என். வேதநாயகம் தலைமையில் கடந்த புதன்கிழமை காலை மன்னார் மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது.

இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் கடல் மார்க்கமாக மக்கள் வெளிநாடு செல்ல முயல்கின்றனர்.

இதனால் ஏற்படும் உயிரிழப்புக்கள், சொத்துக்களை விற்று செலுத்திய பண இழப்பு, ஏனைய பிரச்சினைகள் போன்ற விடயங்களை தவிர்ப்பது தொடர்பாக மேற்படி கூட்டத்தில் அறிவுரைகள் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்விற்கு இலங்கைக்கான அவுஸ்ரேலியா தூதுவர் மற்றும் குற்றத் தடுப்பு புலனாய்வுத்துறை உயர் அதிகாரிகள், மன்னார் பிரதேச செயலாளர் திருமதி ஸ்ரான்லி டி மேல், மேலதிக அரசாங்க அதிபர் திருமதி மோகநாதன், மன்னார் மாவட்ட உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஜமால்தீன், மன்னார் மாவட்டத்திலுள்ள பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகள் கிராம அலுவலகர்கள், மன்னார் மாவட்டத்திலுள்ள மீனவ சங்கங்களின் தலைவர், செயலாளர்கள் உட்பட நூற்றுக்கணக்காணவர்கள் கலந்து கொண்டனர்.


# எலும்புக் கூடுகளால்...



செக்குடியரசின் தலைநகரமும், முக்கியமான வர்த்தக, பண்பாட்டு நகரமும் ஆன பிராகா மாநகரில் 1.2 மில்லியன் மக்கள் வசிக்கிறார்கள். இப்பிராகா நகரில் இருந்து 70 கிலோ மீற்றருக்கு அப்பால் செட்லெக் என்னும் ஒரு சிறிய கிராமத்தில் மனித எலும்புக் கூடுகளிலான ஒரு தேவாலயம் அமைந்துள்ளது. இத்தேவாலயத்தின் பெயர் ஒசாரே செட்லெக் தேவாலயம். இவ் அதிசய தேவாலயம் 40000க்கு மேற்பட்டோரின் இறந்த உடல் எலும்புகளை வைத்து அமைக்கப் பட்டுள்ளது.

14ம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் திடீரென பரவிய ப்ளேக்(plague) நோயினால் 30000க்கு மேற்பட்டோர் உயிரிழந்தனர். இப்பாரிய உயிரிழப்புக்கு "கறுப்பு இறப்பு" என பெயரிடப்பட்டது. இவ் இறப்பின் தொகை அதிகரித்தமையால் உடலங்கள் பிராகா நகரத்தில் செட்லெக் கிராமத்துக் கருகில் கொட்டப்பட்டன. தேங்கிக்கிடந்த உடலங்களில் இருந்து மண்டையோடுகளையும் எலும்புத்துண்டங்களையும் சேகரித்து, சிறந்த கட்டட கலைஞர்கள் அடங்கிய குழு ஒன்றை அமர்த்தி இத்தேவாலயத்தை உருவாக்க ஆரம்பித்தனர். அதன் பின் 15ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட hussite யுத்தத்தில் 10000க்கும் மேற்பட்ட படைவீரர்கள் இறந்தனர். இறந்த வீரர்களின் உடலங்களில் இருந்து பெறப்பட்ட மண்டையோடுகள், எலும் புத்துண்டங்கள் ஆகியவற்றைச்சேர்த்து மிகப்பெரிய அளவில் மிகவும் நேர்த்தியான முறையில், ஆடம்பரமான வடிவத்தில் விளக்குகள், தூண்கள், முகப்புக்கள், நிலங்கள் என இத்தேவாலயத்தை கட்டி முடித்தனர்.

# சாதனை



தற்காப்பு கலையான கராட்டி மூலம் சண்டை பயிற்சிகளை பார்த்திருக்கின்றோம். ஆனால் Thierry Guyon என்னும் இளைஞரோ கத்தி முனையில் நீண்டநேரம் பாலன்ஸ் (Balance) இருந்து உலக சாதனை படைந்துள்ளார்.

வீட்டில் நாம் காய் கறிகளை சிறுகத்தியை கொண்டு நறுக்கும் போது இவரோ 1 நிமிடமும் 10.23 செக்கன் நேரம் கத்தி முனையில் இருந்து எந்த விதமான கீறல்களோ இரத்த கசிவோ இன்றி இச்சாதனையை படைத்துள்ளார்.

# தூக்கம் விழிப்பு விநோத மனிதன்



வருடத்தில் 6 மாத காலம் தொடர்ந்து உறங்கி 6 மாத் காலம் தொடர்ந்து விழித் திருக்கும் விநோத நோயொன்றால் பாதிக்கப் பட்டுள்ள நபரொருவரை குணப்படுத்த சீன மருத்துவர்கள் போராடி வருகின்றனர். லி ஷிமிங் (74வயது) என்ற மேற்படி நபரை உறக்கத்திலி ருக்கும் 6 மாத காலம் அவரது குடும்பத்தினரே சிரமப்பட்டு பராமரிக்க வேண்டிய நிலை ஏற் பட்டுள்ளது. அவர் தன்னிலை மறந்து உறக் கத்தில் இருக்கும் காலகட்டத்தில் பட்டினியால் இறந்து விடாமலிருக்க அமரவைத்து அவரது வாயினூடாக சிறிது சிறிதாக சூப் உணவை குடும்பத்தினர் பருக்கி வருகின்றனர்.

லி ஷிமிங்கின் விசித்திர நோய் குறித்து அவரது மருமகளான பு யிப் (42 வயது) விபரிக் கையில், உறக்கத்திலிருக்கும் போது கோமா நிலைக்கு சென்ற ஒருவர் போலவே இருப்பார். நாங்கள் கரண்டியால் சூப்பை பருக்கும் போது, அதை அவர் தன்னிச்சையாக விழுங்குவார். எதையும் சுயமாக செய்யவோ உணரவோ முடி யாத நிலையில் அவர் காணப்படுவார். ஆனால்

திரிவதிலும் தொலைக்காட்சி பார்ப்பதிலும் இரவைக் கழிப்பார் என்று கூறினார்.

# குரலுடன் வாழ்த்து




உங்கள் நண்பர்கள் அல்லது உறவினர்களுக்கு நீங்கள் சொல்ல விரும் பும் செய்திகளையோ வாழ்த்துக்களையோ புகைப்படங்களை கொண்டு சொல்லலாம் அதற்கு உதவ ஒருதளம் நீங்கள் விரும்பிய புகைபடத்துடன் செய்திகளை உங்களின் குரலில் பதிவு செய்து உங்கள் நண்பர்களுக்கு அனுப்பலாம்.

முதலில் இந்த தளத்திற்கு சென்று ஒரு கணக்கு உருவாக்கி கொள்ள வேண்டும். பின்பு நீங்கள் விரும்பிய படத்தை தேர்வு செய்து செய்திகளை ரெக்கோர்ட் செய்து கொள்ளலாம். அவர்களே படத்திற்கான லிங்க் கொடுக்கின்றனர் அதை உங்களின் நண்பர்களுக்கு அனுப்பலாம். வெப்சைட் லிங்கும் இங்கு கிடைகிறது .

தளமுகவரி:- http://www.foto babble.com/

# அழகுபடுத்த



அனைவருக்கும் தங் களது புகைப்படங்கள் மற்ற வர்களை கவருவதாக இருக்க வேண்டும் என்ற எண் ணம் இருக்கும். ஆனால் ஒரு சில படங்கள் அழகு குறைவாக இருக்கும். அப் படிப்பட்ட படங்களை அழகு படுத்த

நாம் போட்டோசொப் போன்ற எதாவது ஒரு மென் பொருளை நாட வேண்டும். ஒரு சிலருக்கு போட்டோசொப் மென்பொருளில் எவ்வாறு பணி புரிவது என்பது தெரியாது. அப்படிப்பட்டவர்களுக் கெனவே உள்ளது தான் போட்டோசைன் என்ற மென் பொருள் ஆகும்.


இந்த மென்பொருள் பயன்படுத்து வதற்கு மிகவும் எளிமையானதாக இருக்கும். நம்முடைய நண்பர்களை செல்போன் மூலமாக படம் எடுத்து வைத்திருப்போம் பின்பகுதி (Background) மோசமான நிலையில் இருக்கும். அப்படிப்பட்ட புகைப்படங் களை இந்த மென்பொருளின் மூலமாக மெருகேற்ற முடியும். இந்த மென்பொருளை இணையத்தில் இருந்து பதிவிறக்கம் செய்ய வேண்டும். இந்த மென்பொருளானது இரண்டு விதமாக உள்ளது மினி வெர்சனாகவும், மற்றொன்று முழுவதுமாகவும் உள்ளது. மினி வெர்சன் மட்டுமே இலவசமாக பயன்படுத்த முடியும்.

முழு போட்டோசைன் மென்பொருளை பணம் செலுத்தியே பெற வேண்டும். மினிவெர்சனில் வெறும் 237 டெம்ப்ளேட்கள் மட்டுமே உள்ளது. ஆனால் முழு போட்டோசைன் மென்பொருளில் 700 க்கும் மேற்பட்ட டெம்ப்ளேட்கள் உள்ளன. இந்த மென்பொருளானது போட்டோக்களை அழகுபடுத்த பயன்படுகிறது. ஒன்றுக்கும் மேற்பட்ட புகைப்படங்களை ஒன்றிணைக்கவும் இந்த புகைப்படம் உதவுகிறது. நண்பர்களின் குழு புகைப் படத்தையும் இந்த மென்பொருள் மூலமாக உருவாக்க முடியும்.

தரவிறக்க சுட்டி:- http://www.picget.net/photoshine-photo-editor/down load.html

## கணனி மூலை

# விநோதம்



பல விதமான மனிதர்களை நாம் பார்த்திருக்கிறோம். முகவடிவமைப்பு இல்லாத ஒருவரை பார்த்திருக்கிறீர்களா. நம்பமுடிய வில்லையா நீங்களே பாருங் கள்.

# மிதக்கும் கிராமம்



இந்த மிதக்கும் கிராமம் பெருவியன் என்ற பாலை வனப்பகுதியில் உள்ள 40 தீவுகளில் ஒன்றாகும். இந்த பாலை வனத்திலிருந்து சுமார் 3812 கி.மீ தொலைவிலுள்ள டிக்டிகா ஏரியில் அமைந்துள்ளது.

டிக்டிகா ஏரியில் அமைக்கப்படும் வீடுகள் டோர்டோரா என்றழைக்கப்படும் புல்களையும், மரக்கட்டைகளையும் கொண்டு அமைக்கப் படுகிறது.

# பல்கலைக்கழக அனுமதிக்கான வெட்டுப் புள்ளிகள்

**UNIVERSITY ADMISSION - ACADEMIC YEAR 2010/2011**

**[Based on the results of the G.C.E. (Advanced Level) Examination 2010 ]**

**Minimum "Z" Scores for selection to various Courses of Study in respect of each district**

| DISTRICT \ COURSE OF STUDY | ARTS * | ARTS (SP) / MASS MEDIA* | ARTS (SP) / PERFORMING ARTS * | ARTS (SAB) - A * | ARTS (SAB) - B * | MANAGEMENT STUDIES (TV) - A | MANAGEMENT STUDIES (TV) - B | ARCHITECTURE | DESIGN (ARCHITECTURE) | TOWN & COUNTRY PLANNING | FASHION DESIGN & PRODUCT DEVELOPMENT | INFORMATION TECHNOLOGY | INFORMATION TECHNOLOGY & MANAGEMENT | FACILITIES MANAGEMENT | TRANSPORT & LOGISTICS MANAGEMENT | LAW | MANAGEMENT & INFORMATION TECHNOLOGY | COMMUNICATION STUDIES * | PEACE & CONFLICT RESOLUTION * | AYURVEDIC MEDICINE & SURGERY | UNANI MEDICINE & SURGERY | SIDDHA MEDICINE | INFORMATION & COMMUNICATION TECHNOLOGY |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| COLOMBO | 1.3127 | 1.2639 | 1.0976 | 1.3894 | 1.4719 | 1.4707 | 1.4507 | 1.0392 | 0.5573 | 1.7422 | 0.9510 | 1.7477 | 1.7499 | 1.6580 | 1.8633 | 1.8181 | 1.6496 | 1.3701 | 1.6569 | 1.1773 | 0.8547 | 0.7869 | 1.4047 |
| GAMPAHA | 1.3966 | 1.2639 | 1.0976 | 1.3894 | 1.4719 | 1.5064 | 1.4673 | 0.7333 | 0.6559 | 1.7025 | 0.9604 | 1.5556 | 1.6289 | 1.6287 | 1.6856 | 1.7828 | 1.6366 | 1.3701 | 1.6569 | 1.1473 | 0.8829 | 0.1411 | 1.3001 |
| KALUTARA | 1.3966 | 1.2639 | 1.0976 | 1.3894 | 1.4719 | 1.4810 | 1.4677 | 0.8737 | 0.6041 | 1.7475 | 0.7131 | 1.6514 | 1.7730 | 1.6426 | 1.7495 | 1.7913 | 1.6047 | 1.3701 | 1.6569 | 1.1825 | 1.0052 | 0.2282 | 1.2997 |
| MATALE | 1.3627 | 1.2639 | 1.0976 | 1.3894 | 1.4719 | 1.3530 | 1.3418 | 0.4638 | NQC | 1.6083 | 1.5060 | 1.5455 | 1.5499 | 1.4274 | 1.5389 | 1.7790 | 1.5336 | 1.3701 | 1.6569 | 1.0451 | 1.0906 | 0.7003 | 0.6191 |
| KANDY | 1.3675 | 1.2639 | 1.0976 | 1.3894 | 1.4719 | 1.4515 | 1.4041 | 0.8788 | 0.5863 | 1.6342 | 1.0699 | 1.6690 | 1.6547 | 1.5169 | 1.7618 | 1.7520 | 1.6274 | 1.3701 | 1.6569 | 1.1865 | 1.0245 | 0.6648 | 1.3596 |
| NUWARA ELIYA | 1.3966 | 1.2639 | 1.0976 | 1.3894 | 1.4719 | 1.1629 | 1.3836 | NQC | 0.9838 | 1.5445 | 1.0807 | 1.0934 | 1.7001 | 1.5214 | 1.1817 | 1.7505 | 1.0737 | 1.3701 | 1.6569 | 0.6733 | 1.0365 | 0.7072 | 0.4959 |
| GALLE | 1.3966 | 1.2639 | 1.0976 | 1.3894 | 1.4719 | 1.5339 | 1.4732 | 0.6443 | -0.1279 | 1.7678 | 1.0532 | 1.7604 | 1.7732 | 1.6674 | 1.8638 | 1.8816 | 1.6669 | 1.3701 | 1.6569 | 1.1732 | NQC | NQC | 1.2800 |
| MATARA | 1.3966 | 1.2639 | 1.0976 | 1.3894 | 1.4719 | 1.5260 | 1.4819 | 1.2529 | 0.5115 | 1.7289 | 1.2042 | 1.7490 | 1.7820 | 1.6599 | 1.8640 | 1.8463 | 1.6637 | 1.3701 | 1.6569 | 1.1591 | 0.5352 | NQC | 1.3306 |
| HAMBANTOTA | 1.3966 | 1.2639 | 1.0976 | 1.3894 | 1.4719 | 1.4586 | 1.4437 | -0.3073 | 0.4289 | 1.6635 | NQC | 1.7513 | 1.7600 | 1.6690 | 1.8455 | 1.8061 | 1.6718 | 1.3701 | 1.6569 | 1.1750 | NQC | NQC | 1.0068 |
| JAFFNA | 1.3966 | 1.2639 | 1.0976 | 1.3894 | 1.4719 | 1.1853 | 1.3886 | NQC | NQC | 1.7604 | 0.8868 | 1.7179 | 1.6555 | 1.6589 | 1.7675 | 1.7760 | 1.4817 | 1.3701 | 1.6569 | NQC | 1.0445 | 0.8736 | 0.2854 |
| KILINOCHCHI | 1.3966 | 1.2639 | 1.0976 | 1.3894 | 1.4719 | 0.9485 | 1.3882 | NQC | NQC | 0.9028 | NQC | 0.8553 | 1.6523 | 0.8053 | 0.9231 | 1.7375 | NQC | 1.3701 | 1.6569 | NQC | 0.0011 | 0.2204 | NQC |
| MANNAR | 1.1393 | 1.2639 | 1.0976 | 1.3894 | 1.4719 | 1.0090 | 1.3010 | NQC | NQC | 1.0997 | NQC | 0.9435 | 1.5738 | 1.3754 | 0.9806 | 1.9082 | 0.3560 | 1.3701 | 1.6569 | NQC | 0.8225 | 0.3177 | -0.1425 |
| MULLAITIVU | 1.2895 | 1.2639 | 1.0976 | 1.3894 | 1.4719 | 0.6772 | 1.2753 | NQC | NQC | 0.8486 | NQC | 0.5252 | 0.2625 | 0.3469 | 0.6315 | 1.5616 | NQC | 1.3701 | 1.6569 | NQC | NQC | 0.2320 | NQC |
| VAVUNIYA | 1.3966 | 1.2639 | 1.0976 | 1.3894 | 1.4719 | 1.2028 | 1.4631 | NQC | NQC | 1.3900 | 1.2368 | 1.3919 | 1.5621 | 1.6146 | 1.3800 | 1.6975 | 1.3203 | 1.3701 | 1.6569 | NQC | 0.8086 | 0.7862 | 1.0170 |
| TRINCOMALEE | 1.3270 | 1.2639 | 1.0976 | 1.3894 | 1.4719 | 0.9546 | 1.4662 | NQC | NQC | 1.6065 | NQC | 1.1046 | 1.5432 | 1.5463 | 1.2626 | 1.7085 | 0.8654 | 1.3701 | 1.6569 | -0.0943 | 1.0493 | 0.8225 | 0.4972 |
| BATTICALOA | 1.3966 | 1.2639 | 1.0976 | 1.3894 | 1.4719 | 1.0931 | 1.4746 | NQC | NQC | 1.3320 | NQC | 1.1619 | 1.6763 | 1.6507 | 1.3538 | 1.7971 | 0.7798 | 1.3701 | 1.6569 | NQC | 1.1091 | 0.8521 | 0.4012 |
| AMPARA | 1.3966 | 1.2639 | 1.0976 | 1.3894 | 1.4719 | 1.1139 | 1.4101 | NQC | NQC | 1.7686 | NQC | 1.3906 | 1.7443 | 1.4042 | 1.2870 | 1.8096 | 1.2028 | 1.3701 | 1.6569 | 0.7414 | 1.0948 | 0.8639 | 0.7187 |
| PUTTALAM | 1.3966 | 1.2639 | 1.0976 | 1.3894 | 1.4719 | 1.2482 | 1.3672 | -0.1011 | NQC | 1.7266 | 1.2857 | 1.3746 | 1.6466 | 1.5572 | 1.4606 | 1.8254 | 1.2867 | 1.3701 | 1.6569 | 1.0168 | 1.0992 | 0.7793 | 0.8477 |
| KURUNEGALA | 1.3834 | 1.2639 | 1.0976 | 1.3894 | 1.4719 | 1.4736 | 1.4507 | 0.9409 | 0.7827 | 1.7428 | 1.0684 | 1.7218 | 1.7257 | 1.6050 | 1.8181 | 1.8222 | 1.6277 | 1.3701 | 1.6569 | 1.1712 | 0.7673 | 0.5063 | 1.1434 |
| ANURADHAPURA | 1.3966 | 1.2639 | 1.0976 | 1.3894 | 1.4719 | 1.3405 | 1.3837 | 1.2369 | 1.1412 | 1.6757 | NQC | 1.5142 | 1.6619 | 1.5639 | 1.6798 | 1.7841 | 1.4483 | 1.3701 | 1.6569 | 1.1486 | 0.5253 | 0.4092 | 1.1047 |
| POLONNARUWA | 1.3880 | 1.2639 | 1.0976 | 1.3894 | 1.4719 | 1.2021 | 1.3517 | 0.4071 | NQC | 1.5922 | NQC | 1.2659 | 1.4649 | 1.1892 | 1.0959 | 1.7326 | 1.1665 | 1.3701 | 1.6569 | 0.9986 | 0.5173 | 0.3328 | 0.7503 |
| BADULLA | 1.3966 | 1.2639 | 1.0976 | 1.3894 | 1.4719 | 1.2706 | 1.3562 | 0.3271 | NQC | 1.6003 | 0.8173 | 1.4356 | 1.7022 | 1.6100 | 1.5167 | 1.7098 | 1.4667 | 1.3701 | 1.6569 | 1.0438 | 0.9920 | 0.4129 | 0.7746 |
| MONARAGALA | 1.3966 | 1.2639 | 1.0976 | 1.3894 | 1.4719 | 1.4515 | 1.4465 | 1.0745 | NQC | 1.4378 | NQC | 1.1382 | 1.7588 | 1.5426 | 1.3211 | 1.7827 | 1.0992 | 1.3701 | 1.6569 | 1.0450 | NQC | NQC | 0.6312 |
| KEGALLE | 1.3966 | 1.2639 | 1.0976 | 1.3894 | 1.4719 | 1.4711 | 1.4573 | 0.6321 | 0.5145 | 1.7639 | 0.8276 | 1.5639 | 1.6900 | 1.5247 | 1.6883 | 1.8747 | 1.6430 | 1.3701 | 1.6569 | 1.1594 | 1.0351 | 0.1632 | 1.3102 |
| RATNAPURA | 1.3966 | 1.2639 | 1.0976 | 1.3894 | 1.4719 | 1.4807 | 1.4556 | NQC | 0.4982 | 1.6058 | 1.0171 | 1.5245 | 1.6492 | 1.5439 | 1.5667 | 1.7937 | 1.4181 | 1.3701 | 1.6569 | 1.0883 | 1.0002 | NQC | 0.9253 |

**UNIVERSITY ADMISSION - ACADEMIC YEAR 2010/2011**

**[Based on the results of the G.C.E. (Advanced Level) Examination 2010 ]**

**Minimum "Z" Scores for selection to various Courses of Study in respect of each district**

| DISTRICT \ COURSE OF STUDY | MEDICINE | DENTAL SURGERY | VETERINARY SCIENCE | MOLECULAR BIOLOGY & BIOCHEMISTRY | AGRICULTURAL TECHNOLOGY & MANAGEMENT | AGRICULTURE | FOOD SCIENCE & NUTRITION | FOOD SCIENCE & TECHNOLOGY | BIOLOGICAL SCIENCE | APPLIED SCIENCES (BIO.SC) | ENGINEERING | ENGINEERING (EM) | ENGINEERING (TM) | QUANTITY SURVEYING | COMPUTER SCIENCE | PHYSICAL SCIENCE | SURVEYING SCIENCE | APPLIED SCIENCES (PHY.SC) | MANAGEMENT | ESTATE MANAGEMENT & VALUATION | COMMERCE | PUBLIC MANAGEMENT (SPECIAL) | BUSINESS INFORMATION SYSTEMS (SPECIAL) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| COLOMBO | 1.9776 | 1.9464 | 1.8291 | 1.9093 | 1.6140 | 1.1720 | 1.5843 | 1.7814 | 1.4853 | 1.3287 | 1.8968 | 1.8769 | 1.8944 | 1.8062 | 1.6750 | 1.2788 | 1.5827 | 1.1391 | 1.6674 | 1.7169 | 1.6112 | 1.7195 | 1.7219 |
| GAMPAHA | 1.8458 | 1.8227 | 1.7536 | 1.8164 | 1.6159 | 1.1542 | 1.4726 | 1.7168 | 1.3934 | 1.3017 | 1.7065 | 1.6661 | 1.6703 | 1.6306 | 1.5548 | 1.1381 | 1.5033 | 1.0839 | 1.5626 | 1.6861 | 1.5488 | 1.7493 | 1.6595 |
| KALUTARA | 1.8779 | 1.8673 | 1.8321 | 1.8397 | 1.6516 | 1.1896 | 1.6090 | 1.7688 | 1.4359 | 1.3055 | 1.6839 | 1.6726 | 1.6676 | 1.6511 | 1.6226 | 1.1995 | 1.5108 | 1.0808 | 1.5925 | 1.7274 | 1.5671 | 1.7722 | 1.6890 |
| MATALE | 1.9080 | 1.8912 | 1.8229 | 1.8905 | 1.6395 | 1.1154 | 1.6277 | 1.6778 | 1.3630 | 1.2922 | 1.6082 | 1.6001 | 1.5614 | 1.5875 | 1.4360 | 1.0106 | 1.4244 | 0.9136 | 1.4075 | 1.6836 | 1.3637 | 1.6578 | 1.5435 |
| KANDY | 1.8698 | 1.8643 | 1.8234 | 1.8479 | 1.6859 | 1.1682 | 1.5436 | 1.7517 | 1.4602 | 1.2936 | 1.8183 | 1.7884 | 1.7703 | 1.7695 | 1.5937 | 1.2016 | 1.5660 | 1.0933 | 1.5194 | 1.7198 | 1.5048 | 1.6994 | 1.5580 |
| NUWARA ELIYA | 1.5022 | 1.4320 | 1.3918 | 1.3969 | 1.2584 | 0.8404 | 1.1868 | 1.3270 | 0.9148 | 0.8969 | 1.2584 | 1.2068 | 1.2568 | 1.1654 | 1.0292 | 0.5279 | 0.9894 | 0.4279 | 1.1917 | 1.7384 | 1.1620 | 1.7742 | 1.6886 |
| GALLE | 1.9470 | 1.9425 | 1.7920 | 1.9138 | 1.6527 | 1.1980 | 1.5915 | 1.7713 | 1.4448 | 1.3208 | 1.9514 | 1.8854 | 1.8790 | 1.8189 | 1.6871 | 1.2318 | 1.6186 | 1.1325 | 1.5851 | 1.7598 | 1.5659 | 1.7846 | 1.7718 |
| MATARA | 1.9689 | 1.9383 | 1.8404 | 1.9152 | 1.6697 | 1.1906 | 1.6059 | 1.7705 | 1.4526 | 1.2732 | 1.9766 | 1.8857 | 1.8972 | 1.8223 | 1.6909 | 1.2411 | 1.5967 | 1.1071 | 1.5897 | 1.7311 | 1.5713 | 1.7427 | 1.7240 |
| HAMBANTOTA | 1.9327 | 1.9213 | 1.8473 | 1.8598 | 1.7018 | 1.1549 | 1.6203 | 1.7851 | 1.2879 | 1.2620 | 1.8755 | 1.8676 | 1.8577 | 1.7978 | 1.6746 | 1.0747 | 1.6235 | 1.0134 | 1.5289 | 1.6998 | 1.5118 | 1.7926 | 1.6645 |
| JAFFNA | 1.8366 | 1.8255 | 1.7282 | 1.7983 | 1.6737 | 1.1130 | 1.6135 | 1.7688 | 0.9807 | 0.9356 | 1.8217 | 1.8005 | 1.7450 | 1.7907 | 1.5560 | 0.9491 | 1.5696 | 0.9048 | 1.2336 | 1.5418 | 1.2003 | 1.5947 | 1.5577 |
| KILINOCHCHI | 1.4671 | 1.4107 | 1.0140 | 1.0577 | 0.8552 | 0.2752 | 0.8928 | 0.8552 | 0.1861 | 0.2212 | 1.0639 | 0.9292 | 0.9691 | 1.0144 | 0.6069 | 0.3740 | 0.8328 | 0.3647 | 0.9704 | 1.2753 | 0.9380 | 1.3846 | 1.2848 |
| MANNAR | 1.3925 | 1.3455 | 1.2184 | 1.3086 | 1.1257 | 0.3554 | 1.1125 | 0.9217 | 0.1721 | 0.7800 | 1.4088 | 1.2932 | 1.1619 | 1.0647 | 0.7320 | .0171 | 0.9735 | 0.2697 | 1.0643 | 1.3417 | 1.0182 | 1.5164 | 1.5427 |
| MULLAITIVU | 0.5950 | 0.5741 | 0.5504 | 0.5732 | 0.4220 | 0.1138 | 0.5334 | .0.5390 | -0.4240 | -0.1324 | 0.8469 | 0.8371 | 0.7098 | 0.6579 | 0.3858 | -0.2552 | 0.3665 | -0.2554 | 0.7234 | 1.0402 | 0.6975 | 1.5422 | 0.6339 |
| VAVUNIYA | 1.8127 | 1.8089 | 1.7223 | 1.7313 | 1.4227 | 0.8280 | 1.5030 | 1.6660 | 0.7060 | 0.7673 | 1.5752 | 1.4291 | 1.4200 | 1.4367 | 1.1523 | 0.4514 | 1.1958 | 0.9675 | 1.1250 | 1.5521 | 1.0552 | 1.6266 | 1.6694 |
| TRINCOMALEE | 1.5444 | 1.5074 | 1.4954 | 1.3713 | 1.2272 | 0.9656 | 1.2960 | 1.3594 | 0.8101 | 1.0295 | 1.3198 | 1.2526 | 1.2198 | 1.2727 | 1.1803 | 0.3362 | 1.0495 | 0.4943 | 1.0128 | 1.4249 | 0.9649 | 1.6587 | 1.5251 |
| BATTICALOA | 1.7438 | 1.7269 | 1.6453 | 1.7144 | 1.4290 | 1.0525 | 1.5166 | 1.6069 | 0.8746 | 0.8469 | 1.3874 | 1.3842 | 1.3468 | 1.3562 | 1.1989 | 0.4925 | 1.3235 | 0.8651 | 1.1504 | 1.7131 | 1.1161 | 1.7980 | 1.5793 |
| AMPARA | 1.7295 | 1.7130 | 1.6559 | 1.7087 | 1.5237 | 1.1200 | 1.5646 | 1.6091 | 0.9974 | 0.9541 | 1.4118 | 1.3815 | 1.3726 | 1.3161 | 1.2291 | 0.7040 | 1.1881 | 1.0000 | 1.1929 | 1.7510 | 1.1463 | 1.8055 | 1.6350 |
| PUTTALAM | 1.7474 | 1.7437 | 1.7324 | 1.7381 | 1.5179 | 0.9137 | 1.5009 | 1.5951 | 1.1837 | 1.1153 | 1.4750 | 1.4387 | 1.4720 | 1.4053 | 1.3019 | 0.8473 | 1.3966 | 0.7794 | 1.2877 | 1.6283 | 1.2698 | 1.6025 | 1.5817 |
| KURUNEGALA | 1.9108 | 1.9036 | 1.8329 | 1.8916 | 1.6728 | 1.1788 | 1.5457 | 1.7608 | 1.4206 | 1.2946 | 1.8522 | 1.8335 | 1.8440 | 1.7963 | 1.6494 | 1.1960 | 1.5944 | 1.1075 | 1.4923 | 1.6649 | 1.4873 | 1.7273 | 1.6987 |
| ANURADHAPURA | 1.7180 | 1.7105 | 1.6629 | 1.7024 | 1.5525 | 1.0885 | 1.4417 | 1.5174 | 1.2379 | 1.1411 | 1.6821 | 1.6609 | 1.6374 | 1.6149 | 1.5730 | 0.9966 | 1.5250 | 0.9141 | 1.3680 | 1.7527 | 1.3659 | 1.7942 | 1.7751 |
| POLONNARUWA | 1.5669 | 1.5600 | 1.5248 | 1.5538 | 1.3810 | 0.9480 | 1.3081 | 1.4628 | 1.0615 | 0.9922 | 1.1563 | 1.1124 | 1.0960 | 1.1361 | 1.0384 | 0.5007 | 0.9473 | 0.4523 | 1.2635 | 1.7460 | 1.2407 | 1.8113 | 1.6138 |
| BADULLA | 1.7863 | 1.7801 | 1.7357 | 1.7299 | 1.5581 | 0.9862 | 1.4992 | 1.5787 | 1.2101 | 1.0654 | 1.5443 | 1.5271 | 1.5362 | 1.4820 | 1.3599 | 0.9167 | 1.3426 | 0.8591 | 1.3230 | 1.6890 | 1.3068 | 1.7293 | 1.7294 |
| MONARAGALA | 1.7011 | 1.6893 | 1.6635 | 1.6755 | 1.4012 | 0.9663 | 1.3430 | 1.5643 | 1.0073 | 0.9382 | 1.4112 | 1.8333 | 1.4039 | 1.1423 | 1.3106 | 0.8046 | 1.1948 | 0.7036 | 1.5102 | 1.7535 | 1.4864 | 1.8159 | 1.5788 |
| KEGALLE | 1.9217 | 1.9181 | 1.7834 | 1.9111 | 1.6076 | 1.1855 | 1.5627 | 1.7820 | 1.4252 | 1.2878 | 1.7032 | 1.7031 | 1.6789 | 1.6728 | 1.5902 | 1.1507 | 1.5663 | 1.0473 | 1.5288 | 1.7131 | 1.5073 | 1.6674 | 1.7485 |
| RATNAPURA | 1.8064 | 1.7863 | 1.7042 | 1.7457 | 1.6189 | 1.1116 | 1.5357 | 1.6937 | 1.7736 | 1.2078 | 1.5932 | 1.5696 | 1.5783 | 1.5479 | 1.5055 | 0.9596 | 1.4843 | 0.8655 | 1.5281 | 1.7431 | 1.5097 | 1.8038 | 1.7701 |

* Selection 100% on an all Island Merit Basis

NQC - No Qualified Candidates

MANAGEMENT STUDIES(TV): A - Commerce Stream B - All Streams

ARTS(SAB): A - Arts Stream B - Commerce Stream

UNIVERSITY GRANTS COMMISSION
27.05.2011

# சொந்த பாவனையிலுள்ள "சிம்"மை வேறு எவருக்கும் விற்க வேண்டாம்

### மானிப்பாய் பொலிஸார் அறிவுறுத்து

(யாழ்ப்பாணம்)

சொற்ப பணத்திற்கு ஆசைப்பட்டு சொந்த விபரங்களுடன் உள்ள சிம் அட்டையை எவருக்கும் விற்பனை செய்யவோ, வழங்கவோ வேண்டாம் என மானிப்பாய் பொலிஸ் பொறுப்பதிகாரி மல்கம பிறேட் மக்களை அறிவுறுத்தி உள்ளார்.

அண்மையில் ஆணைக்கொட்டையில் உள்ள தொலை தொடர்பநிலையத்திற்கு வேறு ஒருவரின் பெயரில் பதிவு செய்யப்பட்ட சிம் அட்டை மூலம் அச்சுறுத்திய நபரை கண்டு பிடித்துள்ளதாகவும்.

சிம் உள்ள தொலைபேசியை கொள்வனவு செய்ததாகவும் தெரியவந்துள்ளது.

இது போன்ற சட்டவிரோத செயற்பாடுகளின்போது சிம் யாருடைய அடையாள அட்டையில் பதிவு செய்யப்பட்டதோ அவர் மீதே நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் இது குறித்த அறிந்திருக்கவேண்டும். சிம் அட்டை விற்பனை செய்யபவர்கள் குறித்த விபரங்களை உறதிப்படுத்தியே சிம் வழங்க வேண்டும். எனவும் தெரிவித்துள்ளார்.

# தனியார் ஓய்வூதியத்திட்டம் குறித்து ஊழியர்களுக்கு தெளிவுபடுத்த தீர்மானம்

தனியார் ஊழியர்களுக்கான ஓய்வூதிய முறைமை தொடர்பாக ஊழியர்களை தெளிவுபடுத்தும் திட்டமொன்றை ஆரம்பிக்கவுள்ளதாக தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த ஓய்வூதிய முறைமை குறித்து ஊழியர்கள் மத்தியில் நிலவுகின்ற தெளி வின்மையை போக்குவதற்காகவே தெளிவுப்படுத்தும் நடவடிக்கையை முன்னெடுக்கவுள்ளதாக அமைச்சர் காமினி லொக் குகே தெரிவித்தார்.

ஊழியர் வேலைத்தளங்களிலும், நிறுவனங்களிலும் இந்த நடவடிக்கையை மேற்கொள்ள வுள்ளதாக அமைச்சர் கூறினார்.

இதன்பொருட்டு தொழிற்சங்கள் சிலவற்றின் ஒத்துழைப்பும் கிடைத்துள்ளது.

இது தவிர துண்டுப்பிரசுரங்களை விநி யோகிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தனியார் ஓய்வூதிய முறைமை தொடர்பில் பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்பட் டுள்ள நிலையில் சிறந்த கருத்துக்களை ஏற்றுக் கொள்ள தயாராகவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# துர்க்கா மணிமண்டபத்தில் சிவதொண்டர் மாநாடு

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை இந்து மாமன்றத்தினால் நடத்தப்படும் சிவதொண்டர் மாநாடு இன்றும், நாளையும் நல்லூர் துர்க்காதேவி மண்டபத்தில் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள் மற்றும் இலங்கை இராமகிருஷ்ணமிஷன் தலைவர் வணக்கத்துக்குரிய சுவாமி சர்வ ரூபானந்த ஆகியோரின் முன்னிலையில் நடைபெறவுள்ளது.

இன்று காலை 8 மணிக்கு நாவலர் அரங்கில் மனித நேயமாமணி வி.கயிலாசபிள்ளை தலைமையில் நடைபெறும். சிறபபு பேரரங்கில் [illegible]ச நீதிமன்ற முன்னாள் நீதியரசர் சி.வி.விக்[illegible]னஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். தொடர்ந்து இந்நிகழ்வில் 'இந்து ஒளி' சிறப்பிதழ் வெளியிடப்படவுள்ளது.

அன்றையதினம் பிற்பகல் 1.30 மணிக்கு அகில இலங்கை இந்து மாமன்ற உபதலைவர் கலாநிதி குமாரசுவாமி சோமசுந்தரம் தலைமையில் நடைபெறவுள்ள மாலை நிகழ்வில் பசுமாடு மற்றும் தையல் இயந்திரம் வழங்குதல் ஆகிய சமூக நலன் அன்பளிப்புக்கள் இடம் பெறவுள்ளதுடன் தொடர்ந்து ஆய்வரங்கம் நடைபெறவுள்ளது.

இதேவேளை அன்றையதினம் மாலை 5.30 மணிக்கு தெய்வத்திருமகள் சிவத்தமிழ்ச் செல்வி அரங்கில் யாழ். பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் இலக்கிய கலாநிதி ம.கோபாலகிருஷ்ண ஐயர் தலைமையில் நடைபெறவுள்ள பேரரங்கு நிகழ்வில் 'செஞ்சொற் செல்வம்' சிறப்பு நூல் வெளியிடப்படவுள்ளது.

இந்நூல் வெளியீட்டுரையை யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறைப் பேராசிரியர் சி.சிவலிங்கராசாவும், 'அறம் செய்ய விரும்பு' என்னும் பொருளில் பேருரையை தமிழ்நாட்டு அறிஞரும் முத்தமிழ் வித்தகியுமான பேராசிரியர் வைத்திய கலாநிதி சரஸ்வதி இராமநாதன் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

தொடர்ந்து கரகாட்ட வித்தகர்களான தவராஜ் சாருமதி தம்பதிகள் வழங்கும் பாரம்பரிய நடன நிகழ்வு இடம்பெறவுள்ளது.

நாளை காலை 9.00 மணிக்கு சுவாமி விபுலானந்தர் அரங்கில் செஞ்சொற்செல்வர் ஆறுதிருமுருகன் தலைமையில் ஆய்வரங்கம் இடம்பெறவுள்ளது.

தொடர்ந்த பிற்பகல் 1.30 மணிக்கு கிழக்கு பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் சிவஸ்ரீ ம.கைலாசநாதசர்மா தலைமையில் நடைபெறும் நிகழ்வில் 'சிரார்த்த தீபிகை' என்னும் நூல் வெளியிடப்படவுள்ளது. மாலை 3.00 மணிக்கு திருத்தொண்டர் புராணம் கூறும் வாழ்வியல் என்னும் பொருளில் சிந்தனை அரங்கு கம்பவாரிதி இ.ஜெயராஜ் தலைமையில் நடைபெறவுள்ளது.

அன்றையதினம் மாலை 5.00 மணிக்கு ஞானவித்தகர் வினாசித்தம்பி அரங்கில் அகில இலங்கை இந்து மாமன்ற பொதுச் செயலாளர் கந்தையா நீலகண்டன் தலைமையில் நடைபெறவுள்ள பேரரங்கில் சிறப்புரைகளைத் தொடர்ந்து தெல்லிப்பளை துர்க்காபுரம் மகளிர் இல்ல மாணவிகளின் 'சத்தியவான் சாவித்திரி' இசை நாடகமும், நாடக செயற்பாட்டு அரங்கத்தினால் 'இறவாத இன்ப அன்பு' (காரைக்கால் அம்மையார் சரிதம்) நாடகமும் இடம்பெறவுள்ளது.

# ஊடகங்கள் நாசகார சக்திகளின் ...

(14ஆம் பக்கத் தொடர்ச்சி)


கருத்துச் சுதந்திரத்தைப் பாதுகாப்பது அல்ல என்பது தெரியவில்லையா?

புலிகள் ஊடகங்களைக் கையாண்ட முறை தனியாக விரிவாக ஆராயப்பட வேண்டிய விடயம் அது பல அருவருக்கத்தக்க அம்சங்களையும், பல சுவையான சம்பவங்களையும் கொண்டுள்ளது. உலக ஊடகங்களுக்கு AP, Reuters மாதிரி தமிழ் ஊடகங்களுக்கு 'தமிழ்நெற்' இருந்த காலம் ஒன்றிருந்தது. இப்போதும் ஓரளவிற்கு இருக்கிறது. தமிழ் ஊடகங்கள் தமிழ் நெற்றில் வருகிற அச்சுப்பிழைகளைக் கூட மிகவும் பயபக்தியுடன் பிரதி செய்கிறார்கள். புலி ஊடகங்கள் பற்றி சுவையான கதைகள் நிறைய உண்டு.


மட்டக்களப்பில் இளைஞன் ஒருவர் மேற்கூரை வழியாக எறியப்பட்ட கைக்குண்டினால் சாகடிக்கப்படுகிறார். உடனே தமிழ் ஊடகங்கள் புலி இயக்கத்திற்கு எதிரான இயக்கத்தை சேர்ந்தவர்தான் கொலை செய்யப்பட்டிருக்கிறார் என்று நினைத்து, இறந்தவர் இராணுவத்தினருக்கு தகவல் கொடுத்ததாக கூறப்படுகிறது என்ற அடைமொழியுடன் செய்தியை முடித்தன. ஊடகங்களுக்கு புலிகளோடு இருந்த பரிவர்த்தனையில் ஏதோ குளறுபடி. இறந்தவர் காட்டிக் கொடுத்த துரோகி அல்ல, புலிகளின் மாவீரர்களில் ஒருவர் என்று புலிகள் அறிவிக்கிறார்கள். தமிழ் ஊடகங்கள் இப்போது அடித்தன பல்டி. காட்டிக் கொடுத்தவர் என்று கூறிய பத்திரிகைகள் இப்போது இறந்தவருக்கு புகழாரம் செலுத்தின. அதுதான் கலி (புலி) யுகம்.

சமீபகாலத்தில் ஊடகத்துறையில் ஏற்பட்ட ஒரு முக்கிய அம்சம் தொழில்நுட்ப வளர்ச்சி. ஊடகங்கள் இன்று ஒரு குடிசைக் கைத்தொழிலாக மாறி விட்டன. எத்தனை ஊடகம் வந்து என்ன பிரயோசனம்! நாட்டில் எவ்வளவு அறியாமை இருக்கிறது பாருங்கள்! உள்ளூராட்சி தேர்தலில் கூட்டமைப்பை தெரிவு செய்தால், கிராமங்களை இணைப்பேன் என்று சுரேஷ் பிரேமசந்திரன் சமீபத்தில் கூறியிருக்கிறார். அதிகாரம் படைத்த ராஜபக்ஷ கூட இப்படிச் சொல்ல மாட்டார்.


தமிழனின் இன்றைய அழிவுக்கு ஊடகங்களும் பிரதான காரணம். தமிழ் திரைப்படங்களைப்பற்றி ராஜாஜி ஒரு முறை சொன்னார், இவர்கள் இவற்றை எடுக்காமல் இருப்பது மக்களுக்கு செய்யும் பெரிய சேவை என்று. எமது முன்னோர், சொல்லுவார் சொல்ல கேட்பாருக்கு மதியென்ன என்றும், எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அவற்றின் மெய்ப்பொருளை காணவேண்டும் என்றும், அர்த்தத்துடனேயே கூறியிருக்கிறார்கள். எமது முன்னோரின் வாக்கை நாம் எப்போதும் மனதில் கொள்ளவேண்டும்.




ஆனந்தராசா ஜதுசன்
புள்ளிகள் 168



சிவலிங்கம் சஜித்
புள்ளிகள் 164




அலன்கியூமர் கௌதம்
புள்ளிகள் 162



றோயல் அனுசன்
புள்ளிகள் 161




லெமன்ராஜேந்திரன் ஸ்ரீன் பிறவீன்
புள்ளிகள் 161



ஆனந்தகுமார் அருண்
புள்ளிகள் 155




பாஸ்கரன் தனுஷி
புள்ளிகள் 155




ஜென்ஸ்ரீன் வினோஸ்
புள்ளிகள் 155



குணசேகரம் சகஸ்திரா
புள்ளிகள் 150




வேணுகுமார் டிலக்ஷன்
புள்ளிகள் 147




பரமேஸ்வரன் சங்கீதா
புள்ளிகள் 146




இராகவன் கிருஷாணி
புள்ளிகள் 145



சாந்தகுமார் நிலக்ஷன்
புள்ளிகள் 142



பாஸ்கரன் கீர்த்தனன்
புள்ளிகள் 142



செல்வராசா தர்ஷன் (2008இல்)
புள்ளிகள் 106

**சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாச உறுப்புரிமை குடும்பங்களைச்சேர்ந்த 15 மாணவ- மாணவிகள் 2010 ஆம் ஆண்டில் 5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பெற்றமையை பாராட்டி கௌரவிக்கும் விதமாக சமாசத்தின் புனர்வாழ்வு கல்வி அபிவிருத்தி நிதியத்தில் இருந்து தலா 5 ஆயிரம் ரூபா வழங்கத் தெரிவு செய்யப்பட்டிருப்பவர்கள்.**

இந்தச் செல்வங்களுக்கான நன்கொடை நிதி விரைவில் நடக்கவுள்ள சமாச ஆண்டு விழாவில் வழங்கப்படும்.

**ஊடக அனுசரணை:- தினமுரசு**

# ஊடகங்கள் நாசகார சக்திகளின் பலமிக்க ஆயுதங்களாக இருக்கின்றன!



ஊடகங்கள் - பத்திரிகையோ, வானொலியோ, தொலைக்காட்சியோ, திரைப்படமோ எதுவாகவிருந்தாலும் - என்ன நோக்கத்திற்காக ஆரம்பிக்கப்படுகின்றன? சம்பாதிப்பது, புகழ், அரசியல் செல்வாக்குத் தேடுவது, பிரச்சாரம் போன்ற காரணங்கள் நம் மனதில் எழுகின்றன. கலைஞர் மாறன் குடும்பத்தை நினைத்தால் ஊடகம் மூலம் எப்படி சம்பாதிக்கலாம் என்பதை இலகுவில் விளங்கிக் கொள்ளலாம். (கலாநிதி மாறன் இன்று உலகின் 310ஆவது பணக்காரர்). ஊடகங்களைத் தொடக்குவதற்கான மூலதனத்தை எவ்வாறு ஊடகவுரிமையாளர்கள் பெற்றுக் கொள்கிறார்கள்? கனிமொழி ஸ்பெக்ட்ரம் வழக்கில் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளதிலிருந்து இந்த நிதி மூலத்தை கண்டு கொள்ளலாம். இங்கேயும் சில பத்திரிகை உரிமையாளர்களின் பழங்கதைகள் உங்களுக்குத் தெரியும். நேர்மையற்ற வழியில் சம்பாதித்த பணங்களைக் கொண்டு மேலும் சம்பாதிப்பதற்கு ஊடகத் துறையைப் பயன்படுத்தலாம் என்பதனை இவர்கள் நிரூபித்திருக்கிறார்கள்.

ஊடகங்கள் எப்படிப் (பொய்ப்) பிரச்சாரம் செய்கின்றன என்பதனை, நாம் கொஞ்சம் விரிவாக உதாரணங்களுடன் பார்ப்போம். பிரச்சாரங்களில் ஒரு வகை Character Assassination என்று சொல்லப்படும். வேண்டாத ஆட்களைப் பற்றி இல்லாதது பொல்லாததுகளைப் பரப்புவது. செ.இராசதுரை தமிழர் விடுதலைக் கூட்டணியை விட்டு விலகியதும், 'சுதந்திரன்' பத்திரிகை எழுதியது, 'இராசதுரையை மலையாளத்தான் தேடுகிறான்' என்று. முன்பு சுதந்திரன் உதவி ஆசிரியராகவிருநத இராசதுரை, ஒரு மலையாளத்தான் கடையில் குடித்த தேநீருக்குக் காசு கொடுக்கவில்லை அதனால் மலையாளத்தான் காசுக்கு தேடுகின்றான் என்றுதான் சுதந்திரன் சொல்ல வந்தது. இதைத்தான் சொல்வது படக்கூடாத இடத்தில் அடிப்பது என்று (hitting under the belt). இராசதுரையை சொல்லின் செல்வர் என்று புகழ்பாடிய காலத்தில், மலையாளத்தான் ஞாபகம் சுதந்திரனுக்கு வரவில்லை. தமிழ் பேசும் மக்களின் உரிமைக்குரல் சுதந்திரன் செய்த வேலையைத்தான், முன்னாள் தேசிய வீரர்களான கேபிக்கும், கருணாவுக்கும் எதிராக இன்று செய்கிறார்கள்.

1990இல், CNNஇல், குவைத்தைச் சேர்ந்த 15 வயதுச் சிறுமி Nayirah அழுதுகொண்டு, குவைத்தில் வைத்தியாலையில் புகுந்த ஈராக்கிய இராணுவத்தினர் incubators இலிருந்த குழந்தைகளை வெளியிலெடுத்துக் கொலை செய்துவிட்டதாகக் கூறினாள். இதே சிறுமி 1990 ஒக்ரோபர் 10இல் அமெரிக்கக் காங்கிரஸ் விசாரணைக் குழுவிலும் இதே கதையைக் கூறினாள். இவ்வாறுதான் முதலாவது ஈராக்கிய சண்டைக்கு அமெரிக்கா தன்னை நியாயப்படுத்தியது. அந்தச் சிறுமி வேறு யாருமல்ல. அமெரிக்காவிலுள்ள குவைத் தூதுவரின் மகள்தான். இன்னொரு பெயரில் வந்து அந்தப் பொய்க் கதையைக் கூறியது.

1991 யூன் 19. ஈ.பி. ஆர்.எல்.எவ். தலைவர் பத்மநாபாவும் தோழர்களும் சென்னையில் கொலை செய்யப்படுகிறார்கள். உடனே பி.பி.சி உலகச் சேவை, சென்னை உதவிப் பொலிஸ் கமிஷனர் துரையைப் பேட்டி காண்கிறது. டக்ளஸ் தேவானந்தா தான் இந்தக் கொலையைச் செய்திருக்கலாம் என்று துரை சொல்கிறார். பத்மநாபாவையும், தோழர்களையும் புலிகள்தான் கொலை செய்வதற்குரிய நோக்கத்தையும் வசதிகளையும் கொண்டிருந்தார்கள் என்பது இலங்கையைப் பற்றிய சிறிய அறிவுடையவர்களுக்குக் கூடத் தெரிந்திருக்கும் பி.பி.சிக்குத் தெரியாமலிருக்க நியாயமில்லை. பி.பி.சி உண்மையான குற்றவாளிகள் தப்பியோடுவ்தற்கு தமது பங்கைச் செய்தது, அவ்வளவுதான்.

மேலே கூறப்பட்ட உதாரணங்கள், தமது கருத்துக்களை நியாயப்படுத்தி, தாம் வேண்டியவற்றை செய்வதற்கு முழுப் பொய்களைக் கூறுவதற்குக் கூட ஊடகங்கள் தயங்கமாட்டா என்பதனைத் தெரிவிக்கின்றன. பி.பி.சி போன்ற நிறுவனங்களும் இதற்கு விதிவிலக்கல்ல.

ஊடகங்கள் எப்படி உளவியல் ரீதியான யுத்தத்தில் ஈடுபடுகின்றன என்பதற்குச் சில உதாரணங்களைப் பார்ப்போம்.

தேர்தலில் தோற்கப் போகின்றேன் என்ற பயத்தில் மகிந்த இந்தியாவிற்கு ஓடிவிட்டார். மந்திரிமார் விமான டிக்கற்றுடன் ஓடுவதற்குத் தயாராகவிருக்கிறார்கள். இது Srilanka Guardian ஜனாதிபதித் தேர்தலன்று எழுதிய பொய்ச்செய்தி. இதற்கு முதல், தேர்தலில் சரத் பொன்சேகா வெற்றிபெறப் போகிறார் என்று அரசசார்பற்ற நிறுவனங்களும், ஊடகங்களும் கருத்துக்கணிப்புக்களை வெளியிட்டுக் கொண்டிருந்தார்கள். இவையெல்லாம் எவ்வளவு பொய் என்பதனை நாம் பின்னர் கண்டு கொண்டோம். லிபியா பிரச்சினை தொடங்கி சில நாட்களில், பிரித்தானிய வெளிநாட்டமைச்சர் William Hague பி.பி.சி.யில் சொல்கிறார். கடாபி வெனிசுலாவிற்கு ஓடிவிட்டார் என்று. இதுதான் ஊடகங்களின் உளவியல் யுத்தம்.

சில பத்திரிகையாளர்களாவது பரவாயில்லை. தமக்கு வேண்டியவர்களை மேற்கோள் காட்டுகிறார்கள். மனிதவுரிமைவாதிகள் என்று கூறிக் கொள்வோருக்கு அந்தக் கஷ்டம் கூட இல்லை. அவர்களுக்குத் தேவை கற்பனை வளம் மட்டுமே. எதுவித ஆதாரமுமின்றி Sources, Credible Sources, Reliable Sources, Informed Sources, Well- Informed Sources, Insiders, Residents என்று சொல்லி எதனையும் எழுதுவதற்கு அவர்களுக்கு உரிமையிருக்கிறது.

அமெரிக்க மூலங்களைப் (sources) பற்றி கனடிய லிபரல் கட்சித் தலைவர் மைக்கல் இக்னாற்றியெவ் Toronto Star ஆசிரிய பீடத்திற்கு சொல்வதைப் பார்ப்போம்.

On the issue of Iraq, Ignatieff said he has learned in dealing with the United States that 'you don't believe what the American tells you."

"You go into a room with the Americans, they have their sources of information and you had better be darn sure you don't let yourself be persuaded by bad evidence." (Toronto Star, April 28, 2011, Pg 6)

பேரழிவு ஆயுதங்கள் (WMD) ஈராக்கில் இருப்பதாக அமெரிக்கா கூறியதை நம்பி, ஈராக்கிய யுத்தத்தை ஆதரித்து, மைக்கல் இக்னாற்றியெவ் படும் கஷ்டம் அவருக்குத்தானே தெரியும்!

கலைஞரும் ஜெயலலிதாவும் என்ன செய்கிறார்கள்? தமது சொந்தப் பெயர்களிலேயே கலைஞர் ரிவி, ஜெயா ரி.வி என வைத்து பிரச்சாரங்களில் ஈடுபட்டு வருகிறார்கள். கலைஞர் ரிவியில் 'மானாட மயிலாட' என்று ஒரே ஆட்டமும் பாட்டுமாக இருக்கும். ஆரியக் கூத்தாடினாலும் தேர்தல் என்று வந்தவுடன் காரியத்தில் கண்ணாகி விடுவார்கள். 'மானாட மயிலாட' கூட, 'கலைஞர் காப்புறுதித் திட்டம்' என்று கலைஞர் புகழ்பாடும்.

பி.பி.சியும் சி.என்.என். உம், கலைஞர், ஜெயா ரி.வி மாதிரி வெளிப்படையாகப் பிரச்சாரம் செய்யமாட்டார்கள். அவர்கள் தமது கருத்துக்களை தந்திரமாகப் புகுத்தப் பார்ப்பார்கள். தாங்கள் பக்கம் சாராதவர்கள் என்றும், செய்திகளை உண்மையாகவும் நேர்மையாகவும் தருவது போலப் பாசாங்கு செய்வார்கள். ஆனால் அவர்கள் கூட தீர்மானகரமான கட்டம் என்று வரும் போது, தமது உண்மையான நிறத்தைக் காட்டுவதற்கு வெட்கப்படுவதில்லை. குறிப்பாக ஆட்சி மாற்றம் (Regime Change) என்று வரும் போது, அவர்கள் தமது மேற்கத்திய நலன்களைப் பேணுவதற்குரிய பங்களிப்பைச் செய்வதற்குத் தவறுவது இல்லை.

நாம் கவனிக்க வேண்டிய இன்னொரு விடயம், Soft Power. இதில் ஊடகங்கள், மனிதவுரிமை அமைப்புக்கள், அரசசார்பற்ற நிறுவனங்கள் இவற்றிற்கும் மேலாக மேற்கு நாடுகளில் வழங்கப்படும் மேற்படிப்பு வசதிகள் போன்றவை அடங்குகின்றன. முன்னைய காலங்கள் மாதிரி மேற்குநாடுகள் போர்க்கப்பல்களை அனுப்பி தாம் நினைத்ததைச் சாதிக்க முடியாது.

பின்லாடனுக்கு அமெரிக்க இரட்டைக் கோபுரங்களை அழிப்பதற்கு 500,000 US$ செலவேற்பட்டது. ஆனால் அமெரிக்கா பின்லாடனை பிடிப்பதாக கூறிச்செய்யும் யுத்தங்களுக்கு செய்யும் செலவு பல ஆயிரம் கோடி. வியட்னாம், ஆப்கானிஸ்தான், ஈராக் கற்றுக் கொடுத்த பாடங்கள் என்னவென்றால், இவையெல்லாம் மிகவும் செலவான விடயங்கள். Soft Power என்பது மிகவும் செலவு குறைந்த விடயம். அத்துடன் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய விடயம்.

ஆப்கானிஸ்தானிலும் ஈராக்கிலும் மேற்குநாடுகள் யாரை தலைவர்களாகத் தெரிந்திருக்கிறார்கள்? மேற்கு நாடுகளில் படித்தவர்கள் அவர்கள். ஐவரிகோஸ்டைப் பாருங்கள்! உலகவங்கியில் வேலை செய்தவரைப் பதவியில் அமர்த்துவதற்கு பிரெஞ்சுப் படைகள் துடித்தன. ஊடகங்கள், மனிதவுரிமை அமைப்புக்கள், அரசார்பற்ற நிறுவனங்கள் இவையெல்லாம் ஒரு மறைமுக வேலைத்திட்டத்துடன் வேலை செய்கின்றன. இவர்களை அமெரிக்க டொலர்களுக்கு மனிதவுரிமை அறிக்கை எழுதும் மனிதவுரிமைவாதிகள் என்று கவிஞர் வாலி மொழியில் கூறிக் கொள்ளத் தோன்றுகிறது. இவர்கள் ஒருவரையொருவர் மேற்கோள் காட்டுகிறார்கள் ஒருவருக்கு ஒருவர் பரிசு கொடுக்கிறார்கள். இவர்களைப் பிரித்துப் பார்க்கக் கூடாது. இவர்கள் ஒரு குடும்பம். ஒருவரின் கண்ணில் நீர்வழிந்தால் மற்றவர்களுக்கு உதிரம் கொட்டும்.

மேலே கூறிய அமைப்புக்களில், நல்ல நோக்கம் கொண்ட நல்ல மனிதர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள் சிலர் நல்ல வேலைகளையும் செய்கிறார்கள் என்பதை மறுப்பதற்கு இல்லை. இந்த ஊடங்களில் ஜப்பான் சுனாமி போன்ற செய்திகளும் வரத்தான் செய்கின்றன. அத்துடன் இவை மேற்கு நாடுகளையும் இடைக்கிடை செல்லமாக அடிக்கத்தான் செய்கிறார்கள். HRW உம் AI உம் அமெரிக்காவைத் தாக்கியும் எழுதும். ஆனால் இவையெல்லாம் யானையில் இலையான் கடித்த மாதிரி.

அமெரிக்காவிற்கெதிராகப் பொருளாதாரத் தடையை யாராவது நினைத்துப் பார்க்க முடியுமா? ஒபாமாவிற்கு எதிராக போர்க்குற்றம் சுமத்த முடியுமா? அல்லது பிரயாணத்தடை போடமுடியுமா? அமெரிக்காவிற்குத் தெரியும் அமெரிக்காவைப் பற்றி யாராவது தேவையான அளவு எழுதிவிட்டுப் போகட்டும், எழுதுகிறவர்களுக்குப் பேப்பர்தான் ந்ஸ்டம். இந்த அமைப்புக்கள் இப்படி இரண்டு பக்கத்தைப் பற்றி எழுதி, தமது நம்பகத்தன்மையைக் கூட்டிக் காட்டிக் கொள்வார்கள். ஆனால் சுண்டெலிகளுக்கு (சிறிய நாடுகளுக்கு) சீவன் போறதைப் பற்றி இவர்களுக்கு கவலையில்லை.

ஊடக சுதந்திரம் உட்பட மனித உரிமைகளைப் பற்றிப் பேசி, மற்றைய நாடுகளை வெருட்டும் வேலையை மேற்கத்திய நாடுகள் செய்து வருகின்றன. சீனா, இந்தியா போன்ற பெரிய நாடுகளிடம் மனித உரிமை பேசி வாலாட்ட முடியாது. ஆனால் சிறிய நாடுகளுக்கு அவர்களால் கரைச்சல் கொடுக்க முடியும். இதற்குத்தான் ஊடகங்களையும், அரசசார்பற்ற நிறுவனங்களையும், மனிதவுரிமை அமைப்புக்களையும், தமது நாடுகளில் படித்தவர்களையும் அவர்கள் பயன்படுத்திக் கொள்கிறார்கள். ஆங்கிலத்தில் ஒரு பழமொழியுண்டு. "He who pays the piper calls the tune". நீங்கள் காசுகொடுத்து சின்னமேளம் பிடித்தால், நீங்கள் கேட்கின்ற பாட்டுக்கு அவர்கள் ஆடத்தானே வேண்டும்?

இன்று ஊடக சுதந்திரம் பற்றி நிறையப் பேசப்படுகின்றது. இதற்காக RSF, CPJ என்று எத்தனையோ அமைப்புக்கள். இவர்களது நோக்கம், நேர்மை பற்றி ஒரேயொரு பரீட்சை வைத்து பார்ப்போம். புலம்பெயர் தமிழர்கள் மத்தியில், ஊடகவியலாளர்கள் கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள், ஊடகவியலாளர் தாக்கப்பட்டிருக்கிறார்கள். பத்திரிகைகள் பலவந்தமாக மூடப்பட்டன. வானொலி நிலையங்கள் கையகப்படுத்தப்பட்டன. அதாவது புலம்பெயர் தமிழர்கள் ஒப்பாரி வைக்கக் கூட உரிமையில்லாமலிருந்தார்கள். இந்த அடாவடித்தனங்களுக்கு எதிராக மனிதவுரிமை அமைப்புக்களோ அல்லது ஊடக அமைப்புகளோ எப்போதாவது குரல் கொடுத்ததுண்டா? இதில் சம்பந்தப்பட்டவர்கள் தண்டிக்கப்பட்டிருக்கிறார்களா? இதிலிருந்து இந்த அமைப்புக்களின் நோக்கம்

(13ஆம் பக்கம் பார்க்க)

# ஹிலாரி கிளிங்டன் பாகிஸ்தான் விஜயம் சி.ஐ.ஏ. ஆய்வுக்கு இஸ்லாமாபாத் அனுமதி

(வொஷிங்ரன்)

பாகிஸ்தானில் ஒசாமா பின்லேடன் தங்கியிருந்த பிரதேசத்தை அமெரிக்க உளவு நிறுவனம் ஆய்வு செய்வதற்கு பாகிஸ்தான் அனுமதி வழங்கியுள்ளது.

இந்தச் சூழலில் அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஹிலாரி கிளிங்டன் பாகிஸ்தானுக்கு நேற்றுத் திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்டிருக்கிறார்.

அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் ஹிலாரி கிளிங்டன் பாகிஸ்தானுக்கு திடீர் விஜயம் மேற்கொண்டார். இரு நாடுகள் இடையே நிலவும் கசப்புணர்வை தணிப்பதற்காக அவர் இந்தப் பயணத்தை மேற்கொண்டார்.

பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத்திற்கு 30 மைல் தொலைவில் உள்ள அபோதாபாத் நகரில் அல்கொய்தா தீவிரவாதத் தலைவர் பின்லேடன் கொல்லப்பட்டார். இந்த மே மாதம் 2ஆம் திகதி அமெரிக்கா நடத்திய இந்தத் தாக்குதலைத் தொடர்ந்து, பாகிஸ்தானுக்கும், அமெரிக்காவிற்கும் சமூக உறவில் விரிசல் ஏற்பட்டது.

பாகிஸ்தானில் முகாமிட்டுள்ள அமெரிக்க வீரர்கள் உடனடியாக வெளியேற வேண்டும் என பாகிஸ்தான் அரசு அறிவுறுத்தி உள்ளது. அமெரிக்காவின் அத்து மீறல்களை பொறுத்துக் கொள்ள முடியாது என பாகிஸ்தான் நாடாளுமன்றத்திலும் எம்.பி.க்கள் எச்சரித்தனர்.

இந்த நிலையில், அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் ஹிலாரி கிளிங்டன் பாகிஸ்தானுக்கு அவசர பயணத்தை மேற்கொண்டுள்ளார்.



அமெரிக்காவின் இராணுவ தலைமையகமான பென்டகன் பாகிஸ்தானின் கோரிகையை ஏற்றுத் தமது துருப்புகளை பாகிஸ்தானில் இருந்து குறைப்பதாக தெரிவித்து உள்ளது.

பென்டகன் அறிவிப்பு வெளியான மறுநாளே ஹிலாரி கிளிங்டன் பாகிஸ்தானுக்கு அவசரப் பயணம் மேற்கொண்டு இருக்கிறார். உலக நாடுகளை அச்சுறுத்திய பின்லேடன் அபோதாபாத் நகரில் பதுங்கி இருந்த விபரம் பாகிஸ்தானில் சில முக்கிய நபர்களுக்கு தெரியும் என அமெரிக்கா தரப்பில் சந்தேகிக்கப்படுகிறது.

பாகிஸ்தான் ஜனாதிபதி ஆசிப் அலி ஜர்தாரி மற்றும் பாகிஸ்தான் ராணுவ தளபதி அஸ்பக் கயானி ஆகியோரை சந்திக்க ஹிலாரி பாகிஸ்தான் வந்துள்ளார். அவருடன் அமெரிக்காவின் கூட்டுப்படை தலைவர் அட்மிரல் மைக் முலனும் வந்துள்ளார்.

# பயணத்துக்குப் பின் வீஸா நடைமுறை இடைநிறுத்தம்

(கொழும்பு)

இந்திய பயணிகளுக்காக இதுவரையில் வழங்கப்பட்டு வந்த பயணத்தின் பின்னரான இலவச வீஸா சலுகை நீக்கப்படவுள்ளதாக த ஹிந்துஸ்தான் டைம்ஸ் இணையத்தளம் தெரிவித்துள்ளது.

இதன்படி, இந்தியாவில் இருந்து இலங்கை வர விரும்பும் பயணிகள், இனிவரும் காலங்களில் இணையத்தளத்தின் ஊடாக வீஸாக்களுக்கு விண்ணப்பிக்க வேண்டும் என தெரிவிக்கப்படுகிறது. இந்த நடைமுறை எதிர் வரும் ஆகஸ்ட் மாதம் முதல் அமுலாக வுள்ளது. குடிவரவு கட்டுப்பாட்டு பணிப்பாளர் சூலாநந்தன பெரேரா இதனை தெரிவித்துள்ளார்.

இந்திய பயணிகள் தவிர, ஏனைய 78 நாடுகளின் பயணிகளும் இந்த நடைமுறையை பின்பற்ற வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. எனினும், சிங்கபூர் மற்றும் மாலைத் தீவு நாடுகளில் இருந்து வருகின்ற பயணிகளுக்கு மாத்திரமே பயணத்தின் பின்னரான வீஸா சலுகை வழங்கப்படும் என பெரேரா தெரிவித்துள்ளார்

## ஐம்பதாவது அகவையில் ஆறுதிருமுருகன்

(யாழ்ப்பாணம்)

சொற்பொழிவுத் துறையில் தனக்கென முத்திரை பதித்து பணியாற்றும் செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன் இன்று பொன்விழாக்காண்கிறார்.

அவர் தெல்லிப்பளை துர்க்கை அம்பாள் ஆலய பரிபாலன சபைத் தலைவர், சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி முதல்வர், சிவபூமி முதியோர் இல்லம் மற்றும் சிவபூமி மன விருத்திப் பாடசாலைகளின் இயக்குனர். இப்படியாகப் பல்வேறு நிலைகளில் நின்று பணியாற்றி வருபவர்.

## ஆங்கில எழுத்தாக்கம் கோட்டமட்ட போட்டிகள்

(அச்சுவேலி)

யாழ்.கல்வி வலயத்துக்குட்பட்ட கோப்பாய் கோட்டமட்ட பாடசாலைகளுக்கிடையிலான ஆங்கில தின எழுத்தாக்கப் போட்டிகள் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. (03)

# சட்டவிரோத மது விற்பனை மூவருக்கு அபராதம் விதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபை எல்லைக்குட்பட்ட பகுதியில் அனுமதிப்பத்திரமின்றி மதுபானம் விற்பனை செய்த மூவருக்கு யாழ். நீதிவான் நீதிமன்றில் 18ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

யாழ். பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனை நடவடிக்கையின்போது அனுமதிப் பத்திரமின்றி மதுபானம் விற்பனை செய்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இவர்களுக்கெதிராக யாழ். நீதிவான் நீதிமன்றில் நேற்று முன்தினம் வழக்குத் தாக்கல் செய்தபோது இவ் வழக்கை விசாரணை செய்த நீதிவான் இம் மூவருக்கும் தலா 6 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து தீர்ப்பளித்தார்.

## இந்து பூசகர்களுக்கு விசேட பயிற்சி

(கொழும்பு)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரனையுடன் வருடந்தோறும் நடாத்தப்படும் அந்தணர் அல்லாத இந்துப் பூசகர்களுக்கான பயிற்சி இவ்வாண்டும் எதிர்வரும் ஜுலை மாதத்தில் நடாத்தப்படவுள்ளதாக இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் சாந்தி நாவுக்கரசன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு நாவற்குடா கலாசார நிலையத்தில் இரண்டு வாரங்களுக்கு நடைபெறவுள்ள பயிற்சியில் கலந்துகொள்ளும் அந்தணர் அல்லாத இந்துப் பூசகர்களுக்கு தமிழகக் கிராமக் கோயில் பூஜாரிகள் பேரவையைச் சேர்ந்த விரிவுரையாளர்களால் விரிவுரை வழங்கப்படவுள்ளது.

## யாழ்.மக்களின்...

கெ.விலேகொட, ஜனநாயக இடதுசாரி முன்னணியின் உப பொருளாளர் ராஜி பாஸ்கரன், அம்பாறை மாவட்ட அமைப்பாளர் கலாநிதி வை.எல்.என். கைதர் ஆகியோர் நாளை யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளதாக அமைச்சின் ஒருங்கிணைப்பாளர் தமக்கு அறிவித்துள்ளதாக யாழ்.அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

யாழ்.பாடி விருந்தினர் விடுதியில் நாளையதினம் முற்பகல் 11.00 மணிக்கு மக்கள் சந்திப்பும், பத்திரிகையாளர் மகாநாடும் நடைபெறவுள்ளது.

எனவே, அனைத்து பொது நிர்வாகசபை உறுப்பினர்களையும் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

# மக்கள் முன்னிலையில் தூக்குத் தண்டனை

## ஈரான் அரசு நடவடிக்கை

(ஈரான்)

ஈரானில் பல்வேறு குற்றங்களில் ஈடுபட்ட 5 குற்றவாளிகள் பொது இடத்தில் தூக்கி லிடப்பட்டுள்ளனர். கொலை, பாலியல் வல்லுறவு, கடத்தல் உள்ளிட்ட குற்றச் செயல்களில் இவர்கள் ஈடுபட்டுள்ளது நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

ஈரானின் டெஹ்ரானில் உள்ள ஷிராஸ் நகரில் வைத்தே நேற்று முன்தினம் இவர்களுக்கு இத்தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது. அந்நாட்டில் இத்தகைய குற்றங்களுக்கு அதிகபட்சமாக தூக்குத் தண்டனையே வழங்கப்பட்டு வருகின்றது. இதுவும் பல சமயங்களில் பொது மக்கள் முன்னிலையிலேயே இடம்பெற்று வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

# பலவந்தமான பாலியல் தொழில் பெண் பொலிஸ் அதிகாரி கைது

(கொழும்பு)

யுவதிகளை பலவந்தமான முறையில் பாலியல் தொழிலில் விடுதிகளில் ஈடுபடுத்திய முன்னாள் பெண் பொலிஸ் உத்தியோகத்தர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பலவந்தமாகத் தங்க வைத்து யுவதிகள் பாலியல் தொழிலில் ஈடுபடுத்தப்பட்டதாகவும், கொழும்பு மற்றும் பேலிய கொட பிரதேசங்களில் இவ்வாறு பெண்கள் பாலியல் தொழிலில் ஈடுபடுத்தப்பட்டதாகவும் தெரிய வந்துள்ளது.

நுகேகொடை சிறுவர் மற்றும் மகளிர் பொலிஸாரினால் களனி பிரதேசத்தில் வைத்து குறித்த முன்னாள் பெண் பொலிஸ் உத்தியோகத்தர் கைதுசெய் யப்பட்டுள்ளார்.

பல பிரதேசங்களைச் சேர்ந்த பெண்களை விடுதிகளுக்கு அழைத்துச் சென்று அச்சுறுத்தல் விடுத்து இவ்வாறு பலவந்தமாக பாலியல் தொழிலில் ஈடுபடுத்தியுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

இவ்வாறு பாதிக்கப்பட்ட சில யுவதிகளிடம் பொலிஸார் வாக்கு மூலங்களை பதிவு செய்துள்ளனர்.

பணி இடைநிறுத்தம் செய்யப்பட்ட பெண் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரே இவ்வாறு குற்றச் செயலில் ஈடுபட்டதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

# முன்னாள் அமைச்சர் இராசதுரை மட்டக்களப்புக்கு விஜயம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு தொகுதியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் பிரதேச அபிவிருத்தி இந்து கலாசார அமைச்சருமான செல்லையா இராசதுரை நீண்ட காலத்திற்குப் பின்னர் மட்டக்களப்புக்கு விஜயம் செய்துள்ளார். மட்டக்களப்பிலுள்ள மதத் தலைவர்கள், சமூகப் பிரமுகர்கள் மற்றும் தனது கடந்த கால ஆதரவாளர்களையும் சந்தித்து தற்போதைய நிலைமைகள் குறித்து கலந்துரையாடினார். அத்துடன் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களையும் சந்தித்து சமகால அரசியல் நிலைமைகள் குறித்து கலந்துரையாடினார். மட்டக்களப்பிலுள்ள கொத்துக்குளம் முத்துமாரியம்மன் ஆலயம் சென்று பூஜையில் கலந்து கொண்டதுடன் இந்தியாவிலிருந்து கொண்டு வந்த பட்டுச் சேலையை அம்பாளுக்கு வழங்கினார். அரசடிப் பிள்ளையார் ஆலயத்தில் நடைபெற்ற பூஜை வழிபாட்டிலும் பங்குகொண்டார்.


வாழ்க வளமுடன்

தினமுரசின் பிறந்த நாள் வாழ்த்துக்கள்

ஆறாவது அகவையில்



பெயர் : குணசிங்கம் ஜயந்தினி

முகவரி : 308, பருத்தித்துறை வீதி, நல்லூர்.

HAPPY BIRTHDAY

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

HAPPY BIRTHDAY






# யாழ்ப்பாணத்திற்கு...

எண்ணிக்கையில் கொழும்புக்குப் பறப்பதில்லை.

புதிய ஒப்பந்தம், இந்திய விமான நிறுவனங்கள் அதிக எண்ணிக்கையிலான விமானங்களை இயக்குவதற்கு அனுமதிக்கின்றது. அத்துடன வட மாகாணத்திலுள்ள பலாலி விமான நிலையத்துக்கு புதிய விமான சேவைகளைத் தொடங்கவும், இந்த ஒப்பந்தம் இந்திய விமான நிறுவனங்களுக்கு வழியேற்படுத்திக் கொடுக்கின்றது.

# சர்வதேச அழுத்தங்களை சந்திக்கும் பான் கீ மூன்



(கொழும்பு)

சர்வதேச ரீதியான யுத்தக் குற்றச்சாட்டுகள் தொடர்பிலான வழக்குகளில், ஐக்கிய நாடுகளின் பொதுச் செயலாளர் பான் கீ மூன், தொடர்ந்தும் அழுத்தங்களுக்கு உள்ளாகியுள்ளதாக இன்னர் சிட்டி பிரஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கையின் யுத்தக் குற்றச்சாட்டுகள் தொடர்பில் ஆராய்வதற்காக அவர் நியமித்த நிபுணர்கள் குழுவின் அறிக்கை, இலங்கையில் பொதுவாக புறக்கணிக்கப்பட்டுள்ளது..

இதனால் அது தொடர்பில் பல்வேறு அழுத்தங்களை பான் கீ மூன் சந்தித்து வருகிறார். இதற்கிடையில் கிரிகிஸ்தான் நாட்டில் கடந்த வருடம் இடம்பெற்ற யுத்தத்தில், குற்றங்கள் இடம்பெற்றதாக கூறி, பிரபல எழுத்தாளர் கிமோ கல்ஜுனேனை அறிக்கை ஒன்றை வெளியிட்டதைத் தொடர்ந்து அவர் அந்த நாட்டினுள் பிரவேசிப்பதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பிலான தீர்மானம் ஒன்று கிரிகிஸ்தான் நீதிமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. இது தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபையின் பேச்சாளர் மார்ட்டின் நெசர்கீயிடம் இன்னர் சிட்டி பிரஸ் கேள்வி எழுப்பிய வேளையில், கிமோவின் அறிக்கை ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கை ஆகாது என தெரிவித்தார்.

எனினும் இந்த அறிக்கை பயனபடக்கூடியது என்று அவர் தெரிவித்தார். இதன்போது குறித்த அறிக்கையின் அடிப்படையில் கிரிகிரிகிஸ தானுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவோ, அல்லது அங்கு இடம்பெற்ற யுத்தக்குற்றங்கள் தொடர்பில் எந்த நடவடிக்கையும் ஐக்கிய நாடுகள் சபை மேற்கொள்ளாதா? என்று இன்னர் சிட்டி பிரஸ் கேள்வி எழுப்பியது.

இதேபோன்ற செயற்பாட்டினையே இலங்கையில் இடம்பெற்ற யுத்தக் குற்றங்கள் தொடர்பிலும் பான் கீ மூன் வெளிப்படுத்தி வருகிறார் என்று இன்னர் சிட்டி பிரஸ் நேற்றைய செய்தியாளர் சந்திப்பின்போது சுட்டிக் காட்டியது.

# வெள்ள அனர்த்த பாதுகாப்பு கொழும்பில் புதிய செயற்றிட்டம்

## உலக வங்கி நிதியுதவி

(கொழும்பு)

கொழும்பு நகரை வெள்ள அனர்த்தத்தில் இருந்து பாதுகாக்க உலக வங்கியின் உதவியுடன் மூன்று ஆண்டு செயற்றிட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப் படவுள்ளது.

இத்திட்டத்தின் முக்கிய அம்சமாக கொழும்பு மாவட்டத்தின் நீர் வடிகாலமைப்பை சீர் செய்யும் வேலைத்திட்டத்துக்காக, உலக வங்கி 150 மில்லியன் அமெரிக்க டொலர்களை பயன்படுத்த உத்தேசித்துள்ளது. கொழும்பு மாநகரின் உட்கட்டுமான மற்றும் சுத்திகரிப்பு நடவடிக்கைகளுக்காக இந்த நிதி பயன்படுத்தப்படவுள்ளது. இந்த வருடத்தின் இறுதியில் ஆரம்பமாகவுள்ள இந்த வேலைததிட்டம், எதிர்வரும் மூன்று வருடங்களில் நிறைவு செய்யப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது. வெள்ள நிலை ஏற்படும்போது நகரில் நீர் தேங்கி நிற்காத வகையில், வடிகாலமைப்புகளைச் சீர்செய்யும் முக்கிய நோக்கில் இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

# கனிமொழி மீதான வழக்கில் காங்கிரஸ் தலையிடமாட்டாது

## மணிதிவாரி உறுதிபடத் தெரிவிப்பு

(புதுடில்லி)

சட்டம் தன் கடமையைச் சரிவரச் செய்கின்றது. இதில் எவ்வித குறுக்கீட்டிற்கும் இடமில்லையென கனிமொழி எம்.பி. விவகாரம் தொடர்பாகக் காங்கிரஸ் தலைவர்களில் ஒருவரான மணிதிவாரி தெரிவித்தார்.


ஸ்பெக்ட்ரம் அலைவரிசை ஊழல் தொடர்பாக சி.பி.ஐ. தாக்கல் செய்யப்பட்ட குற்றப் பத்திரிக்கையின் அடிப்படையில் கருணாநிதியின் மகளும், எம்.பியுமான கனிமொழி கைது செய்யப்பட்டுள்ளது தெரிந்ததே..

பிணை கேட்டு டில்லி உயர் நீதிமன்றில் மேல்முறையீட்டு மனுதாக்கல் செய்துள்ள நிலையில் தி.மு.கவுக்கும், காங்கிரசுக்கும் இடையே இருந்து வரும உறவு நலிவடையும் என்று ஒரு தரப்பில் கூறப்பட்டு வருகிறது. ஆனால் அதற்கான சாத்தியமே இல்லை என்று இரு கட்சியினரும் உறுதியாகக் கூறி வருகினறனர்.

இது குறித்து காங்கிரஸ் செய்தி தொடர்பாளர் மணிதிவாரி கூறுகையில்,

கனிமொழி எம்.பி. சிறையில அடைக் கப்பட்டுள்ளதால் அவரது தந்தை கருணாநிதி மிகுந்த மன வேதனைக்கு ஆளாகி உள்ளார் என்பதை நாங்கள் உணராமல் இல்லை. ஆனால் அதே நேரத்தில் எந்த வழக்கிலும் நாங்கள் குறுக்கிடமாட்டோம்.

சட்டம் தன் கடமையை செய்யும். சுரேஷ் கல்மாடி விவகாரம் என்றாலும் சரி, அல்லது வேறு எந்த விவகாரம் ஆனாலும் சரி சட்டத்தின் செயல்பாட்டில் நேரடியாகவோ, மறைமுகமாகவோ நாங்கள் தலையிடமாட்டோம். இவ்வாறு மணிதிவாரி கூறினார்.



# சிங்கப்பூர் செல்கிறார் ரஜனி



நடிகர் ரஜினி காந்த் வெள்ளியிரவு சிங்கப்பூர் செல்கிறார். அங்குள்ள பிரபல தேசிய சிறுநீரக பவுண்டேஷன் மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்படவுள்ளதாகக் கூறப்படுகிறது. ரஜினியின் மனைவி லதா மற்றும் மகள் ஐஸ்வர்யாவும் உடன் செல்கின்றனர்.

61 வயதான நடிகர் ரஜினிகாந்த் கடந்த மே 13 அன்று மூச்சுத் திணறல் மட்டும் காய்ச்சல் காரணமாக அன்று போரூர் ராமச்சந்திரா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். ஒரு கட்டத்தில் தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டு, டயாலிசிஸ் எனும் ரத்த சுத்திகரிப்பு செய்யப்பட்டதாகவும் மருத்துவர்கள் தெரிவித்தனர்.

அவருக்கு சிறுநீரகக் கோளாறு இருப்பதாக மருத்துவர்கள் தெரிவித்தனர். ஆனால் சிகிச்சைக்குப் பிறகு உடல் நிலையில் முன்னேற்றம் காணப்பட்டதாகவும் சாதாரண பிரிவிற்கு மாற்றப்பட்டுவிட்டதாகவும் மருத்துவமனை வட்டாரங்கள் கூறிவந்த நிலையில் அவர் சிங்கப்பூர் செல்கின்றார்.

# யாழ்.கல்விப் பணிப்பாளர் ஓய்வு புதிய கல்விப்பணிப்பாளர் யார்?

வலயக்கல்விப் பணிப்பாளர் பதவியில் இருந்து ஓய்வு பெறுகிறார் வேதநாயகம்

யாழ்.வலயக்கல்விப் பணிப்பாளர் அ.வேதநாயகம் தமது பதவியில் இருந்து ஓய்வு பெறு கிறார்.

40 வருடகால தமது கல்விச் சேவையை நிறைவு செய்து, எதிர்வரும் 2ஆம் திகதி அவர் ஓய்வுபெறுகிறார்.

யாழ்.வலயக்கல்வியின் அடுத்த பணிப்பாளர் யார் என வேதநாயகத்திடம் வினவிய போது, யாழ்.வலயக்கல்விப் பணிமனையின் அடுத்த பணிப்பாளர் யார் என இன்னும் தீர்மானிக்கப்படவில்லை என்று கூறினார்.

வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறியின் ஒழுங்குபடுத்தலில் நாளை கூட்டம் ஒன்று நடைபெறவுள்ளதாகவும், அந்தக் கூட்டத்தின் போது யாழ்.வலயக் கல்விப் பணிமனையின் அடுத்த பணிப்பாளர் யார் என்று தெரியும் என யாழ் வலயக்கல்விப் பணிப்பாளர் அ.வேதநாயகம் தெரிவித்தார்.

## மின்வெட்டு

(யாழ்ப்பாணம்)

உயரழுத்த மின் மார்க்கங்களில் கட்டமைப்பு வேலைகள் செய்யும் பொருட்டு 29.05.2011 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை சுன்னாகம், குப்பிளான், மயிலங்காடு, ஏழாலை, காங்கேசன்துறை, உயர் பாதுகாப்பு வலயப்பகுதி ஆகிய இடங்களில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

# மது பாவனையால் ஏற்படும் தீமைகள்; விழிப்புணர்வை ஏற்படுத்தக் குழு அமைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் மது பாவனை, புகைத்தல் போன்றவற்றின் காரணமாக ஏற்படும் தீமைகள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதுடன் பொது இடங்களில் புகைத்தல் மதுபானம் அருந்துதலை தடைசெய்யும் தீவிர தடுப்பு நடவடிக்கை எடுக்கப் பட்டுவருவதாக யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இதற்கென தமது தலைமையிலான குழு ஒன்று செயற்பட்டு வருவதாகவும் அக்குழு மாதாந்தம் கூடி மேற்குறித்த நடவடிக்கைகளை அமுல்படுத்துவதாக அவர் குறிப்பிட்டார். இவ்வாறான குழுக்கள் மாவட்டங்கள் தோறும் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் தலைமையில் செயற்பட்டு வருவதாகவும் தெரிவித்த அவர் 21 வயதிற்கு குறைந்தவர்களின் மதுபாவனை, புகைப்பிடித்தல் தடைச்சட்டத்தை இறுக்கமாக அமுல்ப்படுத்தி வருவதாகவும் குறிப்பிட்டார்.

அத்துடன் எதிர்வரும் 31ஆம் திகதி சர்வதேச புகைத்தல் ஒழிப்பு தினத்தையொட்டி பல்வேறு நிகழ்ச்சிகளை மாவட்டத்தின் பல பகுதிகளிலும் ஒழுங்கு செய்திருப்பதாகவும் தெரிவித்தார். (பா)

# நிந்தவூரில் அபிவிருத்தி

கப்றுக்க புறவற அபிவிருத்தி திட்டத்தின் முதலாவது தெரிவில் அம்பாறை மாவட்டத்திலுள்ள நிந்தவூர் பிரதேச செயலகப் பிரிவு தெரிவு செய்யப்பட்டுள்ளதாக நிந்தவூர் பிரதேச செயலாளர் ஐ.எம்.ஹனிபா தெரிவித்தார்.

நாளை சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்தில் இத்திட்டம் தொடர்பான ஆரம்ப அறிவூட்டல் கூட்டம் நடைபெறவுள்ளது

இத்திட்டம் தொடர்பான ஆரம்ப அறிவூட்டல் கூட்டத்தில் தெங்கு மற்றும் மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சர் ஜகத் புஸ்பகுமார, உணவு போ்க்கு நடவடிக்கை சிரேஸ்ட அமைச்சர் பி.தயாரத்ன, திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான ஹஸனலி, பைஸால் காசிம், நிந்தவூர் பிரதேச செயலக உதவி திட்டமிடல் பணிப்பாளர் எம்.ஜெளபர் உட்பட மேலும் பலர் கலந்து கொண்டு இத்திட்டம் தொடர்பாகவும், அபிவிருத்தி தொடர்பாகவும் ஆராயவுள்ளனர்.

# காணிகளுக்கு எல்லை நிர்ணயம் யாழ்.நகர முதல்வரிடம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

மீள்குடியேறிய வசந்தபுரம் மக்களுக்குரிய காணிகளை விரைவில் எல்லை நிர்ணயம் செய்துகொடுத்தால் அவர்கள் தமது எல்லைகளில் வேலி அமைத்துப் பாதுகாப்பாக வாழ்வார்கள் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை சேர்ந்த யாழ்.மாநகசபை உறுப்பினர் அந்தோனிப்பிள்ளை மேரியம்மா யாழ்.மாநகர மேயர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசாவிடம் மகஜர் ஒன்ற்றை சமர்ப்பித்துள்ளார்.

யாழ்.மாநகர சபையில் நேற்றுக்காலை நடைபெற்ற மாதாந்த கூட்டத்தின்போது அவர் இந்த மகஜரைக் கையளித்தார்.

## சிகரம் சிறப்பிதழ்

சிகரம் ஊடக இல்ல மாணவர்களின் வெளியீடான சிகரம் தொடு இளையோர் மாதாந்த சஞ்சிகையின் ஏப்ரல் மே இதழ் யாழ்.இசை விழா சிறப் பிதழாக வெளிவந்துள்ளது.

2010ஆம் மே 9ஆம் திகதி ஆரம் பித்த சிகரம் ஊடக இல்லம் தமது முதலாவது ஆண்டை நிறைவு செய்திருப்பதையொட்டிய விசேட இதழாகவும் இந்த இதழ் அமைந்துள்ளது.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 மே 28 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.